கோகுலம்

GOKULAM

டிசம்பர் '88 ரூ. 3/-




"தினமும் மூணு வேளை கேரமில்க் கொடுங்க, சரியாயிடும்!"
Parry's
கேரமில்க்
CARAMILK
"குழந்தைகளே... இன்னிக்கு கேரமில்க் சாப்பிட்டீங்களா!"
PARRYS
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
Parry's
The King of Sweets
HTA 7077



உயிர்களிடத்தில் அன்புவேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

— பாரதியார்.

கோகுலம்

1988 டிசம்பர் மாத இதழ்
மலர் : 6 இதழ் : 11
தனிப் பிரதி ரூ. 3/—
ஆண்டுச் சந்தா ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.



புகைப்படம்: கே. ராமசாமி.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அன்புடன் தீபாவளி வாழ்த்து அனுப்பிய அனைவருக்கும் மனங்கனிந்த நன்றி.

தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல், புத்தாண்டு — இப்படிப்பட்ட சமயங்களில் உங்களில் சிலர் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் விலையிலுள்ள வாழ்த்து அட்டைகளை வாங்கி அனுப்புகிறீர்கள். இதிலே ஒரு வேடிக்கை. பொங்கல் வாழ்த்து என்றால், அதில் பயிர் வளர உதவிய சூரியனோ, பாடுபட்டுப் பயிர் வளர்த்த உழவரோ, வயலை உழுத மாடோ அல்லது பொங்கலுடன் தொடர்புடைய படமோ பல வாழ்த்து அட்டைகளில் இருப்பதில்லை. பொங்கல் விழாவிற்குச் சம்பந்தமில்லாத ஒரு திரைப்பட நடிகர் அல்லது நடிகையின் படம் இருக்கும். வாழ்த்து அட்டைகளின் விலையும், தபால் கட்டணமும் அதிகமாக இருக்கும் இக் காலத்தில் இப்படி அதிகச் செலவு செய்வது அவசியமா?

ஒரு சாதாரண அஞ்சல் அட்டையில் உங்கள் வாழ்த்தை எழுதி உங்களுக்கு வேண்டியவர்களுக்கு அனுப்பினாலே போதுமே! படம் வரையத் தெரிந்தவர்கள், அந்த விழா தொடர்பான ஒரு படத்தை அந்த அட்டையில் வரைந்து வாழ்த்துடன் அனுப்பலாம். நம் வாழ்த்தையும் அன்பையும் தெரிவிக்க இது போதாதா? நன்றாக யோசித்துப் பாருங்கள்.

'குறளில் கூறப்பட்டுள்ள உயர்ந்த குணங்களுடன் விளங்கும் மாணவர்களை ஆண்டு தோறும் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்கிப் பாராட்டலாமே' என்று சென்ற அக்டோபர் இதழில் நாம் எழுதியிருந்ததை வரவேற்றுப் பல சிறுவர், சிறுமியரும் பெற்றோர்களும், சில பள்ளித் தலைமை ஆசிரியர்களும் எழுதியிருக்கிறார்கள். பள்ளிகள் இந்த யோசனையை ஏற்று, அதன்படி செய்தால், பல நல்ல மாணவர்கள் நிச்சயம் கிடைப்பார்கள். அவர்களால், நல்லவர்கள் தொகை பெருகும்; நாடு நலம் பெறும்.

சென்ற இதழில், குலபதி டாக்டர் பாலகிருஷ்ண ஜோஷி அவர்கள் எழுதியுள்ள 'என் குழந்தைப் பருவம்' கட்டுரையைப் படித்து விட்டு, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், அவரிடம் படித்து இன்று நல்ல நிலைமையில் உள்ள பலர், அவரைத் தெய்வமாக மதித்து எழுதியிருக்கிறார்கள்.

குலபதி அவர்களைப் போன்ற நல்லாசிரியர்களும், நன்றியுள்ள மாணவர்களும் மேன்மேலும் பெருக வேண்டும் என்பதே நம் ஆசை.


— அழ. வள்ளியப்பா —

இந்த இதழ் எழுத்தாளர்கள்



மதி ஒளி

மாயவன்



வண்ண அட்டைப்படம்: ஏ.வி. பாஸ்கர்

பிருந்தாவனக் கவிஞர்கள்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்




கோவி. மருடேகவரன்.



க. மனோகர்



எஸ். நாகூர் ரோஜா



ஆறு. அண்ணாதுரை

அடுத்த இதழில்



மகத்தான பயணம் செய்த மார்க்கோபோலோ

16 பக்க வண்ணப் படக் கதை

கதை - ஆனந்தி


படம் - வினு



ராஜாஜி

தோற்றம் · 10-12-1878 மறைவு · 25-12-1972

மின்மினிக் கதைகள்



கழுதையைக் காப்பாற்றினார்!

மகாராஷ்டிரத்தில் பிறந்த ஏகநாதர் என்ற ஞானி எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுகிறவர். அவர் ஒருமுறை காசியிலிருந்து இராமேஸ்வரத்திற்குப் பயணம் செல்லத் திட்டமிட்டார். காசியிலிருந்து இராமேஸ்வரம் ஏறத்தாழ 2000 மைல்கள். நடந்தே அவர் காசியிலிருந்து புறப்பட்டார். தம்முடனே அவர் ஒரு கலசத்தையும் எடுத்து வந்தார். அதில் கங்கையின் புனித நீரைக் கொண்டு வந்தார்.

இராமேஸ்வரத்திலுள்ள கடலில் அந்தப் புனித நீரைக் கலக்க வேண்டும் என்பது அவரது எண்ணம். அவருடன் சில சீடர்களும் வந்தார்கள். வழியிலுள்ள புனிதமான நதிகளில் குளித்து, ஆங்காங்கே உள்ள கோயில்களில் எழுந்தருளியுள்ள சுவாமிகளையும் தரிசனம் செய்து கொண்டு வந்தார்கள்.

அப்போது வழியிலே ஒரு கழுதை தரையிலே விழுந்து கிடந்தது. ஏகநாதர் உடனே அதன் அருகிலே ஓடிச் சென்று பார்த்தார். அது உயிருடன் இருப்பதை அறிந்தார். அருகிலே தண்ணீர் கிடைக்காததால் அது தாகத்தால் வருந்தி மயக்க நிலையில் இருப்பதை உணர்ந்தார். நாக்கு வரண்டு உயிரை விடும் நிலைமையில் இருந்த அந்தக் கழுதையைப் பார்த்ததும், ஏகநாதரின் மனம் மிகவும் வேதனை அடைந்தது. உடனே, சிறிதும் தயங்காமல், தம் கையில் வைத்திருந்த கலசத்திலிருந்த தண்ணீரை அதன் வாயில் ஊற்றினார். தண்ணீரை அவர் ஊற்ற ஊற்ற, அந்தக் கழுதை மெல்ல அசையத் தொடங்கியது. அது கண்டு, ஏகநாதரின் முகம் மலர்ந்தது. கலசத்திலிருந்த புனித நீர் முழுவதும் கழுதையின் வாய்க்குள் சென்றதும், அது மெதுவாக எழுந்தது. அது கண்டு ஏகநாதர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்

தார்.

அப்போது, அவருடன் கூட வந்த சீடர்கள், "சுவாமி, கங்கையிலிருந்து புனித நீரை இவ்வளவு தூரம் எடுத்து வந்த தாங்கள், இராமேஸ்வரம் கடலில் கலக்காமல் இப்படிக் கழுதையின் வாயில் ஊற்றி விட்டீர்களே! போயும் போயும் ஒரு கழுதைக்குப் புனித நீரை ஊற்றலாமா?" என்று கேட்டார்கள்.

"கழுதையும் கடவுளால் படைக்கப்பட்ட ஓர் உயிர்தானே! சாவிலிருந்த இந்த உயிரை மீட்டதே அந்தப் புனித நீர்தானே! கடவுளால் படைக்கப்பட்ட ஓர் உயிரைக் காப்பாற்றிய இந்தச் செயலும் கடவுளுக்குச் செய்யும் ஒரு தொண்டுதான் என்று நான் நினைக்கிறேன். இராமேஸ்வரக் கடலில் புனித நீரைக் கலக்கினால் அடையும் பலனை, நான் செய்த இந்தச் செயல் மூலம் பெற்று விட்டேன்" என்று பெரு மகிழ்ச்சியுடன் கூறினார் ஏகநாதர்.

அவர் பேச்சைக் கேட்டு வியப்படைந்தார்கள் சீடர்கள்.

திறமைக்குப் பாராட்டு



அவன் ஒரு பெரிய வித்தைக்காரன் என்று அரசர் கேள்விப் பட்டார். உடனே, அவனை அழைத்து வர ஆள் அனுப்பினார்.

"உனக்கு என்ன என்ன வித்தைகள் தெரியும்?" என்று கேட்டார் அரசர்.

"அரசே, எனக்கு மந்திர வித்தை எதுவும் தெரியாது. ஆனாலும், கயிற்றின் மேல் நடப்பது, நீண்ட மூங்கிலில் தலைகீழாக ஏறி, அதன் நுனியில் வயிற்றை வைத்துக் கொண்டு சக்கரம் போல் சுழல்வது, சிறிய வளையத்துக்குள் புகுந்து வருவது, நாலு காலால் மாடு நடப்பது போல நடந்து காட்டுவது, மாட்டைப் போல் கத்துவது, ஒரே தடவையில் ஒன்பது குட்டிக்கரணம் போடுவது — இப்படிச் சில வித்தைகளைச் செய்வேன்" என்று அடக்கமாகப் பதில் அளித்தான் வித்தைக்காரன்.

"அப்படியா! சரி, வருகிற வெள்ளிக் கிழமை நாலு மணிக்கு நம் அரண்மனையின் எதிரில் உள்ள மைதானத்தில் உன் வித்தையைக் காட்டு. பொது மக்களும் கண்டு மகிழட்டும்."

"சரி மகாராஜா"

வெள்ளிக் கிழமை சரியாக நான்கு மணிக்கு வித்தை ஆரம்பமானது. ஓர் அழகிய ஆசனத்தில் அமர்ந்து அரசர் வித்தையைக் கண்டார். பொது மக்களும் சுற்றிலும் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தனர்.

வித்தைக்காரன் மாடு போல நடித்து 'ம்மா, ம்மா' என்று சுற்றி வந்தான். அப்போது கூட்டத்திலிருந்த மாடு மேய்க்கும் ஒருவன், ஒரு

சின்னஞ் சிறு கல்லை எடுத்து வித்தைக்காரன் முதுகில் மெல்லப் போட்டான். மறு விநாடியே 'சபாஷ்!' என்று அந்த மாடு மேய்ப்பவன் பாராட்டினான்.

வித்தைக்காரன் திரும்பிப் பார்த்தான். ''ஏன் என் முதுகில் கல்லைப் போட்டாய்?''என்று கோபமாகக் கேட்காமல், அவன் 'சபாஷ்' போட்டதைக் கேட்டு மகிழ்ந்தான்.

வித்தையெல்லாம் முடிந்ததும், மக்கள் கை தட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். வித்தைக்காரனை அரசர் அருகிலே அழைத்து ஒரு முத்து மாலையைப் பரிசாகக் கொடுத்தார். அப்போது, கல்லை எறிந்த அந்த மாடு மேய்ப்பவன் வித்தைக்காரனின் அருகிலே வந்து, தன் தோளில் கிடந்த ஒரு கிழிந்த கம்பளியை எடுத்து அவனுக்குப் போர்த்தினான். அரசர் அளித்த முத்து மாலையைக் காட்டிலும் அந்தக் கம்பளியை வித்தைக்காரன் பெரிதாக மதித்து, அதைக் கண்ணிலே ஒற்றிக் கொண்டு, மாடு மேய்ப்பவனின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டான்.

அரசருக்கும் மற்றவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

''ஏ வித்தைக்காரா, என் முத்து மாலையை விட அந்தக் கிழிந்த கம்பளம் உனக்குப் பெரிதாகப் போய் விட்டதா?'' என்று கோபமாகக் கேட்டார், அரசர்.

''மகாராஜா,...இந்த மனிதர்தான் என் திறமையை மிகவும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார். நான் மாடாக நடித்த போது, இவர் என் முதுகில் ஒரு சிறு கல்லைப் போட்டார். மாட்டின் உடம்பில் ஏதேனும் பட்டால், உடனே அந்த இடத்தை மட்டும் அது சுளிக்கும். மாட்டைப் போல நடித்த நான், கல் பட்ட இடத்தை மட்டுமே சுளித்துக் காட்டினேன். அதைக் கண்டு இவர் 'சபாஷ்' என்றார். அதனால்தான் இவர் அளித்த கம்பளம் கிழிந்ததாக இருந்தாலும், என் திறமையை நன்றாக உணர்ந்து இவர் கொடுத்ததால், அதைப் பெரிதாக மதிக்கிறேன்.''

வித்தைக்காரன் இப்படிக் கூறியதும், ''ஆம், உண்மைதான். நீ சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். உன்னை நான் பாராட்டுவதுடன், இந்த மனிதரையும் மனமாரப் பாராட்டுகிறேன். காரணம், அரசனாகிய நான் ஒரு முத்துமாலையைக் கொடுப்பது பெரிதல்ல; தன்னிடமுள்ள ஒரே கம்பளியையும் கொடுத்து உன்னைப் பாராட்ட முன் வந்தாரே, இவரை எப்படிப் பாராட்டுவது என்றே எனக்குத் தெரியவில்லை'' என்றார் அரசர்.


ஆணவம் அழிந்தது!

ஏமநாதன் நாடறிந்த ஓர் இசை மேதை. அவர் ஒரு சமயம், மதுரையில் பாண்டியன் அரசவைக்கு வந்தார். அரசரும் அவருக்குத் தகுந்த மரியாதை செய்தார். மதுரையில் தங்குவதற்கு சகல வசதிகளும் செய்து கொடுத்தார்.

ஏமநாதரோ மிகுந்த ஆணவம் கொண்டவர். அவர் அரசரிடம், ''என்னோடு போட்டி இடக்கூடிய தகுதி பாண்டிநாட்டில் யாருக்காவது உள்ளதா?'' என்று ஆணவத்துடன் கேட்டார். அதுமட்டுமல்ல, ''யாராவது என்னை வென்று விட்டால் நான் அவருக்கு அடிமை என்று ஒத்துக் கொள்கிறேன்'' என்றார்.

அரசருக்கு ஏமநாதனின் ஆணவம் எரிச்சலூட்டியது. இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. அரசவைப் பாடகரான பாணபத்திரரை அழைத்தார். ''நாளை நீர் ஏமநாதருடன் பாட வேண்டும்'' என்று கட்டளையிட்டார்.

ஏமநாதரின் மாணவர்கள் கடை வீதியில் பாடிய பாட்டைக் கேட்ட



பாணபத்திரர் அசந்து போனார். 'மாணவர்களே இவ்வளவு அருமையாகப் பாடுகிறார்களே, அப்படியானால் இவர்களின் ஆசிரியரான ஏமநாதர் எப்படிப் பாடுவார்! அவரை எதிர்த்து நாம் பாடுவதா?' என்று கவலைப் பட்டார் பாணபத்திரர்.

பாணபத்திரர், இறைவனிடம் தன் கவலையைக் கூறி முறையிட்டார். துணைபுரிய வேண்டி வழிபட்டார். அன்று இரவே இறைவன் விறகு வெட்டி வேடத்தில் வந்து ஏமநாதர் தங்கியிருந்த வீட்டுத் திண்ணையில் படுத்தார். படுத்தபடியே தூக்கம் வராதவர் போல் பாடினார். மிக மிக அருமையாக இருந்தது அப் பாட்டு. அப் பாட்டைக் கேட்ட ஏமநாதர், உடனே வெளியில் வந்து, "யார் நீ?" என்று கேட்டார்.

"நான் இசை மேதை பாணபத்திரரின் அடிமை. அவரிடம் பாட்டுக் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டேன். ஆனால், அவரோ, 'நீ இசை பயிலும் தகுதி அற்றவனாக இருக்கிறாய். நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு' என்று கூறி அனுப்பி விட்டார். இருந்தாலும், அவ்வப்போது அவர் பாடும் சில பாடல்களைக் கேட்டுக் கேட்டு ஓரளவு பாடுவேன்..." என்று பதிலளித்தார் விறகு வெட்டி வேடத்திலிருந்த சிவபெருமான்.

'பாணபத்திரரால் ஒதுக்கப்பட்ட இவனே இவ்வளவு அற்புதமாகப் பாடுகிறானே! அப்படியானால், பாணபத்திரரின் இசை எண்ணிப் பார்க்கவும் முடியாத அளவு இனிமையாக இருக்குமோ' என்று நினைத்தார் ஏமநாதர். ஓர் ஓலையிலே, 'நான் பாணபத்திரரின் அடிமை'' என்று எழுதி வைத்து விட்டு, இரவோடு இரவாக ஏமநாதர் அந்த ஊரை விட்டே போய் விட்டார்!

ஆணவம் வெற்றி பெற்றதாகச் சரித்திரமே இல்லை!

பழங்கதைகளைத் தொகுத்தவர்: தேவி நாச்சியப்பன்.

ஏதாவது தலைப்பு

அறிஞர் அண்ணா ஒரு முறை கிரியம்மாள்புரம் பொதுக் கூட்டத்திற்குப் பேச வந்திருந்தார். 'இன்று நான் என்ன தலைப்பில் பேச வேண்டும்?'' என்று அண்ணா அவர்கள், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவரிடம் கேட்டார்.

"ஏதாவது ஒரு தலைப்பில் பேசுங்கள்" என்றார் ஏற்பாடு செய்தவர்.


உடனே அண்ணா அவர்கள், 'ஏதாவது ஒரு தலைப்பு' என்பதையே தலைப்பாகக் கொண்டு மிக அருமையாகப் பேசினார்.


— ஜோ. அந்தோணிராஜ் (18,431), அம்பாசமுத்திரம்.



அணை மீசை மகாராஜா...

படக்கதை :- ஓவியர் - S.K.ராமானுஜம் (ராஜு:-)




ஆயிரம் பொற் காசுகள் என்று கேள்விப்பட்டதும் ஏழைகள் மகாராஜாவைக் காண அரண்மனைக்கு ஓடி வந்தனர்....
முதலில் ஒரு பிச்சைக்காரன் ராஜாவிற்கு யோசனை கூற முன் வந்தான்
“மகாராஜா! உங்கள் மீசையை எடுத்து விட்டால் உடனே தேளை அகற்றி விடலாம்.
இதைக்கேட்ட ராஜா, கோபங் கொண்டு... அப்பிச்சைக் காரனின் தலையை எடுத்து விடும்படி தன் காவலாளிகளுக்கு கட்டளையிட்டார்.
இதைக்கண்டு.. யோசனை கூற வந்த அனைவரும் திரும்பி ஓடிவிட்டனர்.
கடைசியில் ஒரு சிறுவன் அங்கு வந்தான்
மகாராஜா! உங்கள் முழு மீசையில் எந்தப் பாதி மீசையில் தேள் புகுந்ததோ அதை மட்டும் வெட்டி எடுத்து விடுங்கள்..
ராஜா.. சிறுவன் கூறியதை வெகு நேரம் யோசித்து, கடைசியில் தன் ஆசைக்குப் பாதிமீசையையும், மீதியைத் தேளுக்காகவும் அகற்றிவிட்டார்.
தனக்கு யோசனை கூறிய சிறுவனுக்குப் பரிசு வழங்கினார்
அன்று முதல் அந் நாட்டு மக்கள் அவரை 'அரைமீசை மகா ராஜா' என்று அழைத்தனர்..



என் குழந்தைப் பருவம்

ராஜாஜி

இந்த மாதம் ராஜாஜியின் குழந்தைப் பருவ நினைவுகளைத் தொகுத்துத் தருகிறோம். சுதந்திர பாரத நாட்டின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக லார்ட் மௌண்ட்பாட்டன் பிரபுவுக்குப் பிறகு பதவி வகித்தவர் ராஜாஜி என்று வட இந்தியர்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். ராஜாஜி அவர்கள் நம் காலத்தில் வாழ்ந்த மாமேதை. தீர்க்கதரிசி என்று புகழ்பெற்றவர். சிறந்த அறிவாளி. சுதந்திரப் போராட்டத்தின் போது மகாத்மா காந்தியின் தென்னிந்திய தளபதியாக விளங்கியவர்.


தொண்ணூற்று நான்கு வயது வரை வாழ்ந்த இந்த மூதறிஞர் தமது காலத்திலேயே ராஜரிஷி என்று போற்றப்பட்டார். கடைசி மூச்சுள்ள வரை பாரத நாட்டின் நலத்தைப் பற்றிய சிந்தனைகளே அவர் உள்ளத்தில் இருந்தன. எழுத்தாலும் பேச்சாலும் நாட்டுக்கு நலந்தரும் பல விஷயங்களை எடுத்துக் காட்டி வந்தார்.

நாட்டுக்கொரு புதல்வரான ராஜாஜியின் குழந்தைப் பருவ நாட்கள் எவ்வளவு எளிமையாக இருக்கின்றன?

என் தந்தை சக்கரவர்த்தி வெங்கடராயரை எல்லாரும் சக்கரவர்த்தி ஐயங்கார் என்றே குறிப்பிடுவார்கள். சேலம் மாவட்டத்தின் வடமேற்கில் உள்ள தொரப்பள்ளி என்ற அழகிய கிராமத்தின் முனிசீப்பாக இருந்தார் என் தந்தை. நாங்கள் ஸ்ரீமந் நாராயணனே முழு முதற் கடவுள் என்று தொழுகின்ற வைஷ்ணவர்கள். தமிழர்கள். நான் 1878 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாந் தேதியன்று மூன்றாவது மகனாகப் பிறந்தேன். என் பெற்றோர் என்னை ராஜன் என்று அழைத்தார்கள்.

என் தந்தை நல்ல உடற்கட்டு வாய்ந்தவர். உயரமாக இருப்பார். மழமழவென்று மழித்த அவர் தலையைச் சிறிய உச்சிக் குடுமி அலங்கரித்தது. நாமக்கட்டியைக் குழைத்துத் தம் சிவந்த நெற்றியில் ப வடிவத்தில் நாமம் இட்டுக் கொண்டு மத்தியில் நீளமாகச் சிவப்பு நிறத்தில் ஸ்ரீ சூர்ணம் இட்டுக் கொள்வார்.

பார்த்த உடனேயே உள்ளத்தில்



ஒரு மரியாதை எழச் செய்யும் கம்பீர மான தோற்றமுடையவர் என் தந்தை. எப்போதும் நன்றாக உடை உடுத்து வார். தோளில் சிவப்புக் கரை போட்ட அங்கவஸ்திரம் தொங்கும். இடுப்பில் பஞ்சகச்சமாக வேஷ்டி உடுத்தியிருப்பார். குளிராக இருந் தால் சால்வை போர்த்திக் கொள் வார். அந்தக் காலத்தில் அந்தணர்கள் தோல் செருப்பு அணிவது ஆசாரக் குறைவு என்று கருதினார்கள். கட்டை யால் ஆன செருப்புக்களையே அணி வார்கள். என் தந்தை விதிவிலக்காகத் தோல் செருப்புக்களையே உப யோகித்தார்.

நான் பிறந்த போது தென்னிந் தியா வெள்ளத்திலிருந்தும் கடும் பஞ்சத்திலிருந்தும் மீண்டு கொண் டிருந்தது. 1878 ஆம் ஆண்டு பெய்த மழையால் மாவட்டம் முழுவதும் அமோக விளைச்சல். பல ஆண்டு களுக்குப் பின்னர் கிராமத்தில் செழிப்பு உண்டாகத் தொடங்கியிருந் தது. தொரப்பள்ளியின் செம்மண் பூமியில் அரிசியும், கேழ்வரகும், தேங் காயும், மாங்காயும் விளைந்தன.

தொரப்பள்ளி அழகான கிராமம். அருகிலேயே அதிக ஆழமில்லாத தென் பெண்ணை ஆறு தெளிந்த நீரோட்டத்துடன் ஓடிற்று. சிறிய குன்றுகளின் மீதும் மேகங்களின் மீதும் சூரிய கிரணங்கள ஒளியைச் சிந்தி விளையாடும். வீடுகள் ஒரு குன் றின் சரிவில் இருந்தன. எங்கள் வீடு சற்று உயரமான இடத்தில் இருந்தது. வீட்டின் சுவர்களும் தரையும் களி மண்ணால் பூசப்பட்டிருந்தன. மூங் கில்கள் மீது ஓடு வேயப்பட்ட கூரை. மிக எளிமையான வீடு. ஒரு பெரிய அறையில் நாங்கள் வசித்தோம். தூங்குவதும் அங்கேதான். கூரையில் வெளிச்சத்துக்காக ஒரு ஜன்னல் இருந்தது. அடுத்து சமையல் அறை. சாமான்கள் வைக்க ஒரு சிறிய அறை. குளிப்பதற்கு ஓர் இடம். இதுதான் வீடு.

நான் கிராமப் பள்ளிக் கூடத்துக் குச் சென்றேன். அடிக்கடி ஆற்று மணலில் கோலியாடப் போய் விடு வேன். எனக்கு ரொம்பப் பிடித்த காரியம் புளிய மரத்தில் ஏறுவது. அடிக்கடி புளிய மரத்திலேறிப் பழங் களைப் பறித்து ஓட்டை உடைத்து அதன் புளிப்பும் தித்திப்பும் கலந்த ருசியான பழத்தைத் தின்பேன்.

ஒரு சமயம் ஒரு பரதேசி எங்கள் ஊருக்கு வந்தார். கையில் ஒரு விசித் திரமான வாத்தியம் (இசைக் கருவி) வைத்துக் கொண்டிருந்தார். அதை வாசித்துப் பார்க்க வேண்டுமென்று ரொம்ப ஆசையாக இருந்தது. என்

ஆர்வத்தைப் பார்த்து விட்டு என் தந்தை அதை வாங்கிக் கொடுத்தார்.


சின்னப் பையனாக இருந்த போது நான் ரொம்பக் குறும்புக்காரனாக இருந்தேன். என்னுடைய அத்தை ஒரு கொடியில் துணிமணிகளை உலர்த்துவார். கொடியில் உள்ள துணிகள் எரிந்தால் எப்படி இருக்கும் என்று தோன்றியது. விளையாட்டாக ஒரு துணியில் தீப் பற்ற வைத்து விட்டேன். கொழுந்து விட்டெரியும் தீயைப் பார்த்து அனுபவிக்க என் அத்தையைக் கூப்பிட்டேன். திடுக்கிட்டுப் போன என் அத்தை என்னை வைது கொண்டே ஓடி வந்து நெருப்பை அணைத்தாள்.


என் தாயார் சிங்காரம்மாவுக்கும் என் அத்தைகளுக்கும் வீட்டுக் காரியங்களில் நான் உதவி செய்வேன். என் தாயார் தண்ணீர் கொண்டு வருவதற்காக மலைச் சரிவில் இறங்கிச் செல்லும்போதெல்லாம் நான் அவள் கூடவே ஓடிச் செல்வேன். அம்மா எனக்குப் பல அற்புதமான கதைகளைச் சொல்லுவாள். நான் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் எத்தனையோ விஷயங்களைக் கற்றுத் தந்திருக்கிறார். ஏணியைச் சுவருக்கு மிக அருகில் வைக்கக் கூடாது. சரியான கோணத்தில் வைக்க வேண்டும் என்பதைக் காட்டிக் கொடுத்தார் அம்மா. இது ஒரு மறக்க முடியாத பாடமாக என் மனத்தில் பதிந்தது.

என் தந்தையார் ஓர் இயல்பான தலைவராக விளங்கினார். எனக்கு நான்கு வயதான போது ஹோசூர் நகரத்தின் முனிசீப்பாக நியமிக்கப் பட்டார். இது ஒரு முக்கியமான பதவி உயர்வு. தொரப் பள்ளியிலிருந்து ஹோசூர் ஆறு மைல் தூரத்தில் இருந்தது. நாங்கள் மாட்டு வண்டியில் புதிய ஊருக்குக் குடிபெயர்ந்தோம்.

முனிசீப்பான என் தந்தையார் வரி வசூல் செய்வது, மாவட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்புக்களை எழுதுவது, ஜனங்களின் பிணக்குகளைத் தீர்த்து வைப்பது முதலிய காரியங்களைச் செய்து வந்தார். அவருக்கு ஊதியமாகக் கிடைத்த தொகை ரூபாய் ஐந்து. பணக்காரர்களாக இல்லாவிட்டாலும் எங்கள் வீட்டுக்குப் பல ஆங்கிலேய அதிகாரிகள் வருவார்கள். என் தந்தை அவர்களோடு குதிரை வண்டியில் ஏறிக் கொண்டு போவார். அந்த அதிகாரிகள் பல விஷயங்களை என் தந்தையாரிடம் கூறி யோசனை கேட்பார்கள். அவரும் ஆலோசனைகள் சொல்லுவார். என் தகப்பனாருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆகையால் அந்த அதிகாரிகள் ஒரு மொழி பெயர்ப்பாளரின் உதவியோடு அவரிடம் பேசினார்கள்.

ஹோசூரில் நான் அரசாங்கப் பள்ளியில் படித்தேன். வகுப்பிலிருந்த கரும்பலகை என் கண்களுக்கு ஒரு புகை மூட்டம் போல் தெரியும்.





கரும்பலகையில் உபாத்தியாயர் எழுதியது எதையும் என்னால் பார்க்க முடியாது. பார்வைக் குறைவினால் நான் கஷ்டப்பட்டேன். என் தகப்பனாரிடம் கண்ணாடி வாங்கித் தரும்படி கேட்டேன். அவர் மறுத்து விட்டார். ஹோசூரில் நாற்பத்தைந்து வயதுக்குக் குறைந்தவர்கள் கண்ணாடி அணிய மாட்டார்கள். நான் சும்மா ஜம்பத்துக்காகக் கண்ணாடி கேட்கிறேன் என்று நினைத்தார் என் தந்தை.

என் வயதுக்கு நான் சிறியவனாகத் தோற்றமளித்தேன். நீண்ட முகமும் கருடன் போன்ற நீண்ட மூக்கும் உடையவன் நான். பார்வைக் குறைவினால் விளையாட்டுக்களில் சேர்வது கூட சிரமமாக இருந்தது. எனக்கு நீந்தத் தெரியாது. ஆனால் மல்யுத்தம் செய்வதில் சில பிடிகளைப் பழகிக் கொண்டேன்.

என்னுடைய ஆசான் அலாதியான மனிதர். அவர் ஒரு முஸ்லிம். ஆனால், ஹனுமானிடம் பக்தி கொண்டவர். எங்கள் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் கல்லில் செதுக்கப்பட்ட ஹனுமான் சிலை இருந்தது. நானும் என் குருவும் அடிக்கடி அங்கே போவோம். அவருக்கு என்னிடம் மிகவும் பிரியம். தன் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் போது அவருடைய அருகில் நின்று மற்றவர்கள் பழகுவதைப் பார்க்கச் சொல்லுவார்.

நான் அடிக்கடி பள்ளிக்கூடம் போகாமல் மட்டம் போட்டு விடுவேன். வயல் வரப்புக்களில் சுற்றித் திரிவேன். நெல் விளைவதைக் கண்டு ரசிப்பேன். குடியானவர்களையும் அவர்களுடைய கால்நடைகளையும் கூர்ந்து கவனிப்பேன். வயதான பிறகு கூட பிடி அரிசியைப் பார்க்கும் போதெல்லாம் வயலில் இறங்கி உழைக்கும் அந்தப் பாட்டாளி உழவர்களின் நினைவுதான் வரும்.

நடுநிலைப் பள்ளிக்கு மேல் ஹோசூரில் படிக்க வாய்ப்பு இல்லை. ஆனால் பெங்களூர் அருகிலேயே இருந்தது. என் கல்விக்காகவென்று என் தந்தை பொருள் சேமித்து வைத்திருந்தார். ஆகவே பெங்களூரில் சென்ட்ரல் காலேஜில் போய்ச் சேர்ந்தேன். பதினோரு வயதே நிரம்பிய கிராமத்தில் வளர்ந்த சிறுவனான நான் திடீரென்று அரண்மனைகளும், பூந்தோட்டங்களும் கல்வியும் கணிதமும் நிரம்பிய ஒரு நகரத்தில் தனித்து விடப்பட்டேன். சிக் பெட்டிலிருந்த ஒரு மாணவர் விடுதியில் தங்கிக் கல்லூரி செல்லத் தொடங்கினேன். நீண்ட குடுமி என் தலையை அலங்கரித்தது. என் தாயைப் பிரிந்து இருப்



பது என் உள்ளத்தை வாட்டியது. அம்மாவைப் பார்க்கவேண்டுமென்று ஏக்கமாக இருக்கும். இரண்டு ஆண்டுகள் கழித்து என்னுடைய பதின்மூன்றாம் வயதில் மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதினேன்.

இந்தச் சமயத்தில் என் தகப்பனார் நான் பார்வைக் குறைவால் கஷ்டப்படுவதை உணர்ந்து கொண்டார். எனக்குக் கண்ணாடி வாங்கிக் கொடுத்தார். என் வாழ்க்கையே மாறிப் போயிற்று. அன்று வரை பச்சை நிறம் என்பது என்னவென்று நான் சரியாக அறிந்திருக்கவில்லை. நட்சத்திரங்களைப் பார்ப்பதே ஓர் அற்புத அனுபவமாக இருந்தது. இது வரை வெறும் ஒளிப்படலமாக இருந்த நட்சத்திரங்கள் தனித் தனியாகப் பல கோணங்களுடன் தெரிந்தன. காலையில் எழுந்து மரங்களைப் பார்க்கும் போது இலைகளின் வெவ்வேறு வடிவங்கள் தெரிந்தன.

என்னுடைய பதின்மூன்றாவது வயது மிகவும் முக்கியமான ஆண்டு. நவரத்ன ராமராவ் என்ற மாணவரிடம் நான் மதிப்பு வைத்திருந்தேன். என்னை விட இரண்டு வயது பெரியவர். மராட்டியர். ஆனால் என்னை விட சென்ட்ரல் காலேஜில் ஜூனியர். அவர் ரொம்பப் புத்திசாலி. ஆங்கில இலக்கியம் படித்துத் தேர்ச்சியடைந்திருந்தார். அவரிடம் நேரில் பேச எனக்குக் கூச்சமாக இருந்தது. அதனால் அவருடைய நண்பனாக இருக்க ஆசைப்படுவதாக ஒரு கடிதம் எழுதி அவருடைய அறையில் வைத்து விட்டு வந்து விட்டேன்.

இப்படித் தொடங்கிய எங்கள் நட்பு எழுபது ஆண்டு நீடித்திருந்தது.

எங்களுடைய சக மாணவர் எல்லாரும் நாங்கள் நெருங்கிய நண்பர்களாக இருப்பதைக் கண்டு அதிசயித்தார்கள். ஆனாலும் எங்களைச் சூழ்ந்து கொள்வார்கள். ராமராவ் எனக்கு அடிக்கடி இலக்கியங்களைப் படித்துக் காட்டுவார். அவர் என்னை விடச் சிறந்த ரசிகர். அடிக்கடி நாங்கள் தத்துவங்களைப் பற்றிப் பேசுவோம். அல்லது வேடிக்கையாகப்


பேசிச் சிரித்து மகிழ்வோம்.

ஜான் குத்ரீ டெய்ட் என்பவர் எங்களுடைய மனம் கவர்ந்த பேராசிரியர். அவர் ஸ்காட்லாந்த் நாட்டைச் சேர்ந்தவர். எங்களுக்கு இலக்கியம் கற்றுக் கொடுத்ததோடு இலக்கியத்தை நேசிக்கவும் வைத்தார். மனித உள்ளத்தின் உன்னதமான குணங்களுக்கும், வீரத்துக்கும் அவர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். என் தந்தை அனுப்பி வந்த பணம் என் செலவுகளுக்குப் போதவில்லை. கல்லூரியிலிருந்து சிறிது உதவித் தொகை எனக்குக் கிடைத்து வந்தது. மீதிச் செலவுகளை என் பேராசிரியர் கவனித்துக் கொண்டார். எங்களிடம் அவர் வைத்திருந்த பிரியத்தினால் கல்லூரிக்குள்ளேயே எங்களுக்கு ஒரு சிறிய அறையை ஒழித்துக் கொடுத்தார்கள். இது ஓர் அபூர்வமான சலுகை.

இரவு நேரங்களில் அறைக்கு வெளியே பசிய புல் தரையில் படுத்துக் கொண்டு நட்சத்திரங்கள் ஒளிரும்வானத்தைப்பார்த்துக்கொண்டே வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருப்போம். சில சமயம் நிலவொளியில் முக்கியமான விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்போம். கடிகாரம் நடு நிசியானதை அறிவிக்கும் வரையில் பேசிக் கொண்டிருப்போம். ஓர் இரவு திறந்த வெளியிலேயே தூங்கினோம். இரவில் நடமாடும் ஏதேனும் ஆவிகள் எங்களிடம் தொடர்பு கொள்ளும் என்று எதிர்பார்த்தோம். அப்படி ஒன்றும் நேரவில்லை. அதற்குப் பதில் குளிரும் காற்றும் எங்கள் போர்வைகளுக்குள் புகுந்து விளையாடின. காலையில் இந்த அனுபவம் எங்களுக்கு ரொம்பப் பிடித்திருந்ததென்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டோமே தவிர, மறுபடியும் திறந்த வெளியில் உறங்கவில்லை.

வகுப்பில் எனக்கு மிகவும் பிடித்தமான பாடம் யுக்ளிட் என்று அந்தக் காலத்தில் சொல்லப்பட்ட ஜியாமெட்ரி. எனக்குக் கூர்மையான ஞாபகசக்தி உண்டு. கணிதத்தில் பல குறுக்கு வழிகளை உருப்போட்டிருந்தேன்.

எங்கள் கல்லூரி முதல்வரான ஜான்குக் என்பவர் பௌதிகப் பாடம் கற்றுத் தந்தார். அவரால் எனக்கு விஞ்ஞான பாடத்தில் தனியான ருசி உண்டாயிற்று. அவர் மகா முன் கோபியானாலும் மிகவும் நல்லவர். விஞ்ஞானத்தை நான் பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் விஞ்ஞானத் துறையில் ஈடுபட வேண்



டுமென்றும் அவர் கருதினார். எனக்கு ரொம்பப் பிடித்திருந்தபோதிலும் நான் மறுத்து விடுவேன். அவருக்குத் தாங்க முடியாத கோபம் வரும். ''யூ ராஸ்கல்! யூ ரோக்!'' என்றெல்லாம் திட்டுவார்.

ராமராவ் விளையாட்டுக்களில் தீவிரமாக ஈடுபடுவார். அவரை உத்தேசித்து நானும் விளையாட்டுக் களில் மனம் செலுத்த முயற்சி செய் தேன். கல்லூரியைச் சேர்ந்த புல் வெளிகள், கிரிக்கெட் மைதானம், சுற்றியிருந்த நெடிய அழகிய மரங் கள், சிவப்பு நிறக் கல்லூரிக் கட்டிடம், அதன் மீதிருந்த கடிகார மணிக் கூண்டு எல்லாவற்றையும் நாங்கள் உளமாற நேசித்தோம்.

நான் சென்னையில் (பி.ஏ. பரீட்சை) எழுதினேன். ஆங்கிலம், அறிவியல் (விஞ்ஞானம்), தமிழ் மூன்று பரீட்சைகளும் எழுதினேன். சென்ட்ரல் கல்லூரி அந்தக் காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்திருந்தது.

பரீட்சைகளுக்குப் படிப்பது எனக் குப் பிடிக்காத விஷயம். எங்கள் கல், லூரி முதல்வர் ஜான்குக் எரிச்சலடை யும் வரை நான் பரீட்சைக்குப் படிப் பதைத் தள்ளிப் போட்டேன். பிறகு பரீட்சையின் போது நாங்கள் தங்கி யிருந்த விடுதியில் இரவு வெகு நேரம் கண் விழித்துப் பௌதிகப் பாடப் பரீட்சைக்கு (Physics) உருப்போட்டுக் கொண்டிருந்தேன். என்னை அழைத்து வந்திருந்த என் தந்தை என் னைப் படுத்துத் தூங்கச் சொல்லி உத்தரவு போடும் வரையில் படித் தேன்.

பரீட்சை முடிவுகள் வெளியாயின. ஸ்டாடிஸ்டிக்ஸில் மிக அதிகமான மதிப்பெண்களும், டைனாமிக்ஸில் சுழியும் வாங்கியிருப்பது தெரிய வந் தது. அறிவியல் (விஞ்ஞான) பாடத் தில் இரண்டாம் வகுப்பில் தேறியிருந் தேன். ஆங்கிலப் பாடத்தில் பல் கலைக் கழகத்தில் ஐந்தாவது மாண வனாகத் தேர்ச்சியடைந்திருந்தேன். தமிழில் தோல்வியடைந்து விட்டேன். ஆனாலும் எனக்குப் பட்டம் கிடைத்து விட்டது. அப்போது என் வயது பதி னேழு.

இலக்கியத்தை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் ஜான் குத் ரீ டெய்ட். இலக்கியத்திலிருந்து சுதந்தி ரச் சிந்தனைகள் எனக்கு அறிமுக மாயின. என் ஆசிரியரோ நானோ இந்தச் சிறிய விதை பின்னால் எதிர்ப்பு என்னும் முள்ளாக உரு வெடுக்கும் என்று அப்போது அறிந் திருக்கவில்லை. 1896—ஆம் ஆண்டு என் வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்பட்டது. நான் சென்னையிலிருந்து கிளம்பினேன். சட்டம் படிப்பதெனத் தீர்மானம் செய்தேன்.

(ராஜாஜியவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும் காலம் வெகு சீக்கிரத்தில் உருவாயிற்று.)

தொகுத்து அளிக்கவர்: ஆனந்தி.

அடுத்த இதழில்

என் குழந்தைப் பருவம்



நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

இசை உலகில் இளம் தளிர்கள்



காரைக்குடி, தமிழ் இசைச் சங்கம் சம்பிரதாயமான சங்கீதக் கலையைக் கற்றுக் கொண்டிருக்கும் இளம் தளிர்களுக்காக, தமிழக அளவில் இசைப் போட்டி விழாவை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

இவ்வாண்டு நடைபெற்ற இசைப் போட்டி விழாவில் வாய்ப்பாட்டு பெருநிலை ஈரோடு செல்வி என். சி. உத்திரா முதற் பரிசும், ஸ்ரீரங்கம் செல்வி. எஸ். ஜெயஸ்ரீ இரண்டாம் பரிசும், செல்வி ஆர். கீதா மூன்றாம் பரிசும் பெற்றார்கள்.

வாய்ப்பாட்டு இளநிலையில் ஸ்ரீரங்கம் செல்வி சுஜாதா கஸ்தூரி ரெங்கன் முதற் பரிசும், ஸ்ரீரங்கம் செல்வி சுஜாதா லெக்ஷிமி வெங்கடவரதன் இரண்டாவது பரிசும், தஞ்சாவூர் செல்வன் சந்திரசேகரன் மூன்றாவது பரிசும் பெற்றார்கள்.

மிருதங்கம் பெருநிலையில் மதுரைச் செல்வன் சங்கர ராமசுப்பிரமணியன் முதற் பரிசும், சென்னைச் செல்வன் வி. ஆர். பிரசன்ன குமார் இரண்டாவது பரிசும் பெற்றார்கள். இரண்டாவது பரிசு பெற்ற செல்வன் பிரசன்ன குமார் பார்வையிழந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

இசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், நற்சான்றிதழ்களை 'வள்ளல்' எஸ். என். ஏ. ஏ எல். அண்ணாமலை செட்டியார் அவர்கள் வழங்கினார். ஆக்க ரீதியான இத்தகைய இசைப்பணி என்றும் நடைபெற எமது வாழ்த்துக்கள்.

இப் போட்டி விழாவிற்கு அஸ்திவாரமாக அமைந்தவர் தமிழ் இசைச் சங்கத் தலைவர் திரு. என். ஏ. மாரிமுத்து என்று சொன்னால் மிகையாகாது. இவ்விழாவின் முழுப் பொறுப்பையும் ஏற்று இவர் நடத்தி வந்தார். சமீப காலமாக இப்போட்டி விழாவை காரைக்குடி தமிழ் இசைச் சங்கம் ஏற்று நடத்தி வருகிறது. இருபது ஆண்டு காலமாக இம் மாபெரும் இசைப் பணியை வள்ளல் அழகப்பர் கல்வி அறக்குழு மேலாளர் திரு. டி. வி. எஸ். மணியன் அவர்கள், செயலாளர் டாக்டர் கே. ராகவன் ஆகியோர் பலரும் பாராட்டும் வகையில் செய்து வருகிறார்கள்.

— ஏ. சங்கரசேது.

சாந்தா கிளாஸின் கதை



குழந்தைகளே! டிசம்பர் வருகிறது என்றால், உடனே உங்கள் நினைவுக்கு வருவது கிறிஸ்துமஸ் பண்டிகை தான். இல்லையா?

இயேசு கிறிஸ்துவைப் பற்றி உங்களுக்குத் தெரியும். கிறிஸ்தவ மதத்தை ஏற்படுத்தியவர். அவருடைய பிறந்த நாளைத்தான் கிறிஸ்துமஸ் பண்டிகையாகக் கொண்டாடுகிறோம். என்றைக்கு? டிசம்பர் 25 ஆம் நாள். ஆனால், அவர் பிறந்தது அதற்கு முதல் நாள் நள்ளிரவு. எனவே 24 ஆம் தேதி இரவிலிருந்தே பண்டிகை ஆரம்பமாகி விடுகிறது.

கிறிஸ்தவர்களின் தலைமைப் புனித இடம் ரோம். அங்கு நள்ளிரவு 12 மணிக்கு அனைவரும் ஒன்று கூடிக் கூட்டுப் பிரார்த்தனை புரிவார்கள். மறுநாள் பகலிலும் அதே போன்ற பிரார்த்தனை உண்டு. அதே நேரத்தில், உலகெங்கும் உள்ள எல்லாத் தேவாலயங்களிலும், இந்தக கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.

சரி... வீடுகளில் கிறிஸ்துமஸை எப்படிக் கொண்டாடுகிறார்கள்? இயேசு பிறந்த போது, தேவதைகள் நேரில் இப்புவிக்கு வந்து, குழந்தை இயேசுவை ஆசீர்வதித்தனராம். அது மட்டுமன்று. பசுமை மாறாத 'பர்' மரத்தைப் பனிச்சிடும் விண்மீன்களால் அலங்கரித்தனராம். எனவே, ஆண்டு தோறும், கிறிஸ்துமசுக்கு முதல் நாள் இரவு, இலை தழைகளால் 'பர்' மரத்தைப் போன்று செய்து, அதைப் பல வண்ணப் பூக்கள், வண்ண விளக்குகள், கண்ணாடித் துண்டுகள் போன்றவற்றால் அலங்கரிக்கிறார்கள். அதற்குக் 'கிறிஸ்துமஸ் மரம்' என்றே பெயர். வீட்டின் முகப்பில் பல வண்ணக் கண்ணாடித் தாள் ஒட்டிய, பெரிய பெரிய நட்சத்திர வடிவங்களைத் தயாரித்துக் கட்டித் தொங்க விடுகிறார்கள். அதனுள் மின் விளக்குகளைப் பொருத்தி அலங்கரிக்கிறார்கள்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று, பொழுது விடிந்ததும், குழந்தைகள் பாடு படு குஷிதான்! ஏன் தெரியுமா குழந்தைகளே?

பொழுது விடிந்ததும் கிறிஸ்துமஸ் தாத்தா வருவார்.

கிறிஸ்துமஸ் தாத்தாவா? யார் அவர்? எப்படி இருப்பார்? எதற்காக வருகிறார்? அறியத் துடிக்கிறீர்கள் அல்லவா? சொல்கிறேன்.

அவரை எல்லாரும் 'சாந்தா கிளாஸ்' என்று அழைப்பார்கள். குடுகுடு கிழவர். வெள்ளைத் தாடி வைத்திருப்பார். பெரிய உருண்டையான சப்பை மூக்கு. சிவப்பு நிற 'தொள தொளா' கவுன் போன்ற சட்டை. அதே நிறத்தில் நீண்ட தொப்பி. கட்டைத் தொண்டையில் 'ஹஹ்ஹஹ்ஹா' என்று உரக்கச் சிரித்துக் கொண்டே வருவார். தோளில் மிகப் பெரிய மூட்டைப் பையைச் சுமந்து கொண்டு வருவார். அது நிறைய, வண்ணக் காகிதப் பொட்டலங்களாகப் பரிசுப் பொருள்களை அள்ளிக் கொண்டு வருவார்.

அவர் எப்போது வருவார் என்று குழந்தைகள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். வந்ததும், ஓடிச் சென்று அவரைச் சூழ்ந்து கொள்வார்கள். அவரும் குழந்தைகளை வாரி அணைத்து முத்தமிடுவார்.



"தம்பி! வீட்டு நம்பர் மூணு. முனுசாமி தெரு எது...?"

"வீட்டு நெம்பர் மூணு எதிர் வீடு... முனுசாமி தெரு பக்கத்துத் தெரு...!

— ஜானகிமணாளன் —

பிறகு, அவர்களோடு கை கோத்துப் பாடியாடி மகிழ்வார். அதன் பிறகு, பரிசுப் பொட்டலங்களை எடுத்து எல்லாக் குழந்தைகளுக்கும் வழங்குவார். இறுதியில், 'நான் போய் வருகிறேன்... அடுத்த ஆண்டு மீண்டும் வருகிறேன்... எல்லாரும் மகிழ்ச்சியாக இருங்கள்... என்று கூறி, விடை பெற்று விரைந்து மறைந்து விடுவார்.

இந்த சாந்தா கிளாஸ் யார்? எப்போது முதல் இவர் இப்படி வந்து கொண்டிருக்கிறார் தெரியுமா? மேலே படியுங்கள் புரியும்!

இயேசு கிறிஸ்து பிறந்து சில காலத்துக்குப் பிறகு, செயின்ட் நிகோலஸ் என்று ஒரு துறவி இருந்தார். அவரைத்தான் எல்லாரும் சாந்தா கிளாஸ் என்று அழைப்பார்கள். மிகவும் நல்லவர். அனைவரிடமும் அன்பும் பரிவும் மிக்கவர். பரோபகாரி. ஏழை எளியோரின் துயரைக் கண்டு சகிக்க மாட்டார். அவர்களுக்கு உதவி செய்து துயரிலிருந்து அவர்களை மீட்பார். அதே நேரத்தில் மிகவும் அடக்கமானவர். அவருடைய செயல்கள், காதும் காதும் வைத்தது போன்று, மிகவும் ரகசியமாக இருக்கும்.


ஒரு சமயம் என்ன ஆயிற்று தெரியுமா?

அந்த ஊரில் ஓர் ஏழைக் குடும்பம். அதில் நான்கு பெண்கள். நல்ல அழகிகள். கையில் பணம் இல்லாததால், திருமண வயது தாண்டியும்கூட மணம் செய்து கொடுக்க முடியாத நிலைமை. பெற்றோர் மிகவும் வேதனைப்பட்டனர்.

இந்த விவரம் சாந்தா கிளாஸுக்குத் தெரிய வந்தது. உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா? தனது ஆஸ்தி முழுவதையும் விற்றார். தங்கக் காசுகளாக மாற்றிக் கொண்டார். அவற்றை நான்கு துணிப் பைகளில் நிரப்பிக் கொண்டார். அவற்றை எடுத்துக் கொண்டு அந்த ஏழையின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

போகும் வழியில் அவருடைய மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. என்ன தெரியுமா? முன் பின் பழக்கமில்லாத ஒருவர் கொண்டு வந்து தரும் பணத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது என்ன நிச்





சயம்? அதை அவர்கள் தம் சுய கௌரவத்துக்கு இழுக்காகக் கருதி, வாங்க மறுத்து விட்டால்? ஒரு நல்ல காரியத்துக்கு உதவி செய்ய முடியாமல் போய் விடுமே....! என்ன செய்வது? என்று சிந்தித்தார். ஒரு யோசனை உதித்தது. என்ன தெரியுமா?

நேராக அவர் வீட்டுக்குப் போனார். வாயிற் கதவைத் தட்டி அவர்களை அழைப்பதற்குப் பதில், பின் பக்கமாகச் சென்று, மெல்லக் கூரை மீது ஏறினார். சமையல் அடுப்புக்கு உயரே, புகை போக்கி இருந்தது. அதற்கு அருகில் போய் அமர்ந்தார். புகை போக்கி வழியாக உள்ளே நடப்பது தெரிந்தது. அங்கு யாரும் இல்லாத நேரமாகப் பார்த்துக் கொண்டார்.

அங்கு அவர்கள் நான்கு பெரிய நட்சத்திர வடிவங்கள் செய்து, வண்ணக் காகிதங்கள் ஒட்டிக் காய வைத்திருந்தனர். சாந்தா கிளாஸ் நான்கு பைகளையும் சமையற்கட்டில் வீசி எறிந்தார். அவை தற்செயலாக அந்த நட்சத்திரங்களில் போய் விழுந்தன. அவர் வீடு திரும்பி விட்டார்.

மறுநாள் அப் பெண்களின் பெற்றோர் வந்து பணப் பைகளைக் கண்டெடுத்தனர். கடவுள் தந்த பரிசு என்று அகமகிழ்ந்தனர். அதைக் கொண்டு, நான்கு பேரின் திருமணத்தையும் ஜாம் ஜாம் என்று நடத்தி விட்டனர்.

நாளடைவில், சாந்தா கிளாஸ் தான் பணப் பையைப் போட்டார் என்ற விஷயம் மெல்ல மெல்ல ஊரில் எல்லாருக்கும் தெரிய வந்தது. இந்த ஒரே நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துக் கொண்டு, கொஞ்சம் கூட்டிக் குறைத்துப் பலவிதமான கதைகளை ஊரில் எல்லாரும் பேசிக் கொள்ளலானார்கள்.

இந்தக் கதை அடிப்படையில் தான், ஐரோப்பியர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முதல் நாள் இரவு, தம் வீட்டு முகப்பில் நட்சத்திரங்களைக் கட்டித் தொங்கவிடலாயினர். ஏன் தெரியுமா? சாந்தா கிளாஸ் இரவோடு இரவாக அது நிறையப் பல விதப் பொருள்களைக் கொண்டு வந்து நிரப்புவார் என்று நம்பினார்



கள். குழந்தைகள் மனத்தில் செயின்ட் நிகோலஸ் பற்றிய நம்பிக்கை உணர்வை வளர்ப்பதற்காகப் பெற்றோர்களே தம் குழந்தைகள் விரும்பும் பலவிதத் தின்பண்டங்கள் மற்றும் பல பரிசுப் பொருள்களையும் நள்ளிரவில் அதனுள் போட்டு வைப்பார்கள்.

இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் தினத்தன்று, காலையில் எல்லாரும் மாதா கோவிலுக்குச் செல்வார்கள். இத்தாலியில் சிறப்பான ஒரு விருந்துக்கே ஏற்பாடு செய்வார்கள். பாதி விருந்தின் போது, சாந்தா கிளாஸ் ஆடிப் பாடியவாறு உள்ளே வந்து நுழைவார். அவர் கையில் பெரிய பை இருக்கும். விருந்து முடிந்ததும், குழந்தைகளுக்கு வெவ்வேறு பரிசுப் பொருள்கள் உள்ள வண்ண வண்ணப் பாக்கெட்டுகளை வழங்குவார். பெரிய குடும்பங்களில், வயது முதிர்ந்த ஒருவர் சாந்தா கிளாஸாக வேடம் அணிந்து வந்து, குழந்தைகளுக்குப் பரிசுப் பொருள்களை வழங்குவார். அவரும் மற்றவர்களுடன் சேர்ந்து தளுக்கிக் குலுக்கி ஆடி, எல்லாரையும் களிப்பில் ஆழ்த்துவார்.

சாந்தா கிளாஸ், ரெயின் டீர்கள் பூட்டிய ஸ்லெட்ஜ் என்ற சக்கரம் இல்லாத வண்டியில் வடதுருவத்திலிருந்து வருவதாக நம்புகிறார்கள்.

ரோம் நகரில், ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சாந்தா கிளாஸின் சித்திரங்களை அச்சடித்து, இனாமாக, உலகம் முழுதும் நீண்ட தூரத்துக்குத் தபாலில் அனுப்புகின்றனர்.

குழந்தைகளே! இப்போது 'சாந்தா கிளாஸின்' கதையைத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? பீட்டர், ஜான், அந்தோணி, ஜார்ஜ் என்று உங்களுக்குக் கிறிஸ்தவக் குடும்ப நண்பர்கள் பலர் இருப்பார்களே! கிறிஸ்துமஸ் தினத்தன்று அவர்கள் வீட்டுக்குச் சென்று வாழ்த்துச் சொல்லுங்கள். அங்கு சாந்தா கிளாஸைச் சந்திக்கலாம். அவருடன், ஆடிப் பாடி மகிழலாம். அத்துடன் பரிசுப் பொருள்களும் கூடக் கிடைக்கக் கூடும். என்ன... செல்கிறீர்களா?



புதுமை விழா.

சியோல் ஒலிம்பிக் என்று தொடங்கியது? 17.9.88 அன்று தானே!

அதே நாளில் புதுவை முத்தியால் பேட்டையிலுள்ள காமராஜ் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் 'ஒலிம்பிக் விளையாட்டு விழா நாள்' கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது!

மாணவர்களுக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி!

இந்த விழாவினை தலைமை ஆசிரியர் (எழுத்தாளர்) ஜெயசீலனும், ஆசிரியர்களும் முனைந்து நடத்தி விடாமுயற்சி, உடல்நலம் பேணுதல், கூட்டுறவு மனப்பான்மை, நாட்டுப் பற்று, உலக ஒருமைப்பாட்டுணர்வு போன்ற பண்புகளை மாணவர் உள்ளத்தில் வளர்க்க வழி வகை செய்தார்கள். விழாவின் போது, ஒலிம்பிக் பற்றிய வினாடி வினா நிகழ்ச்சி, ஒலிம்பிக் பற்றிய சித்திரப் போட்டி, ஒருமைப்பாட்டு நடனம் போன்றவை நடைபெற்றன. விழாவிற்கு, கல்வி அதிகாரி திரு. வி. சுவாமிநாதன் தலைமை தாங்கினார். சிறந்த கால் பந்தாட்ட வீரரும் முன்னாள் கல்வித் துறைத் துணை இயக்குநருமாகிய திரு. சு. மார்க்கண்டன் விழாவில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

இன்னொரு முக்கியமான செய்தி! இந்த விழாவின் போது 'ஒலிம்பிக் தாத்தா' தோன்றி மாணவர்களை ஒரேயடியாக மகிழ்வித்து விட்டார், போங்கள்! ஒலிம்பிக் தாத்தா ஜெயசீலனின் நாவல், சிறுகதைகளில் வரும் ஓர் கற்பனைப் பாத்திரம் என்று உங்களுக்குத் தெரியும், அல்லவா!

நீலனின் பொது அறிவு

கொ.மா.கோதண்டம்

உயரமான மலை. பெரிய அரக்கன் படுத்திருப்பதைப் போல நீண்டு கிடந்தது. பச்சை ஆடை தரித்திருப்பதைப் போல மலையெங்கும் பசுமை கண்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தது.

இன்று பள்ளி விடுமுறை நாளாதலால் மலை அடிவாரத்திலிருந்த தோப்பிலே மணியும், அவனது நண்பர்களும் சைக்கிள்களில் வந்து பொழுது போக்க அங்கே கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். மணியின் அப்பாதான் அந்தத் தோட்டத்தைச் சில மாதங்களுக்கு முன்பு வாங்கலானார். இவர்கள் தோப்பில் அரட்டை அடித்துக் கொண்டிருப்பதை மலைக் கல்லிலிருந்தவாறு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் நீலன். அவன் ஓர் ஆதிவாசிச் சிறுவன். அவன் தந்தைக்கு அந்தத் தோப்பில் காவல் வேலை. ஒரு மூலையில் குடிசை போட்டு அவர்கள் அதில் வாழ்ந்து வந்தனர்.

காவலுக்குக் கூலியாகக் கேப்பை கிடைக்கும். மலை ஏறித் தேன் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தால், கொஞ்சம் பணமும் கிடைக்கும்.

விழுந்த தென்னை மட்டைகளைச் சேகரிப்பது, வேலியைப் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்வது, காற்றுக்கு விழுந்த தேங்காய்களை எடுத்து கிணற்று மோட்டார் அறையில் வைத்திருப்பது நீலனின் வேலை.

மணிக்கும் அவன் நண்பர்களுக்கும் நீலனின் தந்தை ஒரு குலை இளநீர்க் காய்களைத் தூக்கிக் கொண்டு வந்தார். அவர் பின்னால் எலும்புக்கூடான நாயும் ஓடி வந்து நின்றது.

இளநீர்க் காய்களைப் பக்குவமாகச் சீவி, நுனியில் பத்துப் பைசா அளவில் வெட்டித் துவாரம் செய்து, ஆளுக்கு இரண்டாகக் கொடுத்தார் அவர். சிறுவர்கள் இளநீரைப் பருகினார்கள். பருகிய காய்களை இரண்டாக வெட்டி குளுகுளுவென்றிருந்த இளந் தேங்காயை அரிவாளால் சுரண்டி வைத்ததும் அதனை எடுத்து அவர்கள் சுவாரஸ்யமாகத் தின்றனர்.

துவாரத்திற்காக சில்லுப் போட்ட துண்டுகள் நீலனுக்குக் கிடைத்தன. அவர்கள் தின்று எறிந்த காய்களை நாய் நக்கிக் கொண்டிருந்தது.

''டேய் வாங்கடா, ஓடையிலே ஒரு குளிப்பு போட்டு வருவோம்'' மணி அழைத்ததும் அவர்கள் ஓடி வேலியைத் தாண்டி ஓடைப் பக்கம் சென்றனர்.

தெளிந்த நீர் சளசளவென்று ஓடையில் பாய்ந்து கொண்டிருந்தது.

கரை ஓரம் இரண்டு தண்ணீர்ப் பாம்புகள் வேகமாக ஊர்ந்து ஆடி ஆடிச் சென்றன. ஒரு கல்லை எடுத்து அவற்றின் மேல் வீசினான் முத்து. பாம்புகள் சடக்கென்று முங்கி மறைந்தன.

அவர்கள் நீந்தி விளையாடி அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். கரையில் நீலன் கோவணம் தரித்தவனாக நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

''டேய்! நீ ஏண்டா எங்க கூடவே வர்றே, வேலையைப் பாத்துக்கிட்டுப் போடா!''

மணியின் அதட்டலைக் கேட்டதும் நீலன் ஓடி விட்டான்.

குளித்து முடித்து தோப்புக்கு வந்து உடைகளை மாற்றி, கொண்டு வந்த கடலை மிட்டாய்ப் பாக்கெட்டுகளைப் பகிர்ந்து தின்று கொண்டிருந்தனர்.

''டேய் மணி! நீ இந்த மலைக்கு மேலே ஏறிப் பாத்திருக்கியா?'' கும



ரன் ஆர்வமுடன் கேட்டான்.

"மலையிலே யானை, புலி எல்லாம் இருக்குமாமே, நான் அந்தப் பக்கமே போனதில்லை."

"அந்தக் கோவணாண்டிப் பயல் போயிருப்பானில்லே, அவனைக் கூப்பிட்டுக் கேட்போம்" என்றான் கண்ணன்.

மணி நீலனைக் கூவி அழைத்தான். அவன் தயங்கியவாறே அருகில் வந்தான்.

"டேய், நீ மலைக்கு மேலே ஏறியிருக்கியா?"

"போயிருக்கேன் சாமி"

"யானையைப் பார்த்திருக்கியா?"

"யானை, புலி, கரடியெல்லாம் பார்த்திருக்கேன் சாமி"

"உன்னை ஒண்ணுஞ் செய்யலியா?"

"அதுக்கு நாம கெடுதல் செஞ்சாத்தானே சாமி அது நம்மைத் தொந்தரவு செய்யும்? நாம நம்ம பாட்டுக்குப் போனா, அதுக அது பாட்டுக்குப் போயிரும் சாமி"

"டேய் என்னடா பெரிசா தத்துவம் பேசுறான் படிக்காத பயல்."

"நமக்கு இல்லாத அனுபவம் அவனுக்கு இருக்கலாமில்லியா?"

"என்ன பெரிய அனுபவம்? டேய் நீ ரயிலிலே ஏறியிருக்கியா?" மணி நீலனைப் பார்த்துக் கேட்டான்.

"பாத்ததே இல்லே சாமி! ரயிலுன்னா என்ன சாமி?"

அவர்கள் கலகலவென்று சிரித்தனர்.

"சைக்கிள் விடத் தெரியுமாடா" முத்து கேட்டான்.

நீலன் இல்லையெனத் தலையாட்டினான்.

"டேய், பொது அறிவு ஏதும் இல்லாத காட்டுப் பயல். அவனுக்கு என்னடா தெரியும்? அவங்கூட பேசிக்கிட்டிருக்காமே கடலை மிட்டாய்களைத் தின்னுங்கடா" மணி கூறியதும் அவர்கள் எழுந்தனர்; தோப்பைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள்.

உயரமான மரங்களில் தென்னை, குலை குலையாகக் காய்த்துத் தொங்கியது. தென்னங்கீற்றுக்கள் காற்றுக்



குச் சலசலத்தன.

அடுத்து புதிதாக உண்டாக்கியிருந்த இளந்தோப்பு, அது மணற்பகுதியாதலால் முதல் நாள் மழைக்கு தரை சொத சொதவென இருந்தது. கணுக்காலளவு கால்கள் மண்ணுக்குள் பதிந்தன; சொதக் புதக்கென அவர்கள் ஓடினார்கள். செம்மண் நீர்த்துளிகள் உடைகளில் படுவதைக் கூட உணராமல் அவர்கள் உற்சாகமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

வேலியோரம் நீலன் ஏதோ பறித்துத் தின்று கொண்டிருந்தான்.

''டேய், என்னடா சாப்பிடுறே?'' என்றான் முத்து.

''எலந்தப் பழம் சாமி'' நீலன் கையை நீட்டினான். கோலிக் குண்டு அளவான சிவந்த பழங்கள் அவன் கையிலிருந்தன.

''அவங்கிட்டே வாங்கிச் சாப்பிடாதீங்க. வேணுமின்னா பறிச்சித் தின்னுங்க.''

மணி கூறியதும், அவர்கள் வேலிப் பக்கம் சென்றனர்.

''ஐயோ! என் கையில் முள்ளுக் குத்திடிச்சிடா! எலந்தப் பழம் நமக்கு வேண்டாம்'' முத்து கூறியதும் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர்.

அவர்கள் மாமரம், பலா மரங்கள் இருந்த பகுதிக்கு வந்தனர். மாமரத்தில் பிஞ்சுக் காய்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கின. ஒருவன் ஒரு கல்லை எடுத்து வீசினான். ஒரு கொத்து மாங்காய் கீழே விழுந்தது. அவர்கள் ஆளுக்கு ஒன்றாகக் கடித்துத் தின்றனர். திடீரென்று ஒரு குரங்குக் கூட்டம் மரங்களில் தாவி வந்தது. 'கெக், கெக்' என்ற சத்தம் செய்தவாறே மாமரத்தை ஆக்கிரமித்தது. மணி ஒரு கல்லை எடுத்து வீசினான். 'வீல்' என்று துடித்தவாறே ஒரு குரங்குக் குட்டி கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தது. 'டக்'கென்று கீழே குதித்த ஒரு பெரிய குரங்கு, குட்டியைத் தூக்கிக் கொண்டு மரம் ஏறியது.

பல முரட்டுக் குரங்குகள் கீழே குதித்து இவர்களைப் பார்த்துப் பயங்கரமாக உறுமியவாறு தாக்க வந்தன.

சிறுவர்கள் என்ன செய்வது என அறியாதவாறு பயந்து அலறினார்

கள். பக்கத்திலிருந்த தென்னை மட்டைகளை எடுத்துச் சுழற்றி வீசினார்கள். குரங்குகள் கிளைகளில் ஏறியும், குதித்தும் மேலும் கோபமுடன் தாக்க வந்தன. மட்டைகளை வீசியும், அவைகளை விரட்ட முடியவில்லை. கீழே குதித்துச் சுற்றி நின்று கொண்டு 'கார் பூர்' எனக் கத்திப் பயமுறுத்தின. மட்டைகளை வீசி ஒரு பக்கம் பாதை விலகியதும், அவர்கள் ஓடினார்கள். குரங்குகள் வேகமாக அவர்களுக்கு முன்னே தாவி வந்து பாயத் தயாராயின. கைகளில் மட்டைகள் மட்டும் இல்லையென்றால், இதற்குள் நால்வரையும் கடித்துக் குதறியிருக்கும். அவர்கள்மேற்கொண்டுஓடவும்முடியவில்லை. பாதையை மறித்துப் பயங்கரமாகப் பல்லைக் காட்டி அவர்கள் அருகில் வந்தன. அவர்கள் வேறு வழியின்றிக் கூச்சல் போடத் தொடங்கினார்கள்.

இந்த ஆரவாரத்தைக் கேட்டு நீலன் ஓடி வந்தான்; சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, தந்தை அங்கு இல்லை என்பதையும் அறிந்து வேலியைத் தாண்டி ஓடைப் பக்கம் வந்தான்.

சிறிது நேரத்தில் கையில் ஏதோ ஒன்றுடன் திரும்பி ஓடி வந்தான். அருகில் வந்ததும், இவர்களுக்கும் குரங்குகளுக்கும் இடையில் கையில் இருந்ததை வீசினான்.

தண்ணீர்ப் பாம்பு ஒன்று சரசர வென்று ஊர்ந்து சென்றது. பாம்பைக் கண்டதும் குரங்குகள் 'காச், மூச்' என்று கத்தியவாறு மரங்களில் தாவி ஓடி விட்டன.


அப்போதுதான் அவர்களுக்கு உயிர் வந்தது. ஒரு பயங்கரமான சூழ்நிலையை அந்தச் சிறுவன் போக்கி விட்டதில் வியப்புக் கலந்த ஒரு மகிழ்ச்சி.

"என்னப்பாநீலா,நீவரல்லேன்னா எங்க நிலைமை என்ன ஆகியிருக்குமோ! நன்றி"

மணி கூறியதும், அவர்கள் அனைவரும்நன்றி உணர்ச்சியால்நெகிழ்ந்து பார்த்தனர். "இந்தச், சின்னப் பாம்புக்குப் பயந்தா, எங்க இத்தனை பேரையும் கடிக்க வந்த குரங்குக் கூட்டம் ஓடிப் போச்சு!"

"ஆமா சாமி, இது தண்ணிப் பாம்புதான். இது கடிச்சால் தவளை கூடச் சாகாது. ஆனால், குரங்குக பாம்புன்னா ரொம்பப் பயப்படும். ஒத்தப் பாம்பு இருந்தாலே ஆயிரம் குரங்குககூடப் பயந்து ஓடிப் போயிடும் சாமி"

அவனுடைய பொது அறிவு அவர்களுக்கு அதிசயமாக இருந்தது. அவன் தோளில் கை போட்டு அழைத்து வந்து ஆளுக்கொரு கடலை மிட்டாய்ப் பாக்கெட்டுகளை அவனுக்குத் தந்தனர்.





கவிதை பிறந்த கதை

புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

''முதன் முதலில் நான் எழுதிய பாடலே மிகவும் எளிமையான குழந்தைப் பாடல்தான். அதற்கும் ஒரு பின்னணி உண்டு.'' என்கிறார் கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்.

பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோயிலில் கொடையின் போது, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை எருமைக் கடா பலியிடும் வழக்கம் உண்டு.

அந்தக் கொடை 1973—இல் அமைந்தது. அப்போது நான் செயின்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளி மாணவன். அம்மன் கோயிலில் எருமைக் கடா பலியிடும் கொடுமையைத் தடுக்க வேண்டும் என்று 'பலி விலக்குச் சங்கம்' என்ற ஓர் அமைப்பு தோன்றியது. அந்தச் சங்கத்தில், திருமுருக கிருபானந்த வாரியார், ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் முதலான பெரியோர்களின் பலி விலக்குப் பிரச்சாரத்திற்கு, திருவரங்கம் பிள்ளை மிகப் பெரிய ஏற்பாடுகள் செய்தார்.

''அந்தப் பிரச்சாரத்தில், 15 வயது மாணவனான நானும் தொண்டனாகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. சின்ன வயதிலேயே எனக்குக் கவிதை ஆர்வம் மிக அதிகம்; சந்தத்தோடு பழைய பாடல்களைப் பாடுவதில் மிகுந்த ஆசை உண்டு'' என்று கூறும் கவிஞர், அந்தக் கால நிகழ்ச்சியே கவிதை பிறக்கக் காரணமாக அமைந்தது என்கிறார்.

பலி இடுவது மூட நம்பிக்கை. "தெய்வத்தின் பெயரால் பலியிடுதல் அநாகரிகம்'' என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார். அது மட்டுமல்ல, பலி விலக்குச் சங்கத்திற்குத் தந்தியும் கொடுத்து ஆதரவு காட்டினார். அறிஞர்கள் பலரும் இந்தப் பிரச்சாரத்துக்கு உதவினார்கள்.

அந்தச் சமயம் கவிஞர் உள்ளத்தில் ஒரு பாடல் எழுந்தது:

''வாயில்லாத உயிர்களை
வதைக்கக் கூடாது!
வாய்மை பேச எந்த நாளும்
மறக்கக் கூடாது!''



என்று ஆரம்பமாகும் அந்த அழகிய பாடல் தொடர்ந்து.

"இனிமை வேண்டும் மொழியிலே
இரக்கம் வேண்டும் விழியிலே
கனிவு வேண்டும் எழுத்திலே
துணிவு வேண்டும் கருத்திலே."

என்றெல்லாம் கருத்து மிக்கதாய் வருகின்றது.

நிலவில் மனிதன் முதன் முதலில் அடியெடுத்து வைத்த அறிவியல் அற்புதம் நிகழ்ந்த போது, கவிஞர் உள்ளத்தில் துள்ளி எழுந்தது ஒரு வெள்ளி நிலாப் பாட்டு:

"அம்புலிப் பாட்டுப் பாடாதே!
அம்மா கும்மா தேடாதே!
அம்புலி இங்கே வரமாட்டார்;
அமெரிக்க மாமா விடமாட்டார்!"

என்று நகைச்சுவையுடன் தொடங்கும் இந்தப் பாடல், குழந்தை இலக்கிய மாநாட்டில் பாடப்பட்டது.

'நிலா நிலா வா வா' என்று வழக்கமாகப் பாடும் முறைக்கு மாறாக, 'அம்புலிப் பாட்டுப் பாடாதே!' என்று குழந்தை,தன் தாயை நோக்கி, அறிவியல் சிந்தனையோடு பாடுவதாக அமைந்த பாடல் என்பதால், குழந்தைகள் மட்டுமல்லாமல், பெரியவர்களும் பாராட்டினார்கள்.

"விண்ணில் தெரியும் சந்திரனும் — ஒரு
விளையாட்டுப் பொம்மை இல்லை
யம்மா!
என்னை நிலவுப் பாட்டாலே
ஏமாற்ற வேண்டாம் என் தாயே!"

என்று பிஞ்சுக் குழந்தை பாடுவதாக முடிகின்றது அந்தப் பாடல்.

புகழ்பெற்ற நாடகக் கலைஞர்களான டி.கே.எஸ். சகோதரர்களின் 'உயிர்ப் பலி' என்னும் நாடகத்தில் கவிஞர் ஒரு பாடல் எழுதியிருந்தார்.

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் 'உயிர்ப் பலி' என்ற கதையே டி.கே.எஸ். நாடகமாக உருவானது. நாடக வடிவம் கொடுத்தவர் பிரபல எழுத்தாளர் திரு. அகிலன்.

அந்தக் கதையில் அபர்ணா என்ற



சிறுமி, பாசத்துடன் ஓர் ஆட்டுக்குட்டியைக் கையில் தூக்கிக் கொண்டு, கொஞ்சிக் கூத்தாடிப் பாடும் காட்சி. அவள் பாடுகிறாள் —

"சின்னச் சின்ன ஆட்டுக்குட்டி
சிங்காரக் குட்டி
என்னை விட்டே ஓடிப்போக
எண்ணாதே குட்டி!

கள்ளம் இல்லை,கபடம் இல்லை
துள்ளித் திரிகிறாய் — உன்
வெள்ளை உள்ளம் கண்டே உன்னை
வெள்ளா டென்கிறோம்!"

"இந்தப் பாடலை அவ்வை சண்முகம் மிகவும் பாராட்டினார்" என்கிறார் கவிஞர்.

சிறுமி கையில் இருந்த அந்த ஆட்டுக் குட்டியைப் பலி இடுவதற்காக, அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போகும் காட்சியும் நாடகத்தில் பிறகு வருமாம்.

உயிர்களிடத்தில் நாம் அன்பாய் இருக்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறதல்லவா இந்தக் காட்சி?

மகாகவி பாரதியார் கூட,

"வண்டி இழுக்கும் நல்ல குதிரை — நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப்பிழைக்கும் நம்மை ஆடு — இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!"

என்று 'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்று கூறினார் அல்லவா? அதைப் போல, கவிஞர் அவர்களும், உயிர்க் கொலை கூடாது, உயிர்களிடத்தில் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்று தம் கவிதை மூலமாக விடுக்கும் வேண்டுகோளை ஏற்று, அதன்படி நடப்போமாக!

— பேட்டி: பி. வி. கிரி.

பிருந்தாவனக் கவியரங்கம்





ஒற்றுமை

சிறுசிறு துளிகள் பலசேர்ந்து
சிறிய ஓடை ஆகிடுமே;
சிறுசிறு ஓடைகள் பலசேர்ந்து
சிறிய நதியாய் மாறிடுமே;
சிறுசிறு நதிகள் பலகூடிச்
சிறந்த பெருநதி ஓடிடுமே.
பெரும்பெரும் நதிகள் பலகூடி,
அரும்பெரும் கடலும் தோன்றியதே!

துளிகள் பலவும் சேர்ந்ததனால்,
அழகிய நற்கடல் தோன்றியதே!
ஒற்றுமை இருந்தால் நம்மிடத்தில்
பெற்றிடுவோம் பற்பல வெற்றிகளை!
வெற்றிகள் பற்பல பெறுவதனால்
நற்றமிழ் நாடு சிறந்திடுமே!

— கோவி. மகுடேசுவரன் (21,549),
திருப்பூர் — 5.

இறைவன் இருக்கிறான்

தென்றல் காற்றின் இனிமையிலே,
தேனாம் நிலவின் தனிமையிலே,
கலந்தே இறைவன் இருக்கின்றான்;
கருத்துடன் உலகைக் காக்கின்றான்.

குயிலின் இனிய குரலினிலே,
மயிலின் நடன அரங்கினிலே,
மறைந்தே இறைவன் இருக்கின்றான்;
மகிழ்வுடன் உலகைக் காக்கின்றான்!

தென்னங் கீற்றின் கீதத்திலே,
தெளிந்த ஆற்றின் நாதத்திலே,
தவழ்ந்தே இறைவன் இருக்கின்றான்;
தாய்போல் உலகைக் காக்கின்றான்.

— தஞ்சை. இரா. பரமசிவம் (16,320),
புதுமாத்தூர்.

நல்ல தாத்தா

தாத்தா உன்னைப் போற்றிடுவோம்.
தினமும் உன்னை நினைத்திடுவோம்
சாந்தம் தவழும் முகம் உடையாய்.
தடியை ஊன்றி நடந்திடுவாய்.
பொக்கை வாயால் சிரித்திடுவாய்.
புகழ்ந்தே எம்மை வாழ்த்திடுவாய்.
இனிக்க இனிக்கப் பேசிடுவாய்.
இனிப்புக் கொடுத்து மகிழ்ந்திடுவாய்.
பாடல் பலவும் பாடிடுவாய்.
பாசத்துடனே கொஞ்சிடுவாய்.



புத்திமதிகள் கூறிடுவாய்.
புதிதாய் எங்களை மாற்றிடுவாய்.
காலை எங்களை எழுப்பிடுவாய்;
கடவுளை வணங்கச் சொல்லிடுவாய்.
வீணே பொழுதைக் கழிக்காமல்
வீட்டு வேலைகள் பழக்கிடுவாய்.
பாடம் நன்றாய்ப் படித்திடவே
பலமுறை சொல்லித் திருத்திடுவாய்.
உண்ண எதை நான் கொடுத்தாலும்
உரலும் உலக்கையும் தேடிடுவாய்.
உன்னை நினைத்து வணங்கிடுவோம்!
உன்புகழ் என்றும் காத்திடுவோம்.

— கே. செந்தில்ராஜா (5084),
விஜயவாடா.

தாயின் சொல்



ஆட்டுக் குட்டி ஒன்று
அன்னை சொல்லைத் தட்டியே
ஓட்டின் மேலே ஏறியே,
ஓடி ஆடித் திரிந்தது!

வீட்டுக் காரர் வந்ததும்
மிகவும் பயந்த குட்டியும்
'மாட்டிக் கொண்டோம் நாம்' என
மருள மருள விழித்தது!

கண்ணில் கோபம் பொங்கவே
கையில் தடியை எடுக்கவே,
கண்டு மனசு துடித்தது;
கவலை மிகவும் கொண்டது.

அடிக்குப் பயந்த குட்டியும்
ஆவேசத்தில் குதித்தது.
ஆனால், கீழே விழுந்ததில்
அந்தோ, காலும் முறிந்தது!

'அன்னை சொல்லைத் தட்டினேன்;
அதனால் காலும் ஒடிந்தது!'
என்றே எண்ணி அழுதது.
ஏங்கி, ஏங்கித் தவித்தது!

— க. மனோகர் (15,959),
சேரன்மகாதேவி — 14.

எங்கள் பள்ளி



பள்ளி எங்கள் பள்ளி,
பண்பு சொல்லும் பள்ளி,
அள்ளி அள்ளிக் கல்வி
அளிக்கும் நல்ல பள்ளி,

கள்ள உள்ளம் இன்றிக்
கல்வி கொடுக்கும் பள்ளி.
நல்ல நல்ல பூக்களாய்
நாளும் மலரும் பள்ளி.

அச்சம் இன்றிச் செயல்பட
ஆக்கும் நல்ல பள்ளி.
எட்டுத் திக்கும் அறிவினை
ஏற்றி வைக்கும் பள்ளி.

— மு. இராஜராஜேஸ்வரி (22,549),
பேராவூரணி.

சித்திரப் புதிர்! 31

ஆழி____



1 இது எந்த விளையாட்டைக் குறிக்கிறது?




2 இது எந்த மாநிலத்தின் சுற்றுலாச் சின்னம்?



3 இளமைத் தோற்றத்தில் உள்ள இவர், பிற்காலத்தில் உங்களுக்கு நன்கு தெரிந்தவர். யார் இவர்?



4 இது என்ன பறவையின் தலை?



5 இது என்ன தெரியுமா?

—— விடை வேறு பக்கம்

இதுவல்லவா ஒருமைப்பாடு!



– அரசு மணிமேகலை

நிலாவுக்கு வேடிக்கையாக இருந்தது. தன் தந்தை நல்லசிவமும் அவர் நண்பர் செல்லதுரையும் குழந்தைகளைப் போலச் சிரித்துக் கொண்டும், ஒருவரையொருவர் கிண்டல் செய்து கொண்டும் பேசிக் கொண்டிருப்பது நிலாவுக்கு அதிசயக் காட்சியாகத் தோன்றிற்று.

குழந்தை போலச் சிரித்தாள் நிலா.

"பாத்தியா நல்லசிவம்! நாம் பேசிக்கிட்டே இருக்கிறது உன் பொண்ணுக்குச் சிரிப்புச் சிரிப்பா இருக்குதாம். அம்மாடி நிலா! நான் கொஞ்சம் பேச்சுக்காரன்தான். போர்க்களத்திலே மட்டும்தான் பேச மாட்டேன். ஓய்வெடுக்கப் போயிட்டோம்னா கேலிதான், கிண்டல்தான். உங்கப்பன் எப்பவுமே எண்ணி நாலு வார்த்தைதான்..."

"நீ இப்பவும் அப்படியேதான் இருக்கிறே. ஆனா, எனக்குத்தான் உன்னைப் பார்க்கப் பார்க்க வேதனையாக இருக்குது..."

நல்லசிவம் செல்லதுரையின் ஊனமுற்ற காலையே பார்த்தார். மனது தாங்கவில்லை.

"என்ன பண்றதுப்பா? எனக்குக் கால் மட்டும்தானே போயிடிச்சு? ஒவ்வொருவீரனுக்குக்கையேபோயிட்டுது. சிலருக்குக் கண் பார்வையே போயிட்டுது. எத்தனை பேரு உயிரையே இழந்திருக்காங்க...!"

"தேசம் தேசம்னு பேச்சுக்குப் பேச்சு சொல்லுவியே! உன் காலையா அந்த ஆண்டவன் எடுத்துக்கணும்?"

"நீ ஒண்ணு நல்லசிவம்! ஆண்டவனா என் காலை எடுத்துக்கிட்டான்? இந்தத் தேசத்துக்காக என்னாலே அந்தக் காலை மட்டும்தானே தர முடிஞ்சுது. பல வருஷம் நான் ராணுவத்திலே இருந்துட்டு வந்திருப்பேன். கால் ஊனமானதாலே ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிட்டுது..."

ஏக்கத்துடன் பேசுகிற செல்லதுரையைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் நிலா.

'அடேயப்பா... என்ன மாதிரியான உள்ளம் இவருக்கு!'

தேசம், தேசம் என்று தேசத்தை



மட்டுமேதானா இவர் நினைக்கிற வழக்கம்?

''சரி செல்லதுரை! வீட்டைப் பத்தி நீ ஒண்ணுமே சொல்லலியே!''

''என் மனைவி பாக்கியம் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி விஷக் காய்ச்சல் வந்து இறந்துட்டா. என் பொண்ணு மலர்விழியை இப்போ நீ பாத்தா, திகைச்சுப் போயிடுவே. கல்யாணத்துக்குத் தயாரா நிக்கறா... அவ கவலைதான் எனக்கு இப்போ பெரிய கவலையாப் போயிட்டுது...''

''ஏன், என்ன கவலை?''

''பொண்ணைத்தான் நீ பாத்திருக்கியே! மூக்கும் முழியுமா இருப்பா. நான் என்ன நினைச்சிக்கிட்டிருந்தேன். அவ அழகுக்கு ராஜா மாதிரி ஒரு மாப்பிள்ளை வந்து தேரிலே உக்கார வச்சிக்கிட்டுப் போயிடுவான்னு தப்புக் கணக்குப் போட்டுட்டேம்ப்பா!''

''என்னப்பா? என்ன நடந்தது?''

''நான் போட்ட மனக் கணக்கு தப்புக் கணக்காகப் போயிட்டுதுப்பா. வர்றவன் எல்லாம் முப்பது சவரன், முப்பத்தி அஞ்சு சவரன்னு ஏலம் போட்றான். நான் எங்கேப்பா போவேன்?''

மவுனமாகத் தரையையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தார் செல்லதுரை.

''தேசம், தேசம்னு களத்திலே போராட மட்டும்தானே எனக்குத் தெரியும்? கல்யாண மார்க்கட்டுலே போராடத் தெரியலைப்பா! பாகிஸ்தான்காரங்க, காலிலேதான் குண்டைப் பாய்ச்சினானுங்க. இந்தக் கல்யாண மார்க்கட்டுப்பாவிங்க என் இருதயத்தையே துளைச்சுட்டானுங்கப்பா...''

நல்லசிவம் வேதனையோடு நண்பரைப் பார்த்தார்.

இந்தக் காலப் பையன்களுக்குத் தேசத்திற்காகக் காலையே இழந்த ஒரு தியாகியின் உள்ளம் புரியவில்லையே! அவரிடமும் அவர்கள் வியாபாரம் அல்லவா பேசியிருக்கிறார்கள்?

''இப்போ உன் பொண்ணு மலர்விழி எங்கே? கண்ணம் பாளையத்துலேயே விட்டுட்டா வந்துட்டே! நம்ம வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்திருக்கலாம் இல்லே!''

''அது பத்திக் கேட்டுட்டுப் போகத்தான் வந்தேன் நல்லசிவம். நம்ம ஊர்லே ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர், நல்ல பையன். அப்பா அம்மாவுக்கு ஒரே பையன். பத்து சவரன் போடுங்க போதும்னு சொல்லிட்டாங்க.''

''பத்து சவரன் பரவாயில்லையே''

''நான் எங்கேப்பா போவேன்? பத்து சவரன் என்னாலே சேர்த்து வைக்க முடியுமா? முடியாதா? நீயே யோசியேன்...''

''உண்மைதான் செல்லதுரை, நீ உன் வருமானத்தை அப்படியே மனைவிக்கு அனுப்பியிருந்தால், அந்தப் பெண்மணி சேர்த்திருக்கலாம். ஆனால், நீ ஒரு பகுதியை மட்டுமே உன் மனைவிக்கு அனுப்பி விட்டு மிச்சத்தை ஊரிலிருக்கிற அனாதை இல்லங்களுக்கெல்லாம் அனுப்பியிருக்கிறாய். அப்புறம், எங்கிருந்து கையில் பணம் மிச்சமிருந்திருக்கும்?'' அனுதாபத்தோடு பார்த்தார் நல்லசிவம்.



''இப்ப நல்லசிவம் எனக்கு நீ ஒரு ஒத்தாசை பண்ணணும். மலரை உன் பொறுப்பிலே ஒரு பத்து நாள் விட்டுட்டுப் போறேன். ஆமதாபாத்திலே என் கூட பட்டாளத்திலே வேலை பார்த்த ஒரு சினேகிதன் இருக்கான். அவன் பேரு சுரீந்தர் சிங். ஆனா அவன் கிட்டே போறதுக்கும் உள்ளூர ரொம்பக் கூச்சமாத்தான் இருக்குது''

தயங்கினார் செல்லதுரை.

''ஏன்ப்பா கூச்சமா இருக்குது? என்ன காரணம்?''

''சுரீந்தர் சிங் பொண்ணு கல்யாணத்துக்கு நான் என் மனைவி, மலர்விழி மூணு பேருமே போயிருந்தோம். சுரீந்தர் சிங் பொண்ணு கல்யாணம் நின்னுட்ற மாதிரி ஒரு சூழ்நிலை. அவன் சொந்தக்காரங்க ஒத்தாசை பண்ண முன் வரலை. மலர் கழுத்திலிருந்த அஞ்சு சவரன் சங்கிலியைக் கழட்டி, அந்தப் பொண்ணுக்குக் கொடுத்துட்டேன். அவன் என் கையைப் பிடிச்சிக்கிட்டு அழுதான். தேம்பித் தேம்பி அழுதான். ரெண்டு வருஷத்திலே திருப்பிக் கொடுத்துட்றேன்னான். சீச்சி. வாணாம்டா! ஒரு சினேகிதனுக்கு இந்த ஒத்தாசைகூடப் பண்ணலைன்னா எப்படின்னு அப்பச் சொல்லிட்டேன்...''

பெருமூச்செறிந்தார் செல்லதுரை.

''அவன் சாதாரணமான சினேகிதன் இல்லே நல்லசிவம். ஒரு காட்டுப் பகுதியிலே குண்டு பட்டு விழுந்துட்ட என்னைப் பத்து மைல் தூரம் தோளிலே தூக்கிக்கிட்டு வந்து எங்க ஆளுங்க கிட்டே சேர்த்தவன். அவன்கிட்டே நான் அஞ்சு சவரனைத் திருப்பிக் கேட்டா, அது ரொம்பக் கேவலம். அவன் பொண்ணு கல்யாணம் நிக்கற மாதிரி இருந்த நேரத்துலே நான் என் பொண்ணாட்டமா நினைச்சித்தான் சங்கிலியைப் போட்டேன், அவன் வசதியாயிருக்கானோ, என்னவோ தெரியல்லே. ஏதோ அங்கே போய்ப் பார்க்கிறேன். அவன்கிட்டே உதவி கேக்கணும்னு நினைச்சாலே வெக்கமா இருக்குது.. ஆனா, மலர் நிக்கிற கோலத்தைப் பாத்தா வேறே வழியும் தெரியலை..."

ஒவ்வொரு சொல்லாக யோசித்துச் சொன்னார் செல்லதுரை.

நெடுநேரம் நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இதுக்கு நீ என்னைக் கேக்கணுமா? மலர்விழி நம்ம வீட்டுலே பத்து நாள் என்ன, ஒரு மாசமே இருக்கட்டும். நீ பாட்டுக்குக் கிளம்பிப் போயிட்டு வா!''

நல்லசிவம் சொன்னதில் மகிழ்ச்சி செல்லதுரைக்கு...

கண்ணம்பாளையத்துக்கு நிம்மதியாகக் கிளம்பிப் போனார்.

''அப்பா... அம்மா! சின்னப் பொண்ணு என்ன சொல்றது?, நாம என்ன கேக்கறதுன்னு நினைச்சுக் காதீங்க. நான் சொல்றதைக் கொஞ்சம் யோசிச்சிப் பாருங்க. செல்லதுரைப் பெரியப்பா மாதிரி ஒரு தியாகிக்குச் சோதனைங்க வரலாமா?

அப்படி வந்தா, மத்த ஜனங்களுக்கு அவரு மாதிரி தியாகம் பண்ண மனசு வருமா?''

''சரிம்மா! அதுக்காக நாம என்னம்மா பண்ண முடியும்?''

''அப்பா! உங்களுக்கு இன்னொரு பொண்ணு இருந்தால் நீங்க செலவு பண்ண மாட்டீங்களா? நான் அஞ்சாங் கிளாஸ் படிக்கிறப்போவே எனக்காக நகை நட்டு முப்பது பவுன்லே செஞ்சு வெச்சிட்டீங்க. எனக்கோ வயது பத்துக்கூட ஆகல்லே. அந்த மலர்விழி அக்காவுக்கு இருபத்திரெண்டு வயசு. அந்த அக்கா இப்படி நிக்கறது நமக்கெல்லாமே கேவலம்; இல்லியாப்பா? நாடு நாடுன்னு எப்பவுமே நாட்டைப் பத்திக் கவலைப்படுற ஒருத்தர் மகளுக்கு இந்த நிலைமை வரலாமா? அது மட்டும் இல்லே! யாரோ ஒரு சுரீந்தர்சிங்குக்கு நகையைத் தூக்கிக் கொடுத்திருக்காரு, செல்லதுரை பெரியப்பா. இப்பப் போயி, கேக்கறது அவருக்கு அவமானமா இருக்குது. இந்தத் தர்மசங்கடத்துலே அவர் ஏம்ப்பா அவஸ்தைப்படணும்? அதனாலே...''

''அதனாலே...?''

''செல்லதுரை பெரியப்பா ஆமதாபாத் போக வேண்டாம். எனக்காகச் செய்து வெச்சிருக்கிற நகைங்களிலே ஒரு பத்துச் சவரன் அந்த அக்காவுக்குக் கொடுத்துடுங்கப்பா. வினோபா பாவே ஏற்பாடு பண்ணின பூதான இயக்கத்துக்கு எவ்வளவு பேரு ஏக்கர் ஏக்கரா நிலம் கொடுத்திருக்காங்க? உங்க அப்பாவே கொடுத்திருக்காருன்னு சொன்னீங்களே! அந்த அளவுக்கு ஏக்கர் ஏக்கரா நிலம் தர வேண்டாம் நீங்க. குறைந்தபட்சம் — பத்து சவரன் நகையைத் தரலாம் இல்லே...''

நிலாவின் அப்பாவும், அம்மாவும் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள்.

இந்தச் சின்ன வயதில் இப்படி ஓர் உள்ளமா? அதிசயம்தான்! ஒரு பொம்மையை எடுத்துக் கொண்டாலே புரண்டு புரண்டு அழுகின்ற குழந்தைகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? அவர்கள் நடுவிலே நிலா அதிசயப் பிறவிதான்.

பேச்சே வரவில்லை இரண்டு பேருக்கும்.

நல்லசிவம் மகளை அருகில் அழைத்து, தலையை வருடி உச்சி முகர்ந்தார்.

''அதுக்கென்ன கண்ணு? உன் இஷ்டம் போலவே செய்துட்டாப் போச்சு!''

நிலா அம்மாவுக்கும், அப்பாவுக்கும் நடுவில் உட்கார்ந்து கொண்டு, இருவரையும் கிட்டே இழுத்துக் கொண்டாள்.

அவளுக்கு மகிழ்ச்சிக் கொண்டாட்டமாய் இருந்தது.


உள்ளே நுழைந்த செல்லதுரை நண்பரின் உபசரிப்பில் திக்குமுக்காடிப் போனார். நிலா தோட்டத்தில் வேலையாக இருந்தவள் ஓடோடி வந்தாள்.

''என்ன பெரியப்பா? எங்கே அக்கா?''

''அக்காவை இப்போ அழைச்சிக்கிட்டு வரலைம்மா நான்...''

''என்ன பெரியப்பா நீங்க? போங்க. உங்ககூட நான் பேசவே போறதில்லே....''


''என்ன கண்ணு? ஏம்மா கோபம்?''



மணி மூன்று ஆகிறது.....
இப்பவாடா பள்ளி கூடத்துக்கு
வருகிறது? ஏன் லேட்டு?!

'இப்பதான் கார் 'நூன்-ஷோ' விட்டாங்க!'

-குமார்



செல்லதுரை ஆதரவாகக் கேட்டார்.

நல்லசிவம் சிரித்துக் கொண்டே தங்கள் வீட்டில் எடுத்திருக்கிற முடிவை விவரமாகக் கூறினார்.

நம்பவே முடியவில்லை, செல்லதுரைக்கு. இனம் புரியாத உணர்ச்சி உடல் முழுக்கப் பரவியது.

'என்ன இது? இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? அதுவும் நகைப் பைத்தியம் பிடித்து அலைகின்ற பெண்கள் இருக்கிற நாட்டில், நிலா தன் நகைகளில் பத்து சவரனை எடுத்துக் கொடுக்கச் சொன்னாளா?

''நிலாக் கண்ணு! நீ நல்லா இருக்கணும்மா. உன் நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது. இந்தக் குணம் இருக்கே — கொடுக்கிற குணம் — அது எல்லோருக்கும் வந்துடாதும்மா. ஆனா ஒண்ணு... நீ அன்பா கொடுக்கிற நகைங்களை நான் ஏத்துக்க முடியாதுடா கண்ணு''

''ஏன் பெரியப்பா?''


''இந்தக் கடுதாசியைப் படிச்சுப் பாரு!'' சுரீந்தர்சிங்கிடமிருந்து வந்த கடிதத்தை எடுத்து நீட்டினார்.

''அன்புள்ள செல்லதுரை, வணக்கம். மலர் நன்றாக இருக்கிறாளா? அவளைப் பார்க்க நானும் என் மனைவியும் அடுத்த வாரம் வருகிறோம் என்று சொல்....

ஒரு முக்கியமான விஷயம். உன் ஒத்தாசையால்கல்யாணம்ஆயிற்றே... என் பெண் மனுவுக்கு. அவள் தற்சமயம் கர்ப்பமாக இருக்கிறாள். பிள்ளையாகப் பிறந்தால், ''செல்லதுரை'' என்கிற உன் பெயரைத்தான் வைக்கப் போகிறாளாம்.

நான்கூடக் கேட்டேன். ''நாமோ சிங் என்று முடிகிற மாதிரி பெயர் வைத்துக் கொள்கிறவர்கள். என் நண்பன் பெயர் எப்படி ஒத்து வரும்?'' என்றேன். 'செல்லதுரை சிங்' என்றால்தானே அப்பா நன்றாக இருக்காது. 'செல்லா சிங்' என்று என் மகனுக்குப் பெயர் வைத்து விடுகிறேன். புதுப் பெயர் என்ன அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?'' என்றாள் என் மனு. கெட்டிக்காரி.

சீக்கிரம் உன் பேரன் பிறக்கப்



காரணம்?

ஒருவன்: ஏன் கல்லை நீரில் போட்ட வுடன் மூழ்குகிறது?

மற்றவன்: அதுக்குத்தான் நீந்தத் தெரி யாதே!

— பா. ஜெயப்பிரகாஷ் (21,328), மேட்டூர் அணை — 2.

போகிறான். அவனைப் பார்க்க நீ கட்டாயம் வர வேண்டும். வந்து ஒரு மாதம் இருக்க வேண்டும். சரிதானே நண்பா?

இன்னும் ஒரு விஷயம்.. நீ என்னவோ என் மகள் மனுவுக்குக் கல்யாணப் பரிசாகத்தான் அந்தத் தங்கச் சங்கிலியைப் போட்டாய். இன்று வரை ஒரு கடிதத்திலும் அதைப் பற்றி நீ ஒரு வார்த்தை கூட எழுதவில்லை.

அதை நான் உணர்ந்துதான் இருக்கிறேன். என் நெருக்கடியான நேரத்தில் என் அவமானத்தை ஓர் உயிர் நண்பனாகத் துடைத்தெறிந்தாய். அதை நான் மறக்கவே மாட்டேன்.

இருந்தாலும், மலருக்கு இன்னும் திருமணம் ஆகாமல் இருப்பது எனக்குப் பெரும் வேதனையாக இருக்கிறது. அந்தப் பொறுப்பில் உனக்கு நான் தோள் கொடுக்க வேண்டும் அல்லவா?

மாதா மாதம் பணம் சேர்த்து வந்தேன். பத்து சவரன் வாங்கி விட்டேன். எங்கள் பெண்கள் போட்டுக் கொள்கிற தினுசில் புதுவிதமான நெக்லஸும், வளையல்களும் அந்தப் பத்து சவரனுக்குச் செய்து விட்டேன் மலருக்காக.

ஏன் தெரியுமா? அவள் கழுத்தில் அது இருக்கும் போது, எத்தனை பேர் கேட்பார்கள், இல்லையா? அப்போது என் மகள் மலர் பதில் சொல்லட்டும். "ஒரு பஞ்சாப்காரனுக்கு ஒரு தமிழன் உதவி செய்தான். அந்த உதவியின் நினைவாக அந்தப் பஞ்சாப்காரன் தன் நாட்டு நகையை வாங்கிக் கொடுத்திருக்கிறான்" என்று.

ஆம் நண்பா! உன் உண்மையான நட்பின் — பாசத்தின் — தியாகத்தின் சின்னமாகத்தான் மனுவின் கழுத்தில் அந்தச் சங்கிலியைப் பார்க்கிறேன்.

கேட்பவர்கள் எல்லோருக்குமே இந்தப் பதிலைத்தான் சொல்லுகிறேன். பார்க்கிறவர்களுக்கும் எங்கள் பஞ்சாப் பக்கத்து நகையாக அது இல்லாததால் அவர்கள் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து, "என்ன சங்கிலி இது? நம்ம பக்கத்து நகை இல்லை போலிருக்கிறதே" என்று கேட்க வைக்கிறது.

உன் தியாகத்தையும், அன்பையும் வாய் சலிக்காமல் சொல்லிச் சொல்லி மகிழ்கிறேன்.

அந்த எண்ணத்தால்தான் பஞ்சாப் மோஸ்தர் நகைகளாக — வளையல்களையும், நெக்லஸையும் செய்து விட்டேன்.

அவற்றிற்குப் பொருந்துகிற விதத்தில், மனு ஒரு மோதிரத்தைத் தன் பரிசாகக் கொடுத்திருக்கிறாள் மலர் விழிக்கு...

அவற்றை எடுத்துக் கொண்டு நானும் என் மனைவியும் கண்ணம்பாளையம் வருகிறோம்.

மலரிடம் சொல்லி வை, தினமும் இட்லி, வடை, தோசை, சாம்பார் செய்ய வேண்டும் என்று...

இங்கிருந்து என்ன வேண்டும் மலருக்கு? வரும் போது வாங்கி வருகிறோம்.

எங்கள் அன்பு வணக்கம்.

அன்புடன்,
சுரீந்தர்சிங்.

கடிதத்தை இரைந்து படித்த நல்லசிவத்தின் கண்களில் மட்டுமா? அவர் மனைவி, மகள் நிலா கண்களிலும் கண்ணீர் அரும்பு கட்டியிருந்தது.

ஏ அப்பா! இது என்ன அன்புடா கடவுளே. எங்கோ பிறந்த ஒரு பஞ்சாப்காரரும், தமிழ் நாட்டில் பிறந்த ஒரு தமிழரும் இப்படிப் பாசத்தால்

இணைக்கப்பட்டிருப்பது பழம் பிறவித் தொடர்பா?

இதுதான் உண்மையான தேசிய ஒருமைப்பாடு — இதுதான் உண்மையான ஒற்றுமை. இதற்குத்தான் ஈடு இணையே இல்லை!

"மலர் அவங்க வருவாங்கன்னு வீட்டைச் சுத்தம் பண்ணி, ஆளுங்களை வெச்சு வெள்ளையடிச்சிக்கிட்டு இருக்குது. சுரீந்தர் சிங் வர்ற நேரம் பொங்கல் வந்துடுமே. இந்த ஆண்டுதான் உண்மையான பொங்கல் — மகிழ்ச்சிப் பொங்கல் — நான் இப்ப எதுக்கு வந்தேன்னா, சுரீந்தர் சிங்கும் அவன் மனைவியும் வர்ற நேரம் நீங்க எல்லாரும் ஒரு பத்து நாளைக்கு நம்ம வீட்டுக்கு வந்து இருக்கணும்னு அழைச்சுட்டுப் போகத்தான்! மலர்தான் சொல்லி அனுப்பிச்சுது."

"அதுக்கென்ன பெரியப்பா? நாங்க எல்லோரும் வர்றோம். எனக்கும் அப்ப லீவுதான்."

"ஆமாம்! செல்லதுரை! நாங்க வர்றோம். ஆனா ஒரு கண்டிஷன்! ஒரு வாரம் இருப்போம். நாங்க திரும்பி வர்றப்போ நீங்க மட்டுமில்லை; சுரீந்தர் சிங், அவர் மனைவி எல்லாரும் வந்து இங்கே ஒரு பத்து நாளைக்கு இருக்கணும். சரிதானா?"

"ஆமாம்ப்பா!"

"சரிப்பா! அவனுக்கும் ரொம்ப மகிழ்ச்சியா இருக்கும். ஆனா, மொழி ஒரு பிரச்சினையா இருக்குமோ உங்களுக்கு? எனக்கு அதுதான் ஒரு பயமா இருக்குது"

"அட போ செல்லதுரை! அன்புக்கும், பாசத்துக்கும் மொழியாவது ஒண்ணாவது? ஊமை ஜாடையே போதும்ப்பா! நல்லாப் புரியும். அதெல்லாம் நீ ஒண்ணும் கவலையே படாதே! நீ சமாளி... உனக்குத்தான் இந்தி தெரியுமே..."

நல்லசிவம் நண்பரைப் பார்த்து மனம் விட்டுச் சிரித்தார்.

செல்லதுரைக்கும் அது உண்மைதான் என்பது புரிந்தது.

நிலாவின் தாயார் மெல்ல, பேசத் தொடங்கினார்.

"சரிங்க. அதுக்காக நிலா கொடுக்கச் சொன்ன பத்து சவரன் வேண்டாம்னா எப்படி?"

"அது எப்படிம்மா நியாயமாகும்? நான் கொடுத்த பொருளே எனக்கு இரண்டு மடங்காக திரும்பி வரப் போகுதே. அப்புறம் இதை வேறே எப்படி நான் கைநீட்டி வாங்கிக்கிறது? ஊகூம்! வாங்கிக்கவே மாட்டேன்."

"இதோ பாருங்க! எங்க பிரியத்துக்காக ஒரு அஞ்சு சவரன் நகையாவது நீங்க வாங்கிக்கிட்டாத்தான் எங்க மனசுக்கு ஒரு ஆறுதல். நீங்க என்ன மறுக்கிறது? திருமணப் பரிசா நாங்களே மலர் கழுத்திலே போட்டுடறோம். எங்களுக்கு என்ன சொந்தம் இல்லையா?"

நிலாவின் தாயார் பேசப் பேச செல்லதுரை கண்கள் கசியத் தொடங்கின...

என்ன அன்பு? என்ன பிரியம்?

"செல்லதுரை, சுரீந்தர் சிங் வர்ற நாளை சொல்லு! நாங்க மூணு பேரும் கண்ணம் பாளையத்துக்குக் கரெக்டா வந்து சேந்துட்றோம்!"

"வர்றவங்க திரும்பிப் போறதுக்குள்ளே ஒரு நல்ல நாளைப் பாத்து மலருக்குக் கல்யாணப் பத்திரிகையும் அச்சடிச்சிடுங்க. ஒரு தமிழ்நாட்டுக் கல்யாணத்தையும் உங்க சினேகிதர் பாத்துட்டுப் போகட்டும்."

நிலாவின் அம்மா கூறினார்.

செல்லதுரை மகிழ்ச்சியுடன் தலையசைத்தார்.


இதுவரை காணாத மகிழ்ச்சிப் பொங்கலை இந்த ஆண்டு பார்க்கப் போகிறோம் என்கின்ற ஆர்வக் குறுகுறுப்புடன் விடைபெற்றுக் கொண்ட அவர் நடையில் ஒரு மிடுக்கு இருந்தது.

ஊன்றுகோலின் 'டக்டக்' சத்தம் கூட ஒரு தாள லயத்தோடு கேட்டது...



"டாக்டர்! எனக்கு வயத்திலேதானே வலிக்குதுன்னு சொன்னேன்... நாக்கை ஏன் நீட்டச் சொல்றீங்க...?"

"அப்படியா? சரி... வயத்தை நீட்டு...!"



இரண்டு படங்கள். ஒவ்வொரு படமும் ஒரு பழமொழியை நினைவூட்டும். தெரிகிறதா?


விடை 61 ஆம் பக்கம்.




சாட்சிகோபாலனும் அண்ணாகோபாலனும்

கதை: ஆனந்தி படம்: வினு













அவன் கஷ்டப் படறவாளுக் கெல்லாம் உதவப் போயிருக்கான். அவனுக்கு ரொம்ப வேலை....
அண்ணா இங்கே ஏன் வரலை?
அவனுக்கு ஏதுநேரம்! யானை கூப்பிட்டா போகணும்; ஏழை கூப்பிட்டா ஓடணும்; குழந்தை கூப்பிட்டால் குதிக்கணும்!
அண்ணாவை யானை கூட உதவிக்கு அழைக்குமா?
ஓ! கஜேந்திரன் என்று ஒரு யானை...
"அது சுவாமிக்குத் தாமரை பறிக்கத் தடாகத்தில் இறங்கியது..."
..."பெரிய முதலை அதன் காலைக் கவ்விப் பிடிச்சுக் கொண்டது..."



"கஜேந்திரன்" அண்ணா"ன்னு கத்தித்து... உடனே உன் அண்ணா பறந்து வந்து...
முதலையோட சண்டை போட்டுக்கஜேந்திரனைக் காப்பாற்றினார்!
அம்மா! நான் கூப்பிட்டாலும் அண்ணா வருவரா?
நிச்சயமா. ஆனா அநாவசியமா அவரைத் தொந்தரவு பண்ணக்கூடாது. அவருக்கு ரொம்ப வேலை!
பால கோபாலனைத் திண்ணைப்பள்ளிக் கூடத்தில் சேர்த்தாள் தாயார்...
ஐயா! தகப்பன் இல்லாமல் வளரும் பிள்ளை இவன். நல் வழியில் ஆளாக்க விரும்புகிறேன்...
அப்போது குரு பத்தினி...
அக்ஷராப்பியாசம் பண்ண வெறுங் கையோடயா வந்தாய்?




இல்லை; என்னிடம் கொஞ்சம் அரிசி இருந்தது. அதைத்தான் கொண்டு வந்தேன்.
பிச்சை அரிசி! யாருக்கு வேணும்...
உன் குழந்தைக்கே கஞ்சி வைத்துக் கொடு!
ஏழையிடம் இப்படிப் பேசாதே... ஏதோ அவளாலானது....
குரு, கோபாலனை மாணவனாக ஏற்றுக் கொண்டார்...
ஓம், நமோ நாராயண... சொல்லு!
ஓம், நமோ நாராயண!
சற்று நேரத்துக்குப் பின் தாயும் மகனும் வீடு திரும்பினர்...
அம்மா! தினம் இந்தக் காட்டு வழியில் வரணுமா?
ஆமாம்! நீ தனியாத்தான் வரணும்! தினந்தோறும் என்னால் துணைக்கு வர முடியாது... வழி பார்த்துக் கொள்!


மறு நாள் பள்ளிக் கூடத்துக்குக் கிளம்பும் போது, கோபாலன்.....
அம்மா! எனக்குத் தனியாப் போகப் பயமா இருக்கு; காட்டிலே புலி, கரடி யெல்லாம் இருக்குமே!
பயப்படாதே! தைரியமாப் போ!
அம்மா! எனக்கு அண்ணா இருக்கான்னு சொன்னியே, துணைக்கு அவன் வரமாட்டானா?
காட்டு வழியா போகறச்சே ரொம்பப் பயமா இருந்தா அண்ணாவைக் கூப்பிடு; கட்டாயம் வருவான்.
கோபாலன் காட்டு வழியாகப் பள்ளிக்கூடம் போனான்...
எனக்குப் பயமேயில்லை. அண்ணாவை அனாவசியமாத் தொந்தரவு பண்ணக் கூடாது.
ஆனால் திரும்பி வரும்போது...
புதர்கள் அசையறதே... ஐயோ!
ஊ.. ஊ... ஊ.. ஊ..



அண்ணா! எனக்குப் பயமா இருக்கு! சீக்கிரம் வாயேன்!
பகவான் கிருஷ்ணர் தோன்றி...
பாலா, பயப்படாதே! வா, வீட்டுக்குப் போகலாம்...
நீதான் என்னோட அண்ணாவா! அழகா இருக்கியே... என்னோட கொஞ்ச நேரம் விளையாட மாட்டியா? ரொம்ப வேலையா?
பாலகனிடம் மனமிரங்கி பகவான் விளையாடினார்...
காட்டின் எல்லையில் இருவரும் வீட்டை நெருங்கியதும்...
கோபாலா! ஓக்! நன்றாகப் படி!



அன்றிரவு...
என்னடா, உனக்கு நீயே சிரித்துக் கொள்கிறாய்?
அண்ணாவோட விளையாடினதை நினைச்சுண்டேன்!
அண்ணாவாவது, விளையாடவாவது?
நீ சொன்னமாதிரியே கூப்பிட்ட உடன் வந்துட்டார் அம்மா!
அவர் மயில் பீலி அணிந்திருந்தார்; புல்லாங்குழல் வாசித்தார்; அதைக் கேட்டுக் காட்டு மிருகங்கள் கூட மயங்கி விட்டன!
கற்பனையாக இருந்தாலும் நல்லது தான்; பகவானைத் தானே அழைக்கிறான்!
கோபாலன் நன்றாகப் படித்தான். ஒவ்வொரு நாளும் மாலையில் கண்ணன் காட்டு வழியில் துணை வந்தார்.
இந்தா, வெண்ணெய்!



ஒரு நாள்...
எதுக்கு தோரணம் கட்டி வீட்டை அலங்காரம் பண்ணறே?
நாளைக்கு நம் வாத்தியாருக்குப் பிறந்த நாள்.
அவருக்கு அறுபது வயசு பூர்த்தி. அதனால் என் அப்பா வேஷ்டி, புடைவை எல்லாம் வாங்கி வருவார்.
எங்கப்பா தோட்டத்தில் விளைந்த காய் கறிகளைக் கொண்டு வருவார். கோபாலா, நீ என்ன கொண்டு வருவே?
அவனுக்கு அப்பா இல்லையே, அவன் ஏழையாச்சே! ஒண்ணும் கொண்டுவர மாட்டான்!
அன்றிரவு...
வாத்தியாருக்குப் பரிசு கொடுக்க ஏதாவது கொடு, அம்மா!
இங்கே என்ன இருக்கு? ஏன், உன் அண்ணாவையே கேளேன்!



மறுநாள் காலை பள்ளிக்கூடம் போகும்போது... காட்டு வழியில்...
அண்ணா! கண்ணா!
கண்ணன் தோன்றி...
என்ன வேணும்?
வாத்தியாருக்குப் பிறந்த நாள். நான் ஏதாவது பரிசு தரணும்.
இந்தா இதைக்கொடு... புத்துருக்கு நெய்...
ம்ம்ம்... நல்ல வாசனை!
உபாத்தியாயருக்கு எல்லா மாணவர்களும் பரிசளித்தார்கள்...
கோபாலன் முறைவந்த போது, குரு பத்தினி...
யார் வீட்டில்டா பிச்சை எடுத்து வந்தாய்?
என் அண்ணாதான் கொடுத்தனுப்பினார்; பிச்சை எடுக்கலை.



நெய்யை வேறு பாத்தி ரத்தில் மாற்றிக்கொண்டு கிண்டியைக் கொடுத் திடறேன், கொண்டு போ!
சரி.
அட! இந்தப் பாத்திரம் நிரம்பிவிட்டது; ஆனாலும் கிண்டி நெய் அப்படியே இருக்கே!
குருபத்தினி பல பாத்தி ரங்களை நிரப்பியும் கிண்டியில் நெய் குறையவேயில்லை...
இதென்ன அதிசயம்!
குருபத்தினி கணவரிடம் கூற...
ஏன், கோபாலா, நெய் எங்கேயிருந்து கொண்டு வந்தே?
என் அண்ணா கொடுத்தார்...
உனக்கு அண்ணாவே கிடையாதே!
ஏன் இல்லை? பேஷா இருக்கார்... பட்டு கட்டிண்டு, தலையில் மயில்பீலி அணிஞ்சுண்டு, கையில் குழலோட, அழகா இருப்பார்...




என்னை அழைச்சுண்டு போய் உன் அண்ணாவைக் காட்டறியா?
ஓ! பேஷா...
இருவரும் காட்டுப் பாதைக்கு வந்து சேர்ந்தனர்...
அண்ணா!
வாத்தியார் வந்திருக்கார். உன்னைப் பார்க்கணுமாம்...
உன் குருவால் என்னைப் பார்க்க முடியாது. அவர் உள்ளத்தில் நம்பிக்கையில்லை!
குரல் வந்த திக்கு நோக்கி குரு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்....
பிரபோ! என்னை மன்னியுங்கள்....
கோபாலா! நீ எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டாய். எனக்கு நீதான் அண்ணா கோபாலன்!


இனி....
சாட்சிகோபாலன் கதை
வித்யா நகர் என்ற ஊரிலிருந்து ஒரு முதியவர் தலயாத்திரை கிளம்பினார்.
ஓர் ஏழை இளைஞன் எதிர்ப்பட்டான்...
ஐயா, மூட்டையை என்னிடம் கொடுங்க, சுமந்து வரேன்.
திரிவேணி, காசி, கயா முதலிய தலங்களில் பெரியவர் புனிதச் சடங்குகளைச் செய்தார்.
முதியவர் களைத்துப் போனபோதெல்லாம் இளைஞன் கோவிந்தன் பணிவிடை செய்தான்.
பெற்ற மகன் கூட இப்படிச் சேவை செய்ய மாட்டான்.


பல நாட்கள் பிருந்தா-வனத்தில் தங்கினார்கள்...
கோவிந்த்! என் மகள் ருக்மிணியை உனக்குத்தான் கல்யாணம் செய்து தரப் போகிறேன்.
ஐயா, நான் பரம ஏழை. உங்கள் மகளை மணக்கும் தகுதி எனக்கில்லை.
பணம் பெரிதல்ல; குணம் தான் முக்கியம். இந்தக் கிருஷ்ணர் முன்னிலையில் உனக்கு வாக்களிக்கிறேன்: என் மகள் உனக்கே!
தல யாத்திரை முடிந்து ஊர் திரும்பினார் முதியவர்...
யமுனையில் ஸ்நானம்: கோபாலன் தரிசனம். திரும்பி வரவே மனமில்லை....
வீட்டில்...
ருக்மிணிக்காகத்தான் திரும்பி வந்தேன். நல்ல வரன் பார்த்திருக்கிறேன்...



ருக்மிணியின் அண்ணன்.
ருக்மிணியை அடையப் போகும் பாக்கியசாலி யார்?
இதோ இந்தக்கோவிந்த்தான்!
என்ன! இந்தப் பரதேசிப் பயலா?
அப்படி சொல்லாதே! அறிவாளி, அடக்கமானவன். என்னை நன்றாகக் கவனித்துக் கொண்டான்.
கூடவே கூடாது! இந்தக் கல்யாணம் நடக்கவே நடக்காது!
மகனே! கோபாலன் சந்நிதியில் நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன்..
கோபாலன் பிருந்தாவனத்திலிருந்து சாட்சி சொல்ல இங்கே வரப்போகிறானா? சும்மா இருங்கள்!
ருக்மிணியின் அண்ணன் கோவிந்தனை விரட்ட சூழ்ச்சி செய்தான்...
ஏண்டா! என் அப்பா வைத்திருந்த பணத்தையெல்லாம் திருடிக் கொண்டாயாமே?



அவமானமடைந்த கோவிந்த் ஊர்ப் பஞ்சாயத்தில் முறையிட்டான்...
இந்தப் பெரியவர் தம் பெண்ணை எனக்கு மனைவியாகத் தருவதாகக் கூறினார்
இல்லை! இவன் திருடன்!
கோவிந்த்! சாட்சி யாராவது இருக்கிறார்களா?
கோபாலனே சாட்சி!
அந்தக் கோபாலன் வந்து சாட்சி சொன்னால் என் தங்கையை இவன் அடையலாம்!
மனம் தளராமல் கோவிந்த் மீண்டும் பிருந்தாவனம் போனான்...
நான் பொய்யனல்ல; திருடனுமல்ல என்று நிரூபிக்க நீங்கள் இந்தக் கோலத்திலேயே என்னுடன் வரவேண்டும்.
ஒரு நிபந்தனை. உன் பின்னாலேயே நடந்து வருவேன். நீ திரும்பிப் பார்த்தால் அங்கேயே நின்று விடுவேன்!



கோவிந்த் பின்னாலேயே கோபால் நடந்து சென்றான்.
சதங்கை ஒலி கேட்டுக் கொண்டிருக்கிறது... பகவான் வருகிறார்.
ஊர் அருகே ஆற்று மணலில் நடந்த போது பாதங்கள் மணலில் புதைய...
சதங்கைச் சத்தம் கேட்கலையே...
கோவிந்த் சட்டென்று திரும்பிப் பார்க்க...
ஆ! பகவான் சிலையாகி விட்டார். அவரை நம்பாமல் தவறு செய்து விட்டேன்.
ஊர்த் தலைவர்களைப் பகவான் நின்ற இடத்துக்கு அழைத்து வந்தான் கோவிந்த்.
சாட்சி கூறுவீரா? கோவிந்த் கூறுவது உண்மையா?
உண்மை!
இங்கு கோபாலன் சிலை தோன்றியதும் சாட்சி கூறியதும் அற்புதங்கள்!
கோவிந்த்-ருக்மிணி கல்யாணம் ஆனந்தமாக நடந்தது.
இது சாட்சி கோபாலன் நடத்தி வைக்கும் கல்யாணம்!

(வி)சித்திரச் செய்திகள்

அதிசய எழுத்தாளர்!



நியூயார்க்கில் வின்செண்ட் செக்கர்சன் என்பவர் தன் இரண்டு கைகளிலும் இரண்டு பேனாக்களையும், இரண்டு கால்களிலும் இரண்டு பேனாக்களையும் ஆக நான்கு பேனாக்களைப் பிடித்துக் கொண்டு எழுதுகிறார்! இதில் இன்னோர் அதிசயம் என்ன தெரியுமா? ஒரே சமயத்தில் நான்கு விதமான விஷயங்களை எழுதுகிறார்!

88 வயதில் செய்தித்தாள்கள்!




லண்டனில் ஆல்பெர்ட் விட்டாகர் என்பவருக்கு 88 வயது ஆகிறது. இந்த 88 வயதில் அவர் தினமும் 11 விதமான செய்தித்தாள்களை ஒரு வரிகூட விடாமல் படித்து விடுகிறார்!

மாதுளம் பழம் ரூ 80 லட்சம்!



சாலமோன் ஆலயத்தின் சொத்து என்று கருதப்படும் தந்தத்தால் ஆன மாதுளம் பழம் ஒன்று 9 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் மியூசியத்திலிருந்து காணாமல் போய் விட்டது. அதை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஒருவர் வைத்திருந்தார். அதற்கு விலையாக ரூ. 80 லட்சம் கேட்டார். அந்தத் தொகையை இஸ்ரேல் மியூசியத்தின் அதிகாரிகள் அவரிடம் கொடுத்து விட்டு அந்த ஒரு மாதுளம் பழத்தை மீட்டுள்ளனர்.

முட்டையை எறியும் சாதனை!




இங்கிலாந்தில் டோவர் நகரில் நெவில்லி கொனால்லி என்பவர் ஒரு கோழி முட்டையை உடையாமல் 93 மீட்டர் தூரத்திற்கு எறிந்து உலக சாதனை புரிந்திருக்கிறார்!

நாயை மிஞ்சிய மனிதன்



நியூயார்க் நகரத்தில், நாய், மனிதனைக் கடிப்பதை விட மனிதன் மற்றவர்களைக் கடிப்பது தான் அதிகமாகி வருகிறது என்று மருத்துவ அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! சென்ற ஆண்டு மட்டுமே 1600 மனிதர்கள் மற்றவர்களைக் கடித்திருக்கிறார்கள்!

சிறுவனின் ஞாபக சக்தி



கென்யா நாட்டில், 14 வயதுடைய எலிஸபென் கச்சேரு என்னும் பையன் தன்னுடைய அபார ஞாபக சக்தியால் மற்றவர்களே ஆச்சரியப்பட வைக்கிறான். அவன் கென்யா ரேடியோவின் 15 நிமிட நேரம் செய்திகளைக் கேட்டு விட்டு, ஒரு வார்த்தைகூட விட்டு விடாமல் அப்படியே மறுபடியும் சொல்லி விடுகிறான்!

எலிகளை ஒழிக்கப் புது வழி!



சீனாவில் எலிகள் கோடிக்கணக்காகப் பெருகி, லட்சக்கணக்கான டன்கள் தானியங்களை அழித்து வந்தன. அந்த எலிகளை ஒழிக்க சீன மக்கள் புதிய வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எலிகளை வேக வைத்து அத்துடன் இஞ்சி, மிளகு, அரிசி முதலிய வற்றுடன் சமைத்து உணவாக்கிச் சாப்பிட ஆரம்பித்தார்கள். இதற்காக எலிகளைப் பிடித்துச் சமைக்க ஆரம்பித்ததில் எலிகளே அழிந்து விட்டன!

கேளுங்கள்; சொல்லுகிறோம்

*** அமெரிக்காவில் உள்ள சுதந்திரச் சிலையை நீங்கள் நேரில் பார்த்திருக்கிறீர்களா?**

— எம். மாயாண்டி, ஒகூர்.

படத்தில்தான் பார்த்திருக்கிறேன். ஒரு மங்கை மிகவும் கம்பீரமாக நின்றுகொண்டு, வலக்கையில் தீப்பந்தத்தையும் இடக்கையில் அமெரிக்கா சுதந்திரப் பிரகடனம் செய்யப் பட்ட தேதியைக் குறிக்கும் தகடு ஒன்றையும் வைத்திருப்பது தெரிகிறது. அதன் உயரம் 151 அடி; எடை 4,50,000 இராத்தல் என்று கூறுகிறார்கள். பிரெஞ்சு நாட்டினர் இச்சிலையை அமெரிக்கருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்களாம்.

*** நாம் எழுதும் கடிதங்களைத் தபால் நிலையங்களில் கொண்டு போய்ப் போடாமல், தெருக்களில் உள்ள தபால் பெட்டிகளிலே போடுவது மிகவும் வசதியாக இருக்கிறது. இந்த முறையை எப்போது யார் கண்டு பிடித்தார்?**

— ஆர். மீனலோசனி, வல்லத்தர கோட்டை.

யார் கண்டுபிடித்தார் என்பது தெரியவில்லை. 1855 — இல் இங்கிலாந்தில்தான் முதல் முதலாகத் தெருத் தபால் பெட்டிகள் வைக்கப்பட்டன.

*** தொல்காப்பியத்தை எழுதியவர் யார்? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு?**

— வெ. ராமசேஷன், பாபநாசம்.

தொல்காப்பியர் என்பவர்தான் இந்த நூலை எழுதினார் என்றும், அவர் பெயரையே இந்நூலுக்கு வைத்திருப்பதாகவும், 3000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டதாகவும் தமிழ் அறிஞர்கள் கூறுகிறார்கள்?

*** சீக்கியர்கள் தங்கள் தலையில் முண்டாசு கட்டிக் கொள்கிறார்கள், அது ஏன்?**

— பி. பிரசாத், குத்தாலம்.

சீக்கிய மதகுருவான குரு கோவிந்த சிங் ஏற்படுத்திய சீக்கியச் சின்னங்கள் ஐந்து. 1. கங்கம் (சீப்பு), 2. கரம் (கைவளை), 3. கச்சம் (அரைக் கச்சம்), கிரிப்பான் (கத்தி), கேசம் (நீண்ட தலைமுடி). ஆண்கள் வேலை செய்யும் போது நீண்ட தலைமுடி இடைஞ்சலாக இருக்கும் என்பதால், தலைப்பாகை அணிகிறார்கள் என்று நினைக்கிறோம்.

*** இந்தி மொழி கற்பதால் தமிழ் பாதிக்கப் படுமா?**

— எஸ். லதா, நாட்டரசன்கோட்டை.

தாய்மொழியான தமிழுக்கு முதலிடம் கொடுத்து, அதற்கு அடுத்தபடி எந்த மொழி வேண்டுமானாலும் கற்கலாம். தமிழ் பாதிக் கப்பட மாட்டாது.

*** ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர் கா. அப்பாத்துரை என்று சென்ற ஆகஸ்ட் மாத இதழில் கூறியிருந்தீர்கள். அந்தப் புத்தகங்கள் எங்கு கிடைக்கும்?**

— எஸ். தியாகராஜன், மன்னார்குடி.

'சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரகாசம் சாலை, சென்னை — 1 என்ற முகவரிக்கு எழுதினால் கிடைக்கும்.

*** இதிகாசம், புராணம் இரண்டும் ஒன்று தானா? வெவ்வேறா?**

புராணம் என்பது உலகம் முன்பு எப்படி இருந்தது. கடவுளால் எவ்வாறு படைக்கப் பட்டது என்பதைக் கூறுவது. இதிகாசம் என்பது இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றையே குறிக்கிறது.

*** பாம்புக் குட்டிகள், தூங்கும் போது காதுக்குள் புகுந்துவிடும் என்கிறார்களே, இது சரியா?**

— அன்புமாறன், சிவகங்கை.


பாம்புக்குட்டி காதுக்குள் நுழைவதில்லை. செவிப்பாம்பு அல்லது செய்யன் பாம்பு என்று ஒருவகைப் புழு இருக்கிறது. இது சில சமயம் மனிதர்கள் தூங்கும்போது காதுக்குள் புகுந்துவிடும். பாம்பைப் போல் இது நஞ்சு உடையதில்லை. கேடு எதுவும் கிடையாது.



* பறவைகள் பறக்கும்போது இறக்கைச் சத்தம் கேட்கிறது. ஆனால், ஆந்தை பறக்கும் போது இறக்கைச் சத்தம் சிறிதளவு கூடக் கேட்பதில்லையே, ஏன்?

— பி. கோவிந்தசாமி, பேதாதம்பட்டி புதூர்.

ஆந்தையின் சிறகு அகலமானது. அதில் உள்ள இறகுகள் மிக மிருதுவானவை. அதனால்தான், ஒலியே கேட்பதில்லை.



* பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்ற உண்மையை எடுத்துக் கூறியதற்காக கலிலியோ பல துன்பங்களை அனுபவித்தாராமே உண்மையா?

— ஆர். பானுமதி, சென்னை — 18.

கலிலியோவிற்கு 20 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கோப்பர்நிக்கஸ் என்ற வானவியல் நிபுணர்தான் முதல் முதலாக இந்த உண்மையைக் கூறினார். ஆயினும், இதைப் பல ஆராய்ச்சிகள் செய்து உலகம் அறியச் செய்தவர் கலிலியோதான். இதைச் சில கிறிஸ்தவப் பாதிரியார்கள் எதிர்த்தார்கள். அவருக்குக் கடுமையான தண்டனை வாங்கிக் கொடுத்தார்கள். சிறையில் அடைத்தார்கள். விடுதலையான பிறகும், அவர் வீட்டைவிட்டு வெளியிலே போக முடியாதபடி செய்தனர். கடைசிக் காலத்தில் அவர் கண் பார்வை இழந்து காலமானார்.

* ஆடாதோடை நல்ல மருந்து என்கிறார்களே, அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல முடியுமா?"

— பி. வேதாசலம், திருச்செந்தூர்.

ஆடாதோடை ஒரு சிறந்த மூலிகை. இருமல், காமாலை, மார்ச் சளி, காய்ச்சல், க்ஷயம் போன்ற வியாதிகளுக்கு ஆயுர்வேத வைத்தியர்களும் யுனானி வைத்தியர்களும் மிகவும் இதைப் பயன்படுத்துகிறார்கள். ஆடாதோடைச் செடி புதராக வளரும். நம் வீட்டுத் தோட்டத்திலே வளர்க்கலாம்.

* வெட்டுக்கிளி என்பதை நாம் எல்லாரும் அறிவோம். ஆனால், தத்துக்கிளி என்ற ஒன்று இருக்கிறதாமே, அப்படியா?

— ரா. ஸ்ரீ வித்யா, ஸ்ரீரங்கம்.

இரண்டும் ஒன்றுதான்.

* நாயன்மார்களில் ஒருவரான மாணிக்க வாசகர் எப்போது வாழ்ந்தார் என்று கூற முடியுமா?

— கோ. ரெங்காகரன், கோவில்பட்டி.

அவர் எந்தக் காலத்தில் வாழ்ந்தார் என்பது இன்னும் ஆராய்ச்சி நிலையிலே இருக்கிறது. ஆயினும், சில ஆதாரங்களை வைத்து அவர் காலம் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்புதான் என்று கூறுகிறார்கள்.

* ரஷ்ய அறிஞரான டால்ஸ்டாய் நம் காந்தித் தாத்தாவின் நண்பரானதாகப் படித்தேன். எப்படி நண்பர்களானார்கள்?

— சி. குமார், சென்னை — 4.



ரஷ்யப் படையில் ஓர் அதிகாரியாக இருந்த டால்ஸ்டாய் படையிலிருந்து விலகி, தமது அனுபவங்களையெல்லாம் புத்தகமாக எழுதினார். அவர் எழுதிய 'போரும் அமைதியும்' என்ற நூல் உலகப் புகழ் பெற்றது. அவரது நூல்களில் போரை அடியோடு வெறுத்தும் வன்முறைகளைக் கண்டித்தும் வந்தார். பெரும் செல்வந்தரான அவர், தூய எளிய வாழ்க்கை வாழ்ந்தார்! அவரை நம் காந்திஜிக்கு மிகவும் பிடித்திருந்தது. அடிக்கடி இருவரும் கடிதம் எழுதிக் கொண்டனர்.

பழமொழிப் புதிர் - விடை

புதிர் — 45: குரங்கு கையில் கொடுத்த பூமாலை போல.

புதிர் — 46: குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு.

அரசர்க்கு அழகு

மதிஒளி

பஞ்ச பாண்டவர்களில் மூத்தவர் — முதல்வர் தருமபுத்திரர். நற்குணங்களின் இருப்பிடம். பொறுமை, கருணை, அன்பு ஆகிய குணங்கள் நிரம்பப் பெற்றவர்; ஏழை, எளிய மக்களிடம் அளவற்ற கருணை கொண்டவர். ஏழைகளின் பசிப் பிணியை அறிந்து அவர்களுக்கு உணவு கொடுத்து உயிர் கொடுத்தவராகித் திகழ்ந்து வந்தார்.

நற்சுவை உணவை உண்ட மக்கள் தருமபுத்திரரை வயிறார, வாயார வாழ்த்திச் செல்வார்கள். இந்த விருந்தோம்பும் பண்பினால் அவர் புகழ் எங்கும் பரவியது. உணவு, உடை, பொருள் வேண்டி அனேகர் அஸ்தினாபுரம் நோக்கி வந்த வண்ணம் இருந்தனர். இதனால் தருமபுத்திரரின் மனத்தில் சில நேரங்களில் கர்வ உணர்வு ஏற்பட்டது.

தமது ஈகைக் குணம், விருந்தோம்பும் சிறப்பு குறித்து மெல்ல மெல்ல கர்வத்தின் பிடிக்குள் தருமரின் மனம் சிக்க ஆரம்பித்தது. ஸ்ரீ கிருஷ்ணர் தருமபுத்திரரின் மனத்தை அறிந்து கொண்டார். தெளிந்த நீரோடையான தருமரின் மனத்தில் கர்வத்தின் சஞ்சல அலைகள் எழுவதைத் தடுத்திட வேண்டும் என்று நினைத்தார். தருமரைத் திருத்தி நல்வழிப்படுத்தி, ஒரு நல்ல படிப்பினையையும் தர முடிவு செய்தார்.

அதற்காக —

''தருமா, நாம் இருவரும் முன்பெல்லாம் வெளியூர் எங்காவது சென்று வருவோம். இப்போது உனக்குப் பொறுப்பு அதிகமாகி விட்டது போலிருக்கிறது. உனக்கு ஒரு மனமாறுதல் வேண்டாமா?'' என்று பரிவுடன் வினவினார்.

தருமபுத்திரரின் மனம் மகிழ்ச்சி அடைந்தது. 'ஆமாம் பிரபு, நாம் சாதாரணமாகப் பல இடங்களுக்குச் சென்று வந்திருக்கிறோம். உங்களோடு வருவதால், எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியும், நல்லறிவும் ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் கூறியது போல் நாம் இப்போது எங்காவது சென்று வரலாம். நான் உடனே தயாராகிறேன்' என்று சொல்லிச் சென்றார்.

தமது பணிகளை மற்றவர்களிடம் பகிர்ந்தளித்து விட்டுப் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரோடு சந்தோஷமாகப் புறப்பட்டுச் சென்றார்.

பாதாள லோகத்தை மகாபலி என்னும் மன்னர் அரசாண்டு வந்தார். அவரும் ஈடு இணையற்ற முறையில் குடிமக்களின் நலங்களைக் கவனித்து வந்தார். அவருடைய நற்செயல்களும் அதன் பலன்களும் உலகம் முழுவதும் பரவியிருந்தன. மகாபலி மன்னரை வியந்து பாராட்டாத மக்களே இல்லையெனும்படி அவர் கீர்த்தி பரவி இருந்தது.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் தரும புத்திரரை பாதாள லோகத்திற்கு அழைத்து வந்தார். இருவரும் மாறு வேடத்தில் ஊருக்குப் புதியவர்கள் போல் தலைநகரில் பல வீதிகளின் வழியாக நடந்து சென்றனர். மக்கள் மகிழ்ச்சியாகவும், குறையில்லாதவர்களாகவும் இருப்பதைத் தருமர் கண்டுணர்ந்

தார். பல வீதிகளில் நடந்து சென்று பல செய்திகளைப் பேசிக் கொண்டும் நடந்ததால் அவருக்குத் தாகம் ஏற்பட்டது. தருமரின் நாவரட்சியைக் கண்ட ஸ்ரீ பகவான் 'வா தருமா, எதிரே உள்ள வீட்டிற்குச் சென்று தண்ணீர் குடித்துவிட்டுச் செல்லலாம்' என்றார். இருவரும் அவ்வீட்டையடைந்து குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டனர்.

வீட்டின் இல்லத்தரசி விரைந்து சென்று ஒரு தங்கக் கிண்ணத்தில் குடிக்க நீர் கொண்டு வந்து தருமருக்குக் கொடுத்தாள். தருமர் ஆவலோடு நீரை வாங்கிப் பருகினார்.

''மிகவும் நன்றி அம்மா, சுவையான குளிர்ந்த நீர். உங்கள் அன்பான செயலால் என் தாகம் தீர்ந்தது. நீங்கள் நீர் கொடுத்த பாத்திரம் தங்கக் கிண்ணமாக இருக்கிறதே, அதைக் கவனமாக எடுத்து வைத்திடுங்கள்' என்று சொல்லிக் கொண்டே கிண்ணத்தை மிகப் பணிவாக நீட்டினார்.

அதைக் கண்ட அவ்வீட்டரசி, 'ஐயா, ஒருதடவை கொடுத்ததை நாங்கள் திரும்பப் பெறுவதில்லை. தாங்களே இக் கிண்ணத்தை வைத்துக் கொள்ளலாம். தயவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள். எங்கள் நாட்டின் வழக்கம் இது'' என்றாள்.

அந்தப் பெண் சொன்னதைக் கேட்டதும் அந்நாட்டு மக்களின் செல்வச் செழிப்பையும், வாழ்க்கை நலத்தையும் தருமபுத்திரர் புரிந்து கொண்டார். அவர் மனம் வியப்படைந்தது. ஸ்ரீ கிருஷ்ணரிடம் அதைச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

'இது இருக்கட்டும். மன்னனின் அரண்மனைக்குப் போய்ப் பார்ப்போம் வா' என்று கண்ணபிரான் தருமரை அழைத்துக் கொண்டு மன்னன் மாளிகை நோக்கி நடக்க ஆரம்பித்தார். மாறுவேடத்தைக் கலைத்து விட்டு, இருவரும் சுய உருவில் சென்றனர்.

மகாபலிச் சக்கரவர்த்தியின் அரண்மனை அற்புதமாயிருந்தது. தெய்வீக ஒளியும், நறுமணமும் சூழ எங்கும் நிறைவான ஓர் உணர்வோடு கம்பீரமாக ஒவ்வொரு பகுதியும் காட்சியளித்தது.

ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டதும் மகாபலி அளவற்ற மகிழ்ச்சியோடு வந்து, அன்போடு உபசரித்தார். அருகில் இருந்த தருமரையும் வணங்கி வரவேற்றார்.



மகிழ்ச்சி தரும் புத்தகம்

ஒரு நிருபர் பெர்னார்ட்ஷாவைப் பார்த்து, "உங்களுக்கு எந்தப் புத்தகத்திலிருந்து அதிகமான மகிழ்ச்சி கிடைத்தது என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

பெர்னார்ட்ஷா பளிச்சென்று பதில் சொன்னார்: "என்னுடைய 'செக்' புத்தகத்திலிருந்து."

— என். செந்தில்குமார் (131), பேரூர்.

ஸ்ரீ கிருஷ்ணர், "அரசே, இன்றைய தினம் தருமபுத்திரரை உன்னுடைய நாட்டிற்கு அழைத்து வந்திருக்கிறேன். இதோ இவர்தான் உன்னுடைய நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, மிகவும் மன மகிழ்ச்சியோடு இருக்கிறார். இவர் தான தருமங்கள் செய்வதில் மிகவும் புகழ் பெற்றவர்" என்று கிருஷ்ண பகவான் சொன்னதும் மகாபலியின் முகம் சற்று மாற்றம் அடைந்தது.

மன்னனின் நுண்ணிய முக மாற்றத்தைக் கண்ட தருமர் மனம் குழம்பினார்.

ஸ்ரீ கிருஷ்ணர் மேலும் தொடர்ந்தார்: "தருமர் ஒவ்வொரு நாளும் ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் செய்கிறார். தானத்தில் சிறந்தது அன்னதானம் இல்லையா?" என்று கூறும் போதே கண் சிமிட்டி கந்தர்வச் சிரிப்பைக் காட்டினார்.

ஸ்ரீ கண்ணபிரான் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் தம்மை மிகவும் உயர்வாக அறிமுகம் செய்து வைப்பதாகத் தருமபுத்திரர் நினைத்து உளமகிழ்ந்தார்.

ஆனால், மகாபலியோ இரு காதுகளையும் இறுகப்பொத்திக்கொண்டு, "பகவானே, வேண்டாம், வேண்டாம். என்னிடம் சொல்லாதீர்கள்" என்று அலறித் துடித்தார்.

தரும புத்திரருக்கு ஒன்றும் புரியவில்லை. 'நாம் செய்த நல்ல செயலைக் கேட்கக் கூட மகாபலிக்கு விருப்பமில்லாமல் போய் விட்டதா? என்ன!' என்று குழப்பம் ஏற்பட்டது.

"பிரபு..... நீங்கள்..." என்று ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்துத் தருமர் கேட்க,

உடனே மகாபலி, "தருமபுத்திரரை நான் மிகவும் உயர்வாக எண்ணியிருந்தேன். என் எண்ணத்தில் மண் விழுந்து விட்டதே!" என்று துக்கித்தார்.


ஸ்ரீ கிருஷ்ணர் மகாபலி அருகே வந்து சமாதானப்படுத்தும் விதத்தில் தோளில் கை வைத்தார்.

"தருமபுத்திரர் செய்யும் தான தர்மங்கள் உனக்குப் பிடிக்கவில்லையா? ஏனிந்தத் தடுமாற்றம்? சொல்" என்றார்.

"பிரபு, இங்கு என் நாட்டிலே என்னிடம் இருந்து தானம் பெறுவதற்கு ஒருவர்கூட வருவதில்லை. தேடிப்பார்த்தாலும்கிடைப்பதில்லை. தானம் பெற்று வாழ வேண்டும் என்ற நிலையில் ஒருவர்கூட என் நாட்டில் இல்லை. கொள்வார் இல்லாததால், கொடுப்பாரும் இல்லை. நீங்கள் தருமபுத்திரர் தினம் ஐந்நூறு பேருக்கு அன்னதானம் செய்கிறார் என்று கூறுகிறீர்கள். அப்படியானால், குறைந்தது ஐந்நூறு ஏழைகளாவது அவர் நாட்டில் இருக்கிறார்கள் என்பது நிச்சயமாகி விட்டதே! இது ஒரு அரசருக்குப் பெருமையா? அரசாட்சிக்கு அழகா? இப்படிப்பட்ட ஒருவரை நீங்கள் புகழ்ந்து கூறுதல் முறையா?" என்று பலவாறு கூறிப் புலம்பினார்.

மகாபலியின்வார்த்தைஒவ்வொன்றும் தருமபுத்திரருக்குச் சாட்டையடி போல் விழுந்தது. தான் செய்யும் தான தர்மங்களின் மறுபக்கம் இப்படியும் இருக்கும் என்று உணர்ந்தார். அவர் செய்த தவறும் அவருள் ஏற்பட்டிருந்த கர்வமும் நாணித் தலை குனிந்தன.

கர்வம் என்ற நெருப்பில் கருகிவிடாமல் ஸ்ரீ கண்ணபிரான் தன்னை வெகு அழகாகக் காப்பாற்றியதை உணர்ந்தார் தருமபுத்திரர். மனம் சாந்தி அடைந்தது. மனித உள்ளத்தின் கர்வம் பெரிதாக வளர்வதற்கு முன்பே, அதை அறவே நீக்கி சிலரை ஆண்டவன் ஆட்கொள்கிறான் என்பது எத்துணை உண்மை!



வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

— பூதலூர் முத்து **4**

காலை வழிபாட்டு நேரம். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது.

தலைமை ஆசிரியர் தமிழன்பன் மாணவர்களின் பிறந்த நாள் பட்டியலைக் கையில் வைத்துக் கொண்டிருந்தார். வழிபாட்டு நேரத்தில் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கும் முறையை அவர் அண்மையில் கொண்டு வந்திருந்தார்.

''அன்புள்ள மாணவச் செல்வங்களே! இன்று பிறந்த நாள் கொண்டாடும் மாணவன் பத்தாம் வகுப்பு 'அ' பிரிவைச் சேர்ந்த ராமு. அவனை இங்கு அழைக்கிறேன்'' என்று அறிவித்தார்.

அவன் வந்து அவருக்கருகில் நின்றான். அவர் அவனுடைய முதுகில் அன்போடு தட்டிக் கொடுத்தார். அவனுடைய முகத் தெளிவைக் கண்டு அவருடைய உள்ளம் மகிழ்ந்தது.

''மாணவர்களே! ராமுவைப் பற்றி நான் உங்களிடம் விரிவாகச் சொல்ல வேண்டும். அவன் ஓர் ஏழை மாணவன். ஆனால் தன்னுடைய வறுமையைக் கண்டு பயந்து விடாமல், அதை விரட்டியடிக்க ஒரு யுத்தம் தொடங்கியிருக்கிறான். அந்த யுத்தத்தில் அவனுடைய ஆயுதங்கள் எவை தெரியுமா? விடா முயற்சியும் அயராத உழைப்பும்

தாம்!

விடிகாலையில் எழுந்து செய்தித் தாள்களை எடுத்துச் சென்று வீடு வீடாகப் போடுகிறான். அதன் மூல மாக மாதந்தோறும் கிடைக்கும் தொகையைத் தன் பெற்றோரிடம் கொடுக்கிறான்.

ஆலமரத்தை விழுதுகள் தாங்கு வதைப் போல ராமு தன் குடும்பத்தை இப்போதே தாங்கத் தொடங்கி விட்டான். படிப்பிலும் வகுப்பில் அவனே முதல் மாணவனாகத் திகழ் கிறான்.

அன்புள்ள மாணவர்களே! அலாவுதீனின் அற்புத விளக்கைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். 'அப்படி ஒரு விளக்கு நம்மிடம் இருந் தால்...?' இப்படி ஒவ்வொருவரும் மனக்கோட்டை கட்டுகிறோம்.

''யாரும் கவலைப்படாதீர்கள்! உங் களிடமும் அப்படி ஓர் அற்புத விளக்கு இருக்கிறது.''

தமிழன்பன் சொன்னதைக் கேட்ட மாணவ மாணவியர் நிமிர்ந்து அமர்ந் தார்கள். அந்த அற்புத விளக்கு எது என்று அறிந்து கொள்ளும் ஆவலில் அவர்கள் இருந்தார்கள்.

''அந்த அற்புத விளக்கு உங்களி டம் இருக்கிற கல்விதான்! கல்வியைச் செம்மையாகக் கற்றால்.... ஆர்வத் தோடு கற்றால்... குறிக்கோளோடு கற்றால் உங்களைச் சூழ்ந்திருக்கும் வறுமையை விரட்டி விடலாம். பணம்... வேலை வாய்ப்பு எல்லாம் உங்களைத் தேடி வரும்.

உழைப்பு என்ற பீடத்தில் அந்த விளக்கை ஏற்றி வையுங்கள். உங் களுக்கு ஒரு வழிகாட்டியாக — முன் மாதிரியாக விளங்கும் ராமுவுக்குப் பள்ளியின் சார்பாக நல்வாழ்த்துக் களைக் கூறி இந்தத் திருக்குறள் நூலையும் அன்பளிப்பாக வழங்கு கிறேன்'' என்று அறிவித்த போது எழுந்த கரவொலி பள்ளியெங்கும் எதிரொலித்தது.

அரவிந்தன் ராமுவுக்குக் 'கேம் லின்' பேனா ஒன்று பரிசளித்தான். பகத் அழகிய புத்தகப் பை ஒன்று கொடுத்தான். அலியும் பீட்டரும் அவர்கள் வீட்டில் தயாரித்த இனிப் புப் பண்டங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

பள்ளி முடிந்ததும் ராமு அரவிந்த னிடம் ஓடி வந்தான்.

''அரவிந்தா! இன்று உங்களோடு விளையாட வர முடியாது. வீட்டில் தோட்ட வேலை இருக்கிறது. அப்பா சீக்கிரமாக வரச் சொன்னார்'' என்று சொல்லி விட்டுப் புறப் பட்டான்.

பள்ளியைத் தாண்டியிருந்த தென் னந்தோப்பு வழியாக அவனுடைய சைக்கிள் போய்க் கொண்டிருந்தது. எதிரே வேலப்பன் நின்று கொண் டிருந்தான்.

''ராமு, கொஞ்சம் நில்!''

'கோமதி நியூஸ் ஏஜன்சி' உரிமை யாளரான அவனுடைய தந்தை விம லானந்தம் ஏதாவது செய்தி சொல்லி யனுப்பியிருப்பாரோ?

ராமு நின்றான்.

''உன்னுடைய பிறந்த நாளை முன் னிட்டு என்னுடைய பரிசு இது!''

ஓர் அட்டைப் பெட்டியை அவனி டம் கொடுத்தான் வேலப்பன்.

''நன்றி வேலப்பா!'' என்றவன் பெட்டியை வாங்கிக் 'கேரியரி'ல் வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

மாதா கோவிலைத் தாண்டிச் சென்று ஒரு வேப்பமரத்தடியில் சைக் கிளை நிறுத்தினான்.

வேலப்பன் கொடுத்த பரிசு என்ன என்று அறிந்து கொள்ள அவனுக்கு மிகுந்த ஆவலாக இருந்தது.

பெட்டியைப் பிரித்தான். உள்ளே ஒரு பெரிய பொட்டலம் இருந்தது. அதைப் பிரித்தான். உள்ளே இன் னொரு பொட்டலம். பிரித்துப் பிரித் துத் தாள்களை அருகிலிருந்த குப் பைத் தொட்டியில் போட்டான். இறுதியில் ஒரு சிறிய பொட்டலம் இருந்தது. அதை எடுத்துப் பிரித்தான்.

''ராமு! நீ அரவிந்தனுடைய நட்பை விட்டு விடு! இதற்கு நீ உடன்படா விட்டால் அவனுக்கு ஏற்படும் ஆபத்து உனக்கும் ஏற்படும்... எச் சரிக்கை!'' என்று அதில் எழுதப்பட் டிருந்தது.

பிறந்த நாளில் இப்படியொரு வாழ்த்தா? ராமுவுக்கு வேடிக்கையாக வும் வியப்பாகவும் இருந்தது.

அரவிந்தன் மீது இவனுக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு? நான் அந்த நட்பைக் கைவிடுவதால் இவனுக்கு என்ன நன்மை? என் மீது இவனுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?

இந்த வினாக்கள் அவனுடைய நெஞ்சில் எழுந்தன. தோட்ட வேலைகளை முடித்த பின்னாலும் அந்த வினாக்கள் அவன் உள்ளத்திலிருந்து விடை பெறவில்லை. அரவிந்தனைப் பார்த்து விட்டு வர முடிவு செய்தான். உடனே புறப்பட்டுச் சென்றான்.

வீட்டு வாயிலில் அரவிந்தனின் சைக்கிள் நின்று கொண்டிருந்தது.

கை கால் கழுவிக் கொண்டு, பாடம் படிப்பதற்காக மாடிக்குப் போய்க் கொண்டிருந்தான் அவன். ராமு வந்திருக்கும் செய்தி அறிந்ததும் அவனை உள்ளே கூப்பிட்டான். இருவரும் மாடிக்குச் சென்றனர்.

''என்ன ராமு இந்த நேரத்தில்?'' என்றான் அரவிந்தன்.

ராமு மௌனமாக சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

''யார் இதை எழுதியது? வேலப்பனா?'' என்று அவன் கேட்டதும் ராமுவுக்கு மிகுந்த வியப்பு ஏற்பட்டது.

''எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்... எச்சரிக்கை செய்கிறேன்... இப்படியெல்லாம் பேசுவது அவன் தானே...! அதனால் சொன்னேன்..''

''ஏன் அவனாகவே வம்புக்கு வருகிறான்?''

''நிறைய வசதி.. படிப்பு வரவில்லை... அதனால் வம்புக்கு வருகிறான். நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.''

''நீயும் வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன்தானே... நீ மட்டும் ஏன் நல்லவனாக இருக்கிறாய்?''

''ராமு! நமக்கு அமையும் குணத்திற்கு நம்முடைய பெற்றோர், நாம் படிக்கும் பள்ளி, நம்முடைய ஆசிரியர், நம்முடைய நண்பர்கள் இப்படிப் பல காரணங்கள் உண்டு. அவன் ஏதோ ஒரு சூழ்நிலையில் இப்படி நடந்து கொள்கிறான். அவன் கெட்டவனாக இருக்க முடியாது.''



அரவிந்தன் சொன்ன பதில் ராமுவின் இதயத்தை நெகிழ வைத்தது.

'எப்படிப்பட்ட உயர்ந்த உள்ளம் உடையவன் அரவிந்தன்! இவனுடைய நட்பை விட்டு விடும்படி அவன் எச்சரிக்கை விடுக்கிறானே! என்ன சூழ்நிலை வந்தாலும் உயிரினும் இனிய இந்த நட்பை நான் கைவிட மாட்டேன்'

ராமு உறுதியெடுத்துக் கொண்டான்.

காரில் வந்து கொண்டிருந்தார் தியாகராஜன். முதல் நாள் இரவு அவருக்கு வந்த டெலிபோன் பற்றிய சிந்தனையில் அவருடைய உள்ளம் ஈடுபட்டிருந்தது.

''அரவிந்தன் பகுத்துக்கு உதவிகள் செய்தால்... தியாகராஜன் பல்பீர் குடும்பத்துக்கு உதவிகள் செய்தால் வீணான தொல்லைகள் வரும்'' என்று அரவிந்தனையும் தியாகராஜனையும் எச்சரிக்கை செய்தது அந்த மர்மக் குரல்.

அந்த எச்சரிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல், பொழுது விடிந்ததும் பல்பீர் சிங்கையும், பகத்தையும் பார்த்து நலம் விசாரித்து விட்டு, தேவைப்படும் உதவிகள் பற்றிக் கேட்டு விட்டு ஆலைக்குச் சென்றார்.

எச்சரிக்கை பற்றிக் கவலைப்படா விட்டாலும் அதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள அவர் உள்ளம் விழைந்தது.


வீட்டு வாயிலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.


''அப்பா வந்து விட்டார்! வா கீழே போகலாம்'' என்று ராமுவை அழைத்துக் கொண்டு கீழே இறங்கினான் அரவிந்தன்.

''வா ராமு! உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். இன்று உனக்குப் பிறந்த நாள் ஆயிற்றே!''

அவருடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

'எவ்வளவு பெரிய மனிதர்! இந்த ஏழைச் சிறுவனின் பிறந்த நாளைக் கூட நினைவில் வைத்திருக்கிறாரே!'





வியப்பால் அவனுடல் புல்லரித்தது.

''அரவிந்தன் அவனுடைய அன்பு நண்பர்களின் பெயர்களையும் பிறந்த நாள்களையும் முன்பே என்க்குக் குறித்துக் கொடுத்திருக்கிறான். அவர்களுடைய வீடு தேடிச் சென்று அவர்களுக்கு வாழ்த்துக்களைக் கூறிப் பரிசளித்து வருகிறோம். காலையிலிருந்தே உன் நினைவுதான். இப்போது தான் ஒய்வு கிடைத்தது. உன் வீட்டுக்குப் புறப்பட நினைத்த போது நீயே வந்து விட்டாய். வா எல்லாருமாக உன் வீட்டுக்குப் போகலாம்'' என்றார் அவர்.

கார் புறப்பட்டது.

தியாகராஜன் ராமுவை வாழ்த்திப் புத்தாடை பரிசளித்தார். அவனுடைய பெற்றோருக்கும் தங்கை கமலாவுக்கும் உடைகள் அளித்தார்.

வீட்டில் மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கி வழிந்தன.

மறுநாள் காலை ராமு மிகுந்த சுறுசுறுப்போடு செய்தித்தாள் கட்டுக்களைப் பெற்றுக் கொள்ள 'கோமதி நியூஸ் ஏஜன்சி'க்குச் சென்றான்.

விமலானந்தம் ஏற்கெனவே அட்டைக் கறுப்பு. அத்தோடு கம்பளிச் சால்வையை வேறு போர்த்திக் கொண்டு நின்றார். எஞ்சின் புகை விடுவது போல சிகரெட் புகையை விட்டுக் கொண்டிருந்தார்.

வந்து நின்ற ராமுவை மேலும் கீழும் பார்வையால் அளந்தார்.

''டேய் ராமு! பிறந்த நாளைக் கொண்டாடுகிற அளவுக்கு உன் தகுதி உயர்ந்து போய் விட்டது. இல்லையா?''

கைகளை அசைத்து தலையை ஆட்டி அவர் வெறுப்பைக் கக்கினார்.

'நான் எங்கே கொண்டாடினேன்? எங்கள் பள்ளித் தலைமையாசிரியர் அன்பே உருவான மாணிக்கம். அவர் அன்றாடம் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்கிறார். தியாகராஜன் ஏழை, பணக்காரர் வேறுபாடு இல்லாமல் பிறருக்கு உதவுவதையே இலட்சியமாகக் கொண்டவர். அவர் நினைவு வைத்திருந்து பரிசளித்தார். இவர் ஏன் இவ்வளவு வெறுப்படைய வேண்டும்?'

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''ராமு! இனிமேல் உனக்கு இங்கே வேலையில்லை.. நீ போகலாம்.''

இவ்வளவு நேரமும் புகைந்து இப்போது தீயாக வெளிப்பட்டு விட்டதே!


ராமுவின் இதயம் வேதனையில் துடித்தது.

(தொடரும்)

பிருந்தாவனக் கதையரங்கம்

மாறியது மனசு!

ஆரு. அண்ணாதுரை.
(10403)



"அம்மா! நான் இனிமேல் பள்ளிக் கூடத்திற்குப் போக மாட்டேன்" என்றான் துரை.

"என்னாச்சுடா உனக்கு!" என்று கேட்டாள் அவனுடைய தாயார் பிரமம்மாள்.

"எனக்கு ஒண்ணும் ஆகல்லே. ஆனால், பள்ளிக்கூடம் போக விருப்பமில்லை."

"ஸ்கூலுக்குப் போகலேன்னா, எக்கேடு கெட்டுப் போ" என்று கூறிவிட்டு, கூலி வேலைக்குச் சென்றுவிட்டாள் பிரமு அம்மாள்.

துரை, எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவன். அவனுக்குக் கணக்கு என்றால் வேப்பங்காய் மாதிரி. நேற்றுக் கூட, கணக்கு ஆசிரியர், வீட்டுக் கணக்குச் செய்து விட்டு வரவில்லை என்பதற்காக அடித்து விட்டார் துரையை. 'இனிமேலும் இப்படி அடிபட முடியாது' என்பதற்காகப் படிப்புக்கு முழுக்குப் போடத் தீர்மானித்தான் துரை.

அன்று முழுவதும் துரை பள்ளிக்கூடம் செல்லவில்லை. வீட்டிலேயே இருந்தான்.

மறுநாள் காலையில் ரிக்ஷாக்காரர் ஒருவர் சிறுவன் ஒருவனை அடித்துக் கொண்டிருந்தார். அந்தப் பக்கமாகச் சென்ற துரை,

"ஏன் பெரியவரே, இவனைப் போட்டு இப்படி அடிக்கிறீங்க? அப்படி என்ன தப்புப் பண்ணிட்டான்?" என்று கேட்டான்.

பெரியவர் அமைதியாய்ப் பதில் சொல்லத் தொடங்கினார். "தப்புப் பண்ணியிருந்தாக்கூட அடிக்க மாட்டேன். மன்னிச்சிருப்பேன். ஆனால், பள்ளிக்கூடம் போக மாட்டேன் என்று அடம் பிடிக்கிறான். இப்போ தம்பி, நீயே சொல்லு, நான் அடிக்கிறது தப்பா?"

துரைக்கு எங்கேயோ வலித்தது. பெரியவர் மேலும் பேசத் தொடங்கினார், "இதோ பாரு தம்பி! என்னை எடுத்துக்கோ, நான் சின்ன வயசில் மூணாம் வகுப்பு படிச்சிட்டு இருக்கிறப்போ எனக்குச் சுத்தமாக் கணக்கே வராது. ஒருநாள் கணக்கு வாத்தியாரு கணக்குச் செஞ்சிட்டு போகலேன்னு செம்மையாய் உதைச்சாரு. அதுக்கப்புறம் உதைக்குப் பயந்து பள்ளிக் கூடத்திற்குப் போவதையே நிறுத்திட்டேன். என் கூடப் படிச்சவங்க எல்லோரும் இன்னிக்குப் படிச்ச நல்ல வேலையில் இருக்கிறாங்க; நல்ல நிலைமையிலே இருக்


காங்க. நான் மட்டும் ரிக்ஷா இழுத்துக்கிட்டு இருக்கேன். வெயிலிலும், மழையிலும் பகலிலும், ராத்திரியிலும் கஷ்டப்பட்டு இழுக்கிறேன். அன்னிக்கு வாத்தியாரு அடிச்சிட்டாருன்னு பள்ளிக் கூடத்திற்குப் போகாமே இருந்திட்டது எவ்வளவு பெரிய தப்புன்னு தினமும் நினைச்சு வருந்துறேன். என்னைப் போல என் மகன் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக அடிக்கிறேன்.''

பெரியவர் சொல்லிக்கூட முடித்திருக்க மாட்டார்.

துரை ஓட்டமும் நடையுமாக வீட்டிற்கு வந்தான். 'ஆசிரியர் தண்டிக்கிறது நம்மைப் படிக்கவைக்கிறதுக்குத்தான். அடிக்குப் பயந்து பள்ளிக் கூடத்திற்குப் போகாமே இருக்கக் கூடாது. இனிமேல் ஒழுங்காகப் பள்ளிக் கூடத்துக்குப் போகணும்' என்ற முடிவோடு,

துரை புத்தகப் பையை எடுத்துக் கொண்டு, ''அம்மா, பள்ளிக் கூடத்திற்கு நேரமாச்சு'' என்று சொல்லிக் கொண்டு ஓடினான்.

மகனின் மனமாற்றத்தைக் கண்டு மகிழ்ந்து மகன் ஓடுவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தத் தாய்.



கதிர்ச் செல்வன் கடலாடி எழும் கவின் காலைப் பொழுது —

மெல்லக் கண் விழித்தாள் மாதுளா. அறை முழுவதும் குழல் விளக்கின் வெண்ணொளி பரவியிருந்தது. வந்ததே கோபம்.

''யார் என்னுடைய அறையில் விளக்கை எரிய விட்டது?'' குரலெடுத்துக் கத்தினாள்.

''மாதுளா! ஏன் கத்துகிறாய்? நேற்றிரவு மின்சாரத் தடை காரணமாக விளக்கு எரியவில்லை. நீயும் ஸ்விட்சை ஆஃப் பண்ணாமலே படுத்திருக்கிறாய். மின்சாரம் வந்ததும் விளக்கு எரியக் காரணம் யார்? நீதானே''. என்றாள் மதுரா—மாதுளாவின் அக்காள்.

''உன்னை யார் கேட்டது? உன் வாயை மூடிக் கொண்டு போ!'' மீண்டும் கத்தினாள் மாதுளா.

''மாது! 'கோபத்தோடு எழுபவன் நஷ்டத்தோடு படுக்கைக்குச் செல்வான்' என்பது ஒரு ருமேனியப் பழமொழி. இனிமையான காலைப் பொழுதில் ஏன் கோபப்படுகிறாய்?'' கனிவோடு கூறினாள் மதுரா.

''அக்கா! நீ ஃபிலாஸபி படிப்பது இங்கு எல்லோருக்கும் தெரியும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது. எல்லாம் எனக்குத் தெரியும்'', என்றபடியே அருகிலிருந்த புத்தகங்களையெல்லாம் வீசியெறிந்தாள்.

அன்று முழுவதும் அவளை அணுக முயன்ற எல்லாருக்கும் இதே கதிதான். அவள் பள்ளிக்கும் செல்லவில்லை. அன்று அவளைச் சந்திக்க வந்த தோழியையும் தன்னுடைய கோபத்துக்குப் பலியாக்கினாள். அவளைச் சமாதானப்படுத்த பெற்றோரும் அன்று ஊரில் இல்லை.

இரவுப் பொழுதும் வந்தது. நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்த மாதுளா புத்தகங்கள் சிலவற்றை எடுக்கத் தன்னுடைய மேஜையின் இழுப்பறையைத் திறந்தாள். திறந்தவள் அதிர்ந்தாள்.

அதனுள் கட்டி வெண்ணெயில் நீல மணிகளை வரிவரியாய்ப் பதித்தாற் போன்று அழகிய எழுத்துக்களால் நிரப்பப்பட்டிருந்த நீண்ட வெள்

ளைத் நாள்கள் கண்ணில் பட்டன.

பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாகக் கொண்டு மாதுளா தயாரித்திருந்த அரிய கட்டுரைதான் அதில் அடங்கியிருந்தது. மாநில அளவில் நடைபெறும் கட்டுரைப் போட்டி ஒன்றுக்கு அனுப்பவே அதனைத் தயாரித்திருந்தாள்.

ஆசிரியைகளிடமும் வீட்டில் அனைவரிடமும் காட்டிய போது அவளின் திறம் கண்டு வியந்து 'உனக்குத்தான் முதல் பரிசாகிய தங்கப் பதக்கம்' என்று பாராட்டியிருந்தார்கள். இது தவிரப் போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் ஆறுதல் பரிசும் உண்டு.

கட்டுரையை அனுப்ப அன்றுதான் கடைசி நாள். ஆத்திரத்தில் மூழ்கி, அறிவிழந்து கிடந்த மாதுளா அதனை அனுப்பத் தவறி விட்டிருந்தாள்.

முதல் பரிசே தனக்குத்தான் என்று எண்ணியிருந்தவளுக்கு ஆறுதல் பரிசு கூடக் கிடைக்காது. ஏமாற்றத்தால் மாதுளாவின் கண்களில் நீர் திரண்டது. மெல்ல அழத் தொடங்கினாள். ருமேனியப் பழமொழி மனத்தில் நிழலாடியது.

'கோபத்தோடு எழுந்தவன் நஷ்டத்தோடு படுக்கைக்குச் செல்வான்'.



ஆம். அன்று கோபு தன் அம்மா முத்தாயியுடன் அவள் வேலை பார்க்கும் பங்களாவில் ஒரு மூலையில் தயங்கி நின்று டீ.வி. பார்த்துக்கொண்டிருந்தான். செய்திகள் வாசித்த பிறகு, காணாமற் போனவர்களின் அறிவிப்பை ஓர் அம்மையார் வாசித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட கோபுவுக்கு ஓர் ஆசை தோன்றியது.

அன்று இரவு கோபு, தன் அம்மாவிடம், ''அம்மா! டீ.வி.யில் காணாமல் போனவர்கள் என்று படம் காட்டினார்களே...'' என்று ஆரம்பித்தான்.

''அதுக்கென்ன? காணாமல் போனால்தான் அப்படிப் படம்போட்டுக் காட்டுவார்கள். ஏன் நீ அதைப் பத்திக் கேட்கிறாய்?''

''சும்மாதாம்மா''

மறுநாள் தன் அழுக்கேறிய டிராயரைப் போட்டுக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பியவன், தன் தாயிடம் வந்து, ''அம்மா! நான்கூட டீ.வி.யில் தெரியப் போகிறேன்; வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஓடினான்.

முத்தாயி அவசரமாக வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்ததால், அவன் பேச்சைச் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவள் எப்போதும் போல் வேலைக்குச் சென்றாள். வேலை முடிந்து மாலையில் வீடு திரும்பினாள். மகனுக்குப் பிடித்த கத்திரிக்காய்த் துவையலைப் பருப்பு இல்லாமல் அரைத்து வைத்தாள்.

மாலையில் வழக்கமாக வரும் நேரம் ஆகியும் கோபு வரக் காணோம். வருவான், வருவான் என்று காத்திருந்தாள். நேரம் ஆக ஆக அவள் நெஞ்சு படபடத்தது. இரவு எட்டு மணியாகி விட்டது. மகன் திரும்பி வரவில்லை.

உடனே, அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டாள். அவள் பள்ளி விட்டு வரும் வழிகளையெல்லாம் தன் கண்களால் அலசினாள். அவனது பள்ளித் தோழர்களில் சிலரை விசாரித்தாள். யாரும் சரியான பதில்

கூறவில்லை. அலைந்து அலைந்து அவள் கால்கள் தளர்ந்ததுதான் மிச்சம்.

இரண்டு நாட்கள் ஓடி விட்டன. 'மகனே மகனே' என்று வாய் விட்டு அழுதபடி படுத்திருந்தாள் கோபுவின் அம்மா.

அவள் அவ்வப்போது கிடைக்கும் அரிசியைப் போட்டு வைக்கும் ஒரு பெரிய பானை அப்போது லேசாக ஆடியது. ''சே, இந்தக் குடிசையிலே எலி பண்ணும் அட்டகாசம் தாங்க முடியல்லே'' என்று கூறியபடி, மகனைக் காணாத ஆத்திரத்தில் அருகில் கிடந்த ஒரு கம்பை எடுத்துக் கொண்டு எலியைத் தேடிப் போனாள். அப்போது பானையின் பின்னால் ஒளிந்திருந்த கோபு, ''அம்மா, அம்மா, என்னை அடிக்காதே அம்மா! இனிமேல் இப்படியெல்லாம் செய்யமாட்டேன்'' என்று 'ஓ' வென்று அழுதான்.

அழுத அவனை முத்தாயி அன்போடு அணைத்துக் கொண்டு ''கோபுக் கண்ணா! நீ எங்கேயடா போனாய்? எப்போது இங்கு வந்தாய்? நான் உன்னைத் தேடித் தேடி அலுத்து விட்டேனே! உன்னைத் திட்டினேனா? அடித்தேனா? ஏன் காணாமல் போனாய்?'' என்று கேட்டாள்.

''நான் காணாமல் போனால் என் படம் டீ.வி.யில் வரும் என்றுதான் வீட்டை விட்டு ஓடிப் போனேன். ரெண்டு நாளாய்ப் பட்டினி. கஷ்டம் தாங்காமல் திரும்பி வந்து விட்டேன். உங்கள் முகத்தில் விழிக்கவே அவமானமாயிருந்தது. அதனால்தான் மெதுவா உள்ளே வந்து உங்களுக்குத் தெரியாமல் பானையின் பின்னால் ஒளிந்தேன்.''

அப்போது அந்தப் பக்கமாக வந்த அவன் பள்ளி ஆசிரியர், கோபுவைப் பற்றித் தெரிந்து கொள்ள வீட்டுக்குள் எட்டிப் பார்த்தார். அம்மாவும் மகனும் பேசுவதைக் கண்ட அவர், ''கோபு!'' என்று அழைத்ததும், அம்மாவும் மகனும் அவர் அருகிலே வந்தார்கள்.

''கோபு, பாவம்,உன் படம் டீ.வி.யில் தெரிய வேண்டுமென்பதற்காகவா இப்படிச் செய்தாய்? நீயோ நன்றாகப் படிக்கக் கூடியவன் வகுப்பிலே முதல் மாணவன். நீ நன்றாகப் படித்து, தமிழகத்திலே முதல் மார்க் வாங்கினால், டீ.வி.க்காரர்கள் உன்னைப் பேட்டிக் கண்டு, உன் படத்தையும் உன் பேச்சையும் ஒளி பரப்புவார்களே'' என்றார்.

அன்றே கோபுவின் உள்ளத்தில் வீர வைராக்யம் பிறந்தது. எப்படியும் டீ.வி.யில் தெரிய வேண்டும் என்ற ஆர்வத்தில் நன்றாகப் படிக்க ஆரம்பித்தான்.

அந்த ஏழைத் தாயின் ஆசையும், அந்தப் பிள்ளையின் ஆசையும் நிறைவேறப் பிரார்த்திப்போமாக!



மலச்சிக்கலைத் தவிர்ப்பது எப்படி?

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. மாலை நேரம். முன் பக்க வராந்தாவில் ஓய்வாக இருந்தேன்.

அப்போது, அடுத்த வீட்டு அம்புஜமும், அவள் மகள் அனிதாவும் வந்து கொண்டு இருந்தனர்.

அம்புஜம்: வணக்கம், டாக்டர்!

அனிதா: வணக்கம், மாமா!

நான்: வாங்க வணக்கம். என்ன அனிதா, டீ.வி. பார்க்க வந்தீர்களா?

அனிதா: இல்லை மாமா, நாங்கள் டீ.வி. பார்க்கவரவில்லை. உங்களைப் பார்க்கவே வந்து இருக்கிறோம்.

நான்: என்னைப் பார்க்கவா? என்ன விஷயம்?

அனிதா: சும்மாதான் மாமா... (தயங்குகிறாள்)

நான்: என்ன விஷயம் அனிதா? தயங்காமல் சொல்.

அம்புஜம்: மன்னிக்கணும் டாக்டர், உங்களை விடுமுறை தினத்தில் கூட தொந்தரவு செய்வதற்கு வருந்துகிறோம். அனிதாவுக்கு ஒரு சிக்கல், டாக்டர். அதை உங்களிடம் சொல்வதற்கு வெட்கப்படுகிறாள்.

நான்: என்ன சிக்கல்?

அம்புஜம்: அனிதாவுக்கு இரண்டு நாட்களாக மலச்சிக்கல். அதை எங்களிடம் சொல்லாமல் மறைத்து விட்டாள். இன்று காலையில் அதனால் மிகவும் கஷ்டப்பட்டு விட்டாள். இந்த மலச்சிக்கல் அவளுக்கு அடிக்கடி வருகிறது, டாக்டர். நாங்களும் அதைக் கவனிக்காமல் அலட்சியமாக இருந்து விட்டோம். இன்று அனிதா பட்ட வேதனையைப் பார்த்ததும், இனிமேலும் கவனிக்காமல் இருந்தால் ஏதேனும் விபரீதம் நிகழ்ந்து விடுமோ என்று பயந்து விட்டோம். அதனால் தான் உங்களிடம் வந்து மலச்சிக்கலைப் பற்றித் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

நான்: அப்படியா! பயப்படாதீர்கள். மலச்சிக்கல் என்பது சாதாரணப் பிரச்னைதான். ஆனால், பெரும்பாலோர் அதை முறையாகக் கவனிக்காமல் அலட்சியப்படுத்தி விடுகிறார்கள். அதனால்தான் மலச்சிக்கலால் அநேகம் பேர் கஷ்டப்படுகிறார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரைக்கும் இந்த மலச்சிக்கல் தொந்தரவு இருந்து வருகிறது.

அனிதா: டாக்டர் மாமா, மலச்சிக்கல் எதனால் வருகிறது? அதை நான் தெரிந்து கொள்ளலாமா?

நான்: தாராளமாகத் தெரிந்து கொள், அனிதா! மலச்சிக்கல் வருவதற்கு முதல் காரணம் தினமும் முறையாக மலம் கழிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்காததுதான். அதாவது மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு வரும் போது, சோம்பேறித்தனம் காரணமாகவோ, இடம், நேரம், கழிப்புறை வசதி இல்லாத காரணத்தாலோ, தோன்றிய உணர்வைச் சிலர் தள்ளிப் போட்டு விடுவார்கள். இதனால் நாளடைவில் அவர்களுக்கு மலச்சிக்கல் வந்து விடு

டாக்டர் கு. கணேசன்

கிறது.

மலச்சிக்கல் வருவதற்கு இரண்டாவது காரணம் முறையான உணவுப் பழக்கம் இல்லாமை. அதாவது, உணவில் போதிய அளவு காய்கறிகள், கீரை, பழங்கள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும் மலச்சிக்கல் வரும். அதே மாதிரி நேரம் தவறி உணவு சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கும் மலச்சிக்கல் வரும்.

அடுத்தபடியாக நாம் சாப்பிடும் போதும், சாப்பாட்டு இடைவெளி நேரங்களிலும் போதிய அளவு தண்ணீர் சாப்பிடும் பழக்கம் இல்லாவிட்டாலும் மலச்சிக்கல் வரலாம்.

அதிகமாகக் காப்பி, டீ சாப்பிடும் பழக்கத்தினாலும் மலச்சிக்கல் வரலாம்.

டைபாய்டு, மூளைக் காய்ச்சல் போன்ற விஷக் காய்ச்சல்களின் போதும், வேறு ஏதேனும் பலத்த நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் போதும் போதிய அளவு ஆகாரமும், தண்ணீரும் எடுத்துக் கொள்ள இயல்வதில்லை. இம்மாதிரிச் சமயங்களிலும் மலச்சிக்கல் உண்டாகும்.

குடலில் 'அமீபா' எனப்படும் சீதபேதிக் கிருமிகள் இருந்தாலும், க்ஷயரோகக் கிருமிகள் இருந்தாலும் மலச்சிக்கல் வரலாம். கடைசியாக, குடலில் ஏதேனும் சுருக்கம், அடைப்பு, புற்றுநோய்க் கட்டிகள் இருந்தாலும் மலச்சிக்கல் வரலாம்.


அம்புஜம்: ஏன் டாக்டர், மலச்சிக்கலின் போது மலம் மிகவும் இறுகிப் போய் விடுகிறதே... அது ஏன் டாக்டர்?

நான்: மலம் குடலில் இருந்து முறையாக வெளியேற்றப்படலாம். மணிக்கணக்கிலோ, நாள் கணக்கிலோ தங்கி விட்டால், மலத்தில் உள்ள தண்ணீரைக் குடல் நன்றாக உறிஞ்சிவிடும். இதனால்தான் மலச்சிக்கல்களின் போது மலம் மிகவும் கெட்டியாக இறுகி விடுகிறது.

அனிதா: மாமா, மலச்சிக்கல் சாதாரண பிரச்னை என்றீர்களே... அதனால் நமக்கு எந்தவிதத் தீமைகளும் கிடையாதா?

நான்: மலச்சிக்கலினால் நமக்குப் பல தீமைகள் உண்டாகின்றன.

அனிதா: அப்படியென்றால்



அவற்றைப் பற்றியும் எனக்குச் சொல்லுங்களேன்.

நான்: சொல்கிறேன் கேள் அனிதா. மலச்சிக்கல் காரணமாகத்தான் 'மூலம்' (PILES) எனப்படும் வியாதி நமக்கு வருகிறது. மலச்சிக்கல் அடிக்கடி வருகிறவர்களுக்கு மலக்குடலில் கீறல் விழுந்து வேதனை உண்டாகும். இதனால் மலத்தோடு இரத்தமும் வெளியேறும். இவையெல்லாம் மலச்சிக்கலால் வரக்கூடிய தொந்தரவுகள் தானே! இதே மாதிரி மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு அடிக்கடி தலைவலி உண்டாகும். உன்னை மாதிரி சிறுவர், சிறுமிகளுக்கு வயிற்று வலி உண்டாகும். இதுதவிர மலச்சிக்கலினால் நச்சுப் பொருள்கள் குடலில் சேர்ந்து துர்நாற்றம் அடிக்கும். வாயு அடிக்கடி வெளியேறும்.

அம்புஜம்: சரி டாக்டர், மலச்சிக்கல் வந்து விட்டால் என்ன செய்வது? அதைப் பற்றியும் எங்களுக்குச் சொல்லுங்களேன்...

நான்: மலச்சிக்கல் உள்ளவர்கள் தினமும் இரவு படுக்கச் செல்லும் போது பேரபின் எண்ணெய் (LIQUID PARAFFIN) சுமார் இருபது மில்லி லிட்டர் குடிக்கலாம்.

காலையில் எழுந்ததும் மூன்று தம்ளர் வெதுவெதுப்பான தண்ணீரைப் பருகலாம்.

மலக்குடலில் மிகவும் இறுகிப் போன மலத்தை வெளிப்படுத்த சிறிய சோப்புத் துண்டை வெந்நீரில் நனைத்து ஆசன வாயில் நுழைத்து விட்டால் மலம் இளகி வெளியேறி விடும். ஆனால், இதையே பழக்கமாக வைத்துக்கொண்டால், அது உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும். சில சமயங்களில் மேற்சொன்ன முறைகள் பயன் தராது. அப்போது மலமிளக்கி மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையுடன் இரவு படுக்கச் செல்லும் போது சாப்பிடலாம். மேற்சொன்ன முறைகள் அனைத்துமே பயன் தராவிட்டால் 'எனிமா' கொடுத்து மலத்தை வெளியேற்ற வேண்டி இருக்கும். இதை டாக்டர்களின் உதவியுடன்தான் செய்ய வேண்டும்.

பொதுவாக அடிக்கடி மலச்சிக்கல் வருபவர்களுக்கு அதற்கான காரணத்தைக் கண்டறிந்து மருத்துவம் பெறுவதே நல்லது.

அம்புஜம்: சிலர் அடிக்கடி பேதி மாத்திரைகளைக் கடைகளில் வாங்கி மருத்துவர்களின் ஆலோசனை இல்லாமல் அவர்களாகவே சாப்பிட்டுக் கொள்கிறார்களே... இதனால் கெடுதல் இல்லையா, டாக்டர்?

நான்: நிச்சயமாகக் கெடுதல் உண்டு. எப்படி என்பதைச் சொல்கிறேன் கேளுங்கள். அடிக்கடி பேதி மாத்திரை சாப்பிடுவதால் நாம் சாப்பிட்ட உணவில் உள்ள சத்துக்கள் இரத்தத்தில் கலக்காமல் வேகமாகப் பெருங்குடலை அடைந்து மலமாக வெளியேறி விடும். இதனால் நமக்கு நஷ்டம்தானே! இது போக அடிக்கடி பேதி மாத்திரை சாப்பிடுபவர்களின் மலக்குடல் வீணாக விரிந்து போகும். மலக்குடலின் சதைகளில் இயக்க சக்தி குறைந்து போகும். இதனால் மலத்தை வெளியேற்றும் சக்தியும் குறைந்து போகும். இதன் காரணமாக மீண்டும்மீண்டும்மலச்சிக்கல் உண்டாகும். ஆக, மலச்சிக்கலைத் தீர்ப்பதற்காக இவர்கள் அடிக்கடி உபயோகிக்கும் பேதி மாத்திரைகளே மீண்டும் அவர்களுக்கு மலச்சிக்கலை உண்டு பண்ணி விடுகின்றன. இதனால்தான் பேதி மாத்திரைகளை மருத்துவரின்



"சார், எந்த மாதிரி உங்களுக்கு முடி வெட்டணும்?"

"என் முகத்துக்கு எது எடுப்பா இருக்குமோ அப்படிப் பண்ணு..."

"அப்படியா? அப்ப மொட்டை அடிச்சுடறேன்!"

ஆலோசனை இல்லாமல் தாங்களாகவே எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்கிறோம்.

அனிதா: மாமா, இந்த மலச்சிக்கலைத் தவிர்க்க வழி முறைகள் கிடையாதா?

நான்: ஏன் இல்லை? நிறைய இருக்கிறது...

அனிதா: அப்படி என்றால் அந்த வழி முறைகளையும், எனக்குச் சொல்லுங்களேன். அவற்றை நான் கடைப்பிடிக்க விரும்புகிறேன்.

நான்: அனிதா, மலச்சிக்கலைத் தவிர்க்க வேண்டும் என்றால், முதலில் நீ முறையாக தினமும் மலமும் கழிக்கப் பழக வேண்டும். அதாவது தினமும் காலையிலோ, மாலையிலோ அல்லது இரு வேளைகளிலுமோ மலம் கழிக்க வேண்டும். உன்னை மாதிரிச் சிறுமிகள், சிறுவர்கள் இப் பழக்கத்தைச் சிறு வயதிலிருந்தே கடைப்பிடிக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு வரும்போது அதைத் தள்ளிப் போடக் கூடாது.

— நீ சாப்பிடும் உணவில் அதிகமாகக் காய்கறிகளையும் கீரை வகைகளையும் சேர்த்துக் கொண்டால், மலச்சிக்கலைத் தவிர்க்கலாம். தினமும் இரவில் இரண்டு வாழைப் பழங்களைச் சாப்பிட்டு வந்தாலும் மலச்சிக்கலை நிச்சயம் தவிர்க்கலாம்.

— நீ சாப்பிடும் போதும், சாப்பாட்டு இடைவேளைகளின் போதும் அதிகமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். அதே போல் தினமும் இரவில் படுக்கச் செல்லும் போதும், படுக்கையை விட்டுக் காலையில் எழுந்தவுடனும், இரண்டு தம்ளர் தண்ணீர் சாப்பிடும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.


— காய்ச்சலின் போதும், மற்ற நோய்களின் போதும் அதிகமாகத் திரவ உணவுகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால், மலச்சிக்கலைத் தவிர்க்க முடியும்.

— கடைசியாக மலச்சிக்கலைத் தவிர்க்க நல்ல உடற்பயிற்சிகளும் அவசியம். அதாவது, தினமும் காலையில் எழுந்ததும் சுமார் அரை மணி நேரம் வேகமாக நடக்க வேண்டும். அல்லது ஓடலாம். நடப்பதற்கும் ஓடுவதற்கும் சோம்பல் படுபவர்கள் அரை மணி நேரம் சைக்கிள் ஓட்டலாம். இதுவும் நல்ல உடற்பயிற்சிதான்.


— அனிதா, உன்னை மாதிரி உள்ள சிறுமிகள் வீட்டில் இருந்து கொண்டே பலமுறை உட்கார்ந்து எழுந்திருப்பது, குனிந்து நிமிர்வது போன்ற எளிய உடற்பயிற்சிகளைச் செய்யலாம். இம் மாதிரிப் பயிற்சிகள் செய்வதால் குடல் தசைகள் சுறுசுறுப்பு அடைந்து மலத்தை எளிதாக வெளியேற்றி விடும். இதன் மூலம் மலச்சிக்கலைத் தவிர்க்கலாம்.

அனிதா: நன்றி டாக்டர், மலச்சிக்கலைப் பற்றி நிறையச் சொன்னீர்கள், அதைத் தவிர்க்கும் முறைகளையும் எனக்கு விளக்கினீர்கள். இனிமேல் நீங்கள் சொன்ன முறைகளைத் தினமும் கடைப்பிடித்து, மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்கிறேன், டாக்டர்!''

அம்புஜம்: ரொம்ப நன்றி டாக்டர். நாங்கள் மிகவும் பயந்து வந்தோம். மலச்சிக்கலைப் பற்றி எங்களுக்கு விளக்கமாகச் சொல்லித் தெளிவுபடுத்தி விட்டீர்கள். மீண்டும் நன்றி, டாக்டர். வருகிறோம்!



அதுவும் ஒரு தொண்டு தானே!



-மாயன்-

எடப்பாளையம் என்று அந்த இடத்தைக் குறிப்பிடுவார்கள். அது அந்தக் காலம். இப்பொழுது எல்லாமே மாறிக் கொண்டு வருகின்றன. இப்பொழுது அந்தப் பகுதிக்கு பி. ஆர். ஸ்கொயர் என்று பெயர் வைத்து விட்டார்கள்.

அங்குதான் ராமகிருஷ்ணய்யங்கார் குடி இருக்கிறார். பக்கத்திலேயே, சௌகார்ப் பேட்டையில், ஒரு மருந்துக் கடையில் வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறார். அவர் மனைவி பத்மாவதி மிகவும் நல்ல குணம் படைத்தவள். அவர்களுக்கு நரசிம்மன் ஒரே பையன். அவன் பக்கத்திலேயே அரசினர் மேல் நிலைப் பள்ளியில் ஒன்பதாவது படித்துக் கொண்டு இருக்கிறான்.

அந்த வருடம் கணக்கு, விஞ்ஞானப் பாடங்கள் கொஞ்சம் கடினமாக இருக்கின்றன என்று அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான். அதனால் ராமகிருஷ்ணய்யங்கார் டியூஷனுக்கு ஏற்பாடு செய்தார். நரசிம்மனைப் போலவே அவன் வகுப்பில் படிக்கும் வேறு சில மாணவர்கள் கூட அந்த ஆசிரியரிடமே 'டியூஷனுக்கு' வந்து சேர்ந்தார்கள். அவர்களும் கணக்கு, விஞ்ஞானப் பாடங்களில்தான் ரொம்பவும் 'வீக்.' எல்லாரும் ஒன்றாக அக்கறையோடு படித்தார்கள். வகுப்பு மாணவர்களைவிட 'டியூஷன்' மாணவர்களிடம் நட்பும் விளையாட்டும் அதிகமாயின.

நரசிம்மன் தன் பள்ளித் தோழர்கள் கோபால், ராகவன், சீனிவாசன் இவர்களுடன் எப்பொழுதும் பேசிக் கொண்டும், படித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டும் இருப்பான். அவர்கள் 'டியூஷன்' முடிந்ததும் மாலையில் வீட்டிற்குப் போய் ஏதாவது சாப்பிட்டுவிட்டு ஒவ்வொரு வராகப் பெருமாள் கோயிலில் வந்து கூடுவார்கள். சிலசமயம் இருவர் இருவராகக் கோயிலுக்குச் சேர்ந்து போவார்கள், சுவாமி தரிசனம் செய்துவிட்டு ஊஞ்சல் மண்டபத்தில் அமர்ந்து பாடம் படிப்பார்கள்.

அந்தப் பழக்கம் கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து காலையிலும் மாலையிலும் கோயிலுக்குச்

சென்று பெருமாள் தரிசனம் செய்யும் நல்ல பழக்கமாக மாறிவிட்டது. அந்தப் பழக்கம் ஒருநாள்கூடத் தவறுவது கிடையாது.

அதனால் கோயில் குருக்கள், வாத்தியக்காரர்கள், வாகனம் சுமப்பவர்கள், கோயில் சிப்பந்திகள் இவர்களோடு ஓர் ஈடுபாடும் நல்ல தொடர்பும் உண்டாயின.

அவர்களும் இந்த 'குரூப்' மாணவர்களுக்குத் தரிசன சலுகையும், பிரத்தியேக பிரசாத விநியோகமும் செய்து தங்களின் நல்ல மனத்தைத் திறந்து காட்டினார்கள்.

நண்பர்களுக்கு மகிழ்ச்சியும் மரியாதையும் பெருகின.

அப்பொழுது உற்சவ காலம்.

அந்தச் சமயங்களில் வாகன ஊர்வலம், வீதி புறப்பாடு ஆகியன உண்டு.

ஒரு நாள்.

அன்று பெருமாளுக்கு யானை வாகனம். ஆனால், வீதி புறப்பாடு இல்லை. கோயில் உள் பிராகாரத்திலேயே பெருமாள் வலம் வந்து கொண்டு இருந்தார். வாத்தியக்காரர்கள் இசை அமுதை வெள்ளமாக ஓடவிட்டனர். நரசிம்மன் தன் நண்பர்களை எதிர்பார்த்துப் பெருமாள் முன்பாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது அவனுக்குப் பக்கத்தில் ''உஸ்..ஸ்'' என்று யாரோ சீழ்க்கை அடித்துக் கூப்பிடுவது கேட்டது. யாராக இருக்கும் என்று சுற்றுமுற்றும் பார்த்தான். கடைசியில் தெரிந்தது. தீவட்டி எடுத்து வரும் ரகோத்தமன்தான் அவனை அப்படி அழைப்பது தெரிந்தது.

''என்ன?'' என்று ஜாடையில் கேட்டுக் கொண்டே அவன் அருகில் சென்றான் நரசிம்மன்.

''இந்தத் தீவட்டியைக் கொஞ்சம் பிடித்துக் கொண்டு இரு! எண்ணெய் தீரப் போகுது!'' பதிலைக்கூட எதிர்பார்க்கவில்லை, தீவட்டியை நரசிம்மன் கையில்கொடுத்துவிட்டுக் கூட்டத்தில் எங்கோ மறைந்தான் ரகோத்தமன்.

தீவட்டியைப் பிடித்துக்கொண்டு நரசிம்மன் நின்றான். சில நிமிஷங்கள் ஆகவில்லை.

அட கடவுளே!

அப்பொழுதுதானா ராமகிருஷ்ணய்யங்கார் அங்கு வந்து சேர வேண்டும்? நரசிம்மனை அந்தக் கோலத்தில் காண வேண்டும்?

ரகோத்தமன் அதே சமயத்தில் அங்கு வந்து தீவட்டியை வாங்கிக் கொண்டு விட்டான்.

என்ன வாங்கி என்ன பிரயோஜனம்? ராமகிருஷ்ணய்யங்கார் நரசிம்மன் கையைப் பிடித்து வீட்டிற்கு இழுத்துச் சென்றார்.

''தீவட்டியா பிடித்துக் கொண்டு நிற்கிறாய், தீவட்டி! முட்டாள் பயலே! உனக்கேண்டா அந்த வேலை?'' என்று கோபத்தில் கத்தினார். நரசிம்மன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவனை அவர் பேச விட்டால் தானே? கோபம் எல்லை மீற, நாலைந்து தடவை அவன் முதுகில் மொத்தினார். அதற்குள் அவன் அம்மா அங்கு வந்து, அவனை அழைத்துக் கொண்டு சென்றாள்.

கொஞ்ச நேரத்தில் அப்பாவின் கோபம் குறைந்தது.


நரசிம்மன் அருகில் சென்றார்.

அப்பாவைப் பார்த்ததும் உட்கார்ந்து கொண்டிருந்த நரசிம்மன் எழுந்து நின்று, ''அப்பா, நான் ஒன்றும் தப்பு செய்யலேப்பா! தீவட்டி எண்ணெய் தீர்ந்துவிடும் நிலையில் இருந்தது. எண்ணெய் எடுத்து வரலாம் என்றுதான் ,அவன் என் உதவியைக் கேட்டான். நானும் 'சரி' என்று தீவட்டியை வாங்கினேன். அதற்குள் நீங்கள் வந்துவிட்டீர்கள் ''

''தீவட்டி பிடிக்கிறதும் ஆண்டவனுக்குச் செய்கிற தொண்டுதானே! இதைப்போய்ப்பெரிசுபடுத்தி அடித்து விட்டீர்களே!'' என்றாள் அவன் அம்மா. அப்பாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

சித்திரப்புதிர் 31 - விடை

1. படகுப் போட்டி.
2. ஹிமாச்சல் பிரதேசம்.
3. ராஜாஜி.
4. வான்கோழி.
5. ஆரம்பகால விமானம் (கிளைடர்)


L.K.G.
+2.
B.A.
Sudharsan
?



ராஜாஜியும் சிறுவனும்

-குழந்தைக் கவிஞர்

கல்கத் தாவில் ராஜாஜி
கவர்ன ரானபின்
களிப்பை ஊட்டும் செய்தி ஒன்று
வெளியில் வந்ததே!
நல்ல அந்தச் செய்தி தன்னை
உங்க ளிடத்திலே
நானிப் போது கூற வந்தேன்
கேளும் நண்பரே!

சிறுவர் தம்மை மாளி கைக்கு
அவர் அழைத்தனர்.
தித்திப் பான பண்டத் தோடு
விருந்து வைத்தனர்.
விருந்து கவர்னர் அளித்த தாலே
பெருமை கொண்டனர்.
மெத்த மகிழ்ச்சி யோடு சிறுவர்
உண்ண லாயினர்.


அந்தச் சமயம் ராஜாஜி
சிறுவன் ஒருவனின்
அருகில் சென்று சிரித்துக் கொண்டே
காதைப் பிடித்தனர்.

"உன்றன் காதைப் பிடித்து நானும்
முறுக்கும் போதிலே
உனது மனத்தில் இதனைப் பற்றி
என்ன நினைக்கிறாய்?

அகிம்சை என்றே இதனை நீயும்
கருது கின்றாயா?
அன்றி, இம்சை என்றே இதனைக்
கூறு கின்றாயா?"
மகிமை மிக்க தலைவர் கேள்வி
கேட்ட வுடனேயே
மகிழ்ச்சி மிகவும் கொண்ட சிறுவன்
கூற லாயினன்:

"அகிம்சை இல்லை; இம்சை இல்லை;
தாங்கள் காட்டிடும்
அன்பு, அன்பு, அன்பு" என்றே
அவன் உரைத்தனன்.
மிகவும் மகிழ்ச்சி கொண்ட தலைவர்
அவனை மெச்சினார்.
விவரம் அறிந்து சிறுவர் அங்கே
சிரிக்க லாயினர்!

பிருந்தாவனம்



முதல் எழுத்தும், முடிவு எழுத்தும் ஒன்றாக உள்ள சில பெயர்கள் என்ன, என்ன?

1. புண்ணிய தலங்களில் ஒன்று
2. பத்திரிகைகளில் ஒன்று
3. விலங்கு இனங்களில் ஒன்று
4. அறுசுவைகளில் ஒன்று
5. வயதானவர்களை அழைப்பது

விடை : 1. திருப்பதி 2. தினத்தந்தி
3. குரங்கு 4. புளிப்பு
5. தாத்தா.

— இரமேஷ் பெருமாள் (12072), சேலம் 30

எள்ளுப் பாட்டி

சிலர் கொள்ளுப்பேரன், எள்ளுப் பேத்தி என்று கூறுவதைக் கேட்டிருக் கிறோம். உலகில் அதிக பேரன், பேத்திகளைக் கண்ட பாட்டி இப் போது ஆசியாவில் வசிக்கிறார். வயது 140. அவர் பிறந்தது 1848— —இல். இவருடைய கொள்ளுப்பேரன் பேத்திகள் 130 பேர்; எள்ளுப் பேரன் பேத்திகள்: 23 பேர்.

ஆதாரம்: செய்திக் கதிர்
தகவல்: நிர்மலா (12,098), தஞ்சாவூர் — 7.


ஐந்து சபைகள்



ரத்தின சபை — திருவாலங்காடு,
கனக சபை — சிதம்பரம்,
வெள்ளி சபை — மதுரை,
தாமிர சபை — திருநெல்வேலி,
சித்திர சபை — திருக்குற்றாலம்.

— ப. தினேஷ்குமார் (3321), சென்னை — 7.

முதலும் முடிவும்






மணி ஓசை

லண்டனில் லாயிட்ஸ் என்னும் இடத்தில் ஒரு மணி உள்ளது. அதற்கு 'லூடைன் பெல்' என்று பெயர்.

அது ஒரு தடவை ஒலித்தால் கெட்ட செய்தி; இரண்டு தடவை ஒலித்தால் நல்ல செய்தி.

— மு. காசி விஸ்வநாதன் (12048), தேவகோட்டை

அற்புத உயிர்களின் அறிவு



மனிதன் மட்டும் கருவிகளைப் பயன்படுத்தவில்லை. சில உயிரினங்களும் இதைச் செய்கின்றன. சிம்பான்சி குரங்கு மரக்குச்சியால் எறும்புப் புற்றிலே குத்தி, அதை வெளியே எடுக்கும் குச்சியில் ஒட்டிக் கொண்டிருக்கும் எறும்புகளை நாக்கினால் நக்கிச் சாப்பிடும்.

எகிப்து நாட்டுப் பருந்துகள் தீக்கோழி முட்டையை உடைக்கக் கற்களைப் பயன்படுத்துகின்றன.

— இரா. மணி (21,412), வந்தவாசி.


'மார்க்'கடன்



''ஏன் சார், பெரியவங்களுக்கு வங்கியிலே பணம் கடன் கொடுக்கிறாங்களே, அப்படி மாணவர்களுக்கு மார்க் கடன் கொடுக்கிற வங்கி ஆரம்பிச்சா என்ன?''

— இரா. செல்லத்துரை (20,162), கடையாலுருட்டி.

சீனப் பழமொழிகள்



* அறிவாளி கண்களால் பேசுகிறான்.
* எவரையும் நம்பாதவரை யாருமே நம்ப மாட்டார்.
* ஒரு குழந்தைக்கு அதன் தாய் இருக்கும் இடமே சொர்க்கம்.
* இவ்வுலகில் இருவர் மட்டும் நல்லவர்கள். ஒருவர் இன்னும் பிறக்கவில்லை; இன்னொருவர் இறந்துவிட்டார்.

— பா. சாந்தபாபு (20,143), பம்மல் — 75.

புதிர்




கணக்கு ஆசிரியரின் மகளைப் பார்த்து ''மாலா, நீ இந்தத் தடவை கணக்கில் எத்தனை மதிப்பெண் பெற்றிருக்கிறாய்?'' என்று கேட்டார் அவளது மாமா.

''என் மதிப்பெண்ணும், அதன் மற்றொரு மடங்கும், என் மதிப்பெண்ணில் பாதியும், அந்தப் பாதியில் பாதியும், போனஸ் மார்க் ஒன்றும் சேர்த்தால் நூறு வரும்'' என்றாள் மாலா.

அப்படியானால் மாலா பெற்ற மதிப்பெண் என்ன?'

விடை: 36.


— அ. ரமேஷ் (22,055), ஒசூர்.



ஐந்து

* ஒரு கையில் உள்ள விரல்கள் ஐந்து
* தமிழில் உள்ள பெருங்காப்பியங்கள் ஐந்து.
* தொடக்கப்பள்ளியில் உள்ள வகுப்புகள் ஐந்து.
* உலகில் உள்ள பூதங்கள் ஐந்து.
* மனிதனுக்கு உள்ள புலன்கள் ஐந்து
* பாண்டவர்கள் எண்ணிக்கையும் ஐந்தே!

— பா. வெங்கடேஸ்வரன் (21,904) ஜெயங்கொண்டான்.



யானையைத் தூங்க முடியுமா?

ஒரு நாள் காலை என் மூன்று வயதுத் தங்கை மீரா மீனாட்சி படுக்கையை விட்டு எழ மாட்டேன் என்று அடம் பிடித்துக் கொண்டிருந்தாள். உடனே நான், ''டீ. வி. ராமாயணத்தில் கும்பகர்ணனை எழுப்புவது போல் செய்யட்டுமா?'' என்று கேட்டேன். உடனே மீரா, ''ஐயோ, வேண்

டாம். வேண்டாம். என்னால் யானையையெல்லாம் தாங்க முடியாது'' என்று கதறிக் கொண்டே எழுந்து விட்டாள்! — முரளி முருகவேல், சென்னை — 20.




கடிகாரத்திற்கு ஒரே முள்!

கடிகாரத்தில் மணி காட்டும் முட்கள் இரண்டு இப்போது இருக்கின்றன. ஆனால், ஒரே ஒரு முள் மட்டுமே இருந்த காலம் ஒன்று உண்டு. 1867—ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நிமிஷ முள் இணைக்கப்பட்டது.

ஆதாரம்: அறிவியல் துணுக்கு நூல்
தகவல்: ஏ. ரசீத் (13,402), கோத்தகிரி.

யானையின் துதிக்கை



யானையின் முக்கியமான உறுப்பு அதன் துதிக்கைதான். அதனால், அது சுவாசிக்கிறது; வாசனை அறிகிறது; உணவையும் நீரையும் உண்ணப் பயன்படுத்துகிறது; கனமான பொருட்களைத் தூக்கவும், தள்ளவும் உபயோகப்படுத்துகிறது; கோபத்தைக் காட்டத் துதிக்கையைத் தூக்கிக் குழல் ஊதுவது போல் பிளிறுகிறது; சலாம் போடுகிறது; தண்ணீரை உறிஞ்சி உடல் முழுவதும் விட்டுக்கொள்ளவும் துதிக்கை உதவியாயிருக்கிறது. துதிக்கையால் ஓங்கி ஓர் அடி அடித்தால், எதிரிகள் உயிர் பிழைப்பது சிரமம் தான். துதிக்கை நுனியால் வழுவழுப்பான தரையில் கிடக்கும் சிறு குண்டூசியைக் கூட எடுத்துவிடும்.

சி. டி. காசி (21301) கபிஸ்தலம்.

ஹேட்-ட்ரிக்



கிரிக்கெட் விளையாட்டில் 'ஹேட்—ட்ரிக்' என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படி என்றால் என்ன?

முன் காலத்தில் கிரிக்கெட் விளையாடும் போது யாராவது ஒரு வீரர் மூன்று விக்கெட்டுகளை எடுத்தால், அவருக்கு 'டாப் ஹேட்' பரிசளித்து கௌரவிப்பார்கள். இதையே ஹாட்—ட்ரிக் என்று கூறத் தொடங்கி விட்டார்கள்.

— எஸ். சுரேஷ்குமார் (14,210), சூலூர்.

சீனக் கதை:

பொன்மணித் தீவு

தமிழில்: சந்திரநாத்

முன்னொரு காலத்தில் காண்டன் நகரத்திற்கு அருகில் இரண்டு சகோதரர்கள் வசித்து வந்தார்கள்.

இருவரும் விவசாயிகள். அவர்கள் தங்கள் தந்தை வைத்து விட்டுப் போன கொஞ்சம் நிலத்தை இரண்டாகப் பிரித்துக் கொண்டு, தனித் தனியாக உழுது பயிரிட்டு வந்தார்கள்.

அண்ணனுக்குக் கலியாணம் ஆகி விட்டது; தம்பிக்கு இன்னும் ஆக வில்லை. ஆனாலும் இருவரும் ஒரே வீட்டில் சேர்ந்து வசித்தார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் கோடை காலம் தொடங்கியதும், அவர்கள் தங்கள் நிலங்களில் விதைப்பது வழக்கம். விதைப்பதற்கு என்று தனியாக நெல்லை எடுத்துப் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள்.

ஓர் ஆண்டு, தம்பி தன் நிலத்தை நன்றாக உழுது விட்டுப் போய்ப் பார்த்தபோது விதை நெல் முழுவதையும் எலி தின்று விட்டதைக் கண்டான். உமி மட்டுமே கிடந்தது.

அவன் மனம் மிகவும் வேதனை அடைந்தது. அவன் அண்ணனிடம் போய், கொஞ்சம் விதை நெல் கடனாகத் தரும்படி கேட்க முடிவு செய்தான். அண்ணனைத் தேடிப் போனான்.

"அதற்கென்ன? ஒரு மரக்கால் நெல் தரச் சொல்கிறேன்" என்றான் அண்ணன். மனைவியைக் கூப்பிட்டு, "தம்பிக்கு ஒரு மரக்கால் விதை நெல் கொடு" என்று கட்டளையிட்டான்.

அண்ணன் மனைவிக்கு இதைக் கேட்டு ஆத்திரமாக வந்தது. அவள் கெட்ட எண்ணமுடையவள். யாரும் நன்றாக இருந்தால் அவளுக்குப் பிடிக்காது...

தம்பியை அவளுக்குக் கண்டாலே ஆகாது. அவன் கஷ்டப்பட்டு உழைப்பது, அவன் நிலத்தில் நிறைய விளைவது எல்லாவற்றையும் கண்டு, அவள் அவன் மீது மிகுந்த பொறாமை கொண்டிருந்தாள்.

அவனுக்குச் சோறு போடவே அவள் விரும்பவில்லை. தாயில்லாப் பிள்ளையை அண்ணி விரட்டி விட்டாள் என்று ஊர் சொல்லுமே என்பதற்காக அவனுக்குச் சோறு போட்டு வந்தாள்.

அதற்குப் பதிலாக அவனை 'அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு வா' என்று ஏவிக் கொண்டே இருப்பாள்.

அவன் நிலத்தில் விளைவதில் பாதியை அவள் இம்மாதிரி அடைந்து விடுவது வழக்கம்.

இந்த ஆண்டு அவன் விதைக்க வைத்திருந்த நெல் வீணாகி விட்டது என்று தெரிந்ததும், அவள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். "இந்த ஆண்டு அவன் நிலம் எதுவும் விளையாமல் பாழாகத்தான் கிடக்கட்டுமே" என்று நினைத்தாள்.

ஆனால், அந்த மகிழ்ச்சி கணவன் தம்பிக்கு நெல் கொடுக்கச் சொன்னதும் மறைந்து விட்டது. கணவன் மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் கணவன் எதிரில் "சரி" என்று தலையாட்டி விட்டு உள்ளே வந்தாள்.

உக்கிராணத்தில் நின்று என்ன செய்யலாம் என்று யோசித்தாள். அவள் மனத்தில் ஒரு யுக்தி தோன்றி

யது.

வெளியே வந்து, தம்பியிடம், "நீ நாளைக் காலையில்தானே விதைக்கப் போகிறாய்? நான் ஒரு மரக்கால் நெல் எடுத்துச் சுத்தம் செய்து பக்குவப்படுத்தி வைக்கிறேன். காலையில் வந்து எடுத்துச் சென்று விதை" என்று சொல்லி அனுப்பி விட்டாள்.

பிறகு ஒரு மரக்கால் நெல்லைக் குதிரிலிருந்து எடுத்து வந்தாள். அதை ஒரு பானையில் போட்டுத் தண்ணீர் ஊற்றினாள். அடுப்பை எரிய வைத்தாள்.

தண்ணீர் கொதித்தது. பானையிலிருந்த நெல் வெந்து விட்டது. பிறகு, அதை எடுத்துத் தண்ணீரை வடித்து ஆற வைத்தாள். அதிகாலையில் நன்றாக ஆறி, வேக வைத்ததே தெரியாமல் ஆகி விட்டது. அதை மீண்டும் அதே மரக்காலில் இட்டுக் கூடத்தில் கொண்டு வந்து வைத்தாள்.

பொழுது விடிந்ததும், தம்பி கூடையுடன் வந்தான். "அதோ இருக்கிறது ஒரு மரக்கால் நெல். எடுத்துச் சென்று விதை" என்றாள் அண்ணி.

தம்பி மரக்காலில் இருந்த நெல்லைக் கூடையில் கொட்டிக் கொண்டு கிளம்பினான். அப்போது மரக்காலின் அடியில் ஒட்டிக் கொண்டிருந்த வேகாத நெல் ஒன்றும் கூடையில் விழுந்தது.


அதையும் சேர்த்து தன் நிலத்தில் தூவி, விதைத்து விட்டான் தம்பி. பிறகு தினந்தோறும் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சினான்.

நெல் முளைப்பதற்காக அவன் காத்திருந்தான். உரிய காலத்தில், அவனோடு விதைத்த பக்கத்து நிலக்காரர்களின் நிலங்களிலே எல்லாம் முளைகள் 'குப்'பென்று கிளம்பி விட்டன.

ஆனால், அவனுடைய நிலத்தில் எதுவுமே முளைக்கவில்லை. முளைக்காமல் போன காரணம் தெரியாமல் திகைத்தான்.

அண்ணியோ, தம்பியின் நிலத்தில் எதுவும் முளைக்காததைக் கண்டு மிக மகிழ்ச்சி அடைந்தாள்.

"நீ ஏதோ தெய்வக் குற்றம் செய்



திருக்கிறாய். அதனால்தான் உன் நிலத்தில் ஒன்றும் விளையவில்லை'' என்றாள் அவள்.

''நான் யாருக்கும் எந்தத் தீங்கும் நினைத்தது கூட இல்லையே!'' என்றான் தம்பி.

விதைத்ததிலிருந்து ஒரு வாரத்திற்குள் நெல் முளைத்து விடும். ஏழு நாட்கள் ஓடி விட்டன. ஏழாம் நாளும் நம்பிக்கையுடன் போய்த் தன் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சி விட்டு வந்தான் தம்பி.

''இனிமேலா உன் நிலத்திலே முளை விடப் போகிறது? ஏன் வீணாகத் தண்ணீரையும் உழைப்பையும் பாழாக்குகிறாய்?'' என்று கண்டித்தாள் அண்ணி.

''முளை கிளம்பும்வரை தண்ணீர் பாய்ச்சுவது என் கடமை. முளைப்பதும் முளைக்காததும் தெய்வத்தின் இஷ்டம்'' என்று சொல்லி விட்டு, தன் அறையில் போய்ப் படுத்துக் கொண்டான் தம்பி.



2

மறுநாள் பொழுது விடிந்தது. கிழக்கே சூரியன் உதயமானான். சூரிய கதிர்கள் வயல் வெளியில் பரவிக் கொண்டு வந்தன.

பட்சிகளின் குரலைக் கேட்டு, தம்பி எழுந்து சென்று வயலைப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அவனுடைய நிலத்தின் நடுவில், ஒரே ஒரு பச்சை நிற முளை சூரிய ஒளியில் தளதளவென்று மின்னியது.

''ஹா! என் நிலமும் முளை விட்டு விட்டது!'' என்று மகிழ்ச்சியுடன் கூவினான்.

நிலத்தின் நடுவில் முளைத்திருந்தது அந்த வேகாத நெல். எடுத்த எடுப்பில், முதல் நாளே கை அளவு கனத்துடனும், ஒரு முழு உயரமாகவும் அது வெளிப்பட்டிருந்தது.

தம்பிக்கு ஆனந்தம் தாளவில்லை. அதுவாவது முளைத்ததே என்று மகிழ்ந்து, அங்கேயே மண்டியிட்டுக் கடவுளுக்கு நன்றி சொன்னான். அதற்கு தினமும் தண்ணீர் பாய்ச்சி வந்தான்.

அந்த ஒரு முளை, எல்லோரும் ஆச்சரியப்படும்படியாகப் பெரிய மரம் போல வளர்ந்தது. கப்பும் கிளையும் விட்டு நிலம் முழுவதற்கும் குடை போல நின்றது!

ஊர் முழுவதும் வந்து இந்த அதிசய மரத்தைப் பார்த்தது. ''நெல் இவ்வளவு பெரிதாக வளர்ந்து நாங்கள் பார்த்ததே இல்லை'' என்று எல்லோரும் சொன்னார்கள்.

''நெல் மரமா?'' என்று சிலர் சிரித்தார்கள்.

''என்ன காய்க்கப் போகிறதோ?'' என்று வேறு சிலர் பரிகாசமாகச் சொன்னார்கள்.

''அதிலிருந்து ஒருநாள் ஒரு பெரிய ராட்சதன்தான் குதிக்கப் போகிறான். உன்னை அப்படியே 'லபக்' என்று தூக்கிக் கொண்டு போய் விடப் போகிறான். அந்த மரத்தை இப்போதே வெட்டி விடு'' என்றாள் அண்ணி.

''மாட்டேன். பூமியிலே எது விளைந்தாலும் விவசாயிக்கு அது குழந்தை.

என் குழந்தையை நான் கொல்ல மாட்டேன்'' என்று மறுத்து விட்டான் தம்பி.

3

அந்த மரம் இன்னும் பெரிதாக வளர்ந்தது. தம்பி அதற்குத் தினமும் தண்ணீர் விட்டு வளர்த்து வந்தான்.

உரிய காலத்தில், அந்த மரத்தின் உச்சியில் ஒரு மணி தானியம் தோன்றியது. தோன்றும் போதே, அது பெரிதாக இருந்தது. அது வளர்ந்து முற்றியது.

மரத்தின் உச்சியிலிருந்த அந்தப் பெரிய தானியத்தைப் பறிக்கத் தம்பி மரத்தில் ஏறினான். பறிக்கும் போது அது தவறி தரையில் விழுந்தது. உடனே கீழே இறங்கி அதை எடுக்க ஓடினான். என்ன துரதிர்ஷ்டம்! அதே சமயம் ஒரு பிரம்மாண்டமான பறவை வானத்தில் தோன்றியது.

மின்னல் போல அது பாய்ந்து வந்து அந்தப் பெரிய தானியத்தை அலகால் பற்றிக் கொண்டு மீண்டும் வானில் எழுந்து பறந்து விட்டது!

தம்பியும் அதன் பின்னாலேயே ஓடினான். பறவை கீழே அவன் ஓடி வருவதைப் பார்த்துக் கொண்டே கடலை நோக்கிப் பறந்து சென்றது.

இருவரும், கடைசியில் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். கடற்கரைக்கு வந்ததும், அந்தப் பறவை திரும்பி, ''இதோ பார். இந்தத் தானியத்தை எனக்குக் கொடுத்து விடு. இதற்கு உரிய விலையை நான் உனக்குத் தந்து விடுகிறேன். இந்தக் கடலுக்கு அப்பால், தூரத்தில், யாரும் அறியாத ஒரு தீவு இருக்கிறது. 'பொன் மணித் தீவு' என்று அதற்குப் பெயர். பொன்னும் மணியும் அங்கே குவிந்து கிடக்கிறது. நீ என் முதுகில் ஏறிக்கொள். நான் உன்னை அங்கே கொண்டு போய் இறக்கி விடுகிறேன். உனக்கு வேண்டிய அளவு எடுத்துக் கொள். பிறகு உன்னை நானே இங்கே கொண்டு வந்து விட்டு விடுகிறேன். நீ அதை வைத்துக் கொண்டு பணக்காரனாக வாழலாம்'' என்றது.



''சரி'' என்று தம்பி ஒப்புக் கொண்டு, அதன் பெரிய முதுகில் ஏறிக் கொண்டான்.


''கண்களை மூடிக் கொள். நான் 'திற' என்று சொல்கிற வரை திறக்கக் கூடாது'' என்றது பறவை.

தம்பி கண்களை மூடிக் கொண்டான். இப்போது நன்றாகவே இருட்டி விட்டது. 'ஜிவ்'வென்று மேலே கிளம்பிய பறவை கடலுக்கு மேலாகப் பறந்து சென்றது.

சிறிது நேரத்திற்கெல்லாம் கீழே கடலலைகள், புரண்டு விழுகிற ஓசையைக் கேட்டான் தம்பி. காற்று அவன் காது அருகில் சீறிக் கொண்டு போனதிலிருந்து, பறவை மிக வேகமாகப் போகிறது என்று ஊகித்துக் கொண்டான்.

இப்படி, பல மணி நேரம் பிரயாணம் செய்த பிறகு, பறவையின் வேகம் குறைந்தது. அது மெதுவாகக் கீழே இறங்கியது. கடைசியில், தரையில் இறங்கி, ''இப்போது கண்ணைக் திறந்து பார்'' என்றது.

தம்பி கண்களைத் திறந்து பார்த்தான். அடுத்த கணம் ஆச்சரியத்தால்



அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டான்.

அவன், தான் காண்பது கனவா, நனவா என்று கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான்.

நிலா ஒளியில் அவன் முன் மலை மலையாகக் கிடந்த பொன்னும் வெள்ளியும், பளபளவென்று மின்னின.

"கீழே இறங்கு" என்றது பறவை.

தம்பி கீழே இறங்கினான். "இதில் உனக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ளலாம். இவை எல்லாமே உனக்குத்தான்" என்றது.

"இவ்வளவும் எனக்கா?" என்று கேட்டான் தம்பி.

"ஆமாம். உனக்குத்தான்" என்றது பறவை.

"இந்த விலை ரொம்ப அதிகம்" என்றான் தம்பி.

"நான் உனக்குக் கொடுத்த தானியம் அற்பமானது. அதற்கேற்ற விலையைத்தான் நான் அடைய வேண்டும். அதுதான் நியாயம்" என்று சொன்ன தம்பி, சிறு சிறு பொன், வெள்ளிக் கட்டிகளை மட்டும் எடுத்துக் கொண்டான். அவற்றைத் தன் மடியிலே கட்டிக் கொண்டான்.

"போதுமா இது?" என்று கேட்டது பறவை. "இன்னும் கூட எடுத்துக் கொள்ளலாம் நீ?" என்றது.

"வேண்டாம். இது போதும்."

"சரி — என் முதுகில் ஏறிக் கொள்" என்றது பறவை.

அவன் அப்படியே அதன் முதுகில் ஏறிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். 'ஜிவ்' வென்று மேலே கிளம்பியது பறவை. மீண்டும் கீழே கடலலைகளின் ஓசை கேட்டது; காற்று 'விர்ர்' என்று காதடியில் சீறிச் சென்றது.

அவனைச் சுமந்து கொண்டு வந்த பறவை, பொழுது விடிவதற்குள் மீண்டும் பழைய இடத்திற்கே கொண்டு வந்து இறக்கி விட்டுப் போய் விட்டது.

4

தம்பி பொழுது விடிவதற்குள் வீடு வந்து சேர்ந்து விட்டான். கொண்டு

வந்த பொன்னை ஒளித்து வைத்தான். பிறகு அதில் சிறிது எடுத்துக் கொண்டு போய் விற்று, ஒரு வீடு வாங்கினான்; பக்கத்து நிலங்களில் சிலவற்றை வாங்கினான்; மாடுகள் வாங்கினான்.

புது வீட்டில் போய்க் குடியேறினான். நல்ல உடைகள் வாங்கி அணிந்து கொண்டான். விரைவிலேயே அவன் பணக்காரனாகி விட்டான்.

ஆனால், பறவை வந்ததையும் அதனுடன் சென்று வநததையும் அவன் யாரிடமும் சொல்லவே இல்லை.

அவன் இவ்வளவு பெரிய பணக்காரனாக ஆகி விட்டதைக் கண்டு அண்ணி வயிறெரிந்து போனாள். தன் கணவனிடம் போய் முறையிட்டாள். "எவ்வளவு பணக்காரன் ஆகி விட்டான் உங்கள் தம்பி — பாருங்கள்" என்று தூண்டி விட்டாள்.

"எப்படி ஆனான்?" என்று கேட்டான் அண்ணன்.

"அவனை அழைத்து அவனிடம் கேளுங்கள். தெரிந்து கொள்ளுங்கள் எப்படிப் பணக்காரன் ஆனான் என்பதை! அதைப் போல் ஆவதற்கு நீங்களும் முயற்சி செய்யுங்கள்" என்றாள் அண்ணி.

தம்பியை எப்படிக் கேட்பது என்று தயங்கினான் அண்ணன். நேரடியாகக் கேட்டால் சொல்ல மாட்டான் என்று அவனுக்குத் தெரியும். அதற்காக ஒரு யுக்தி செய்தான்.

தம்பியை வரவழைத்தான்.

"அடேய், என்னை ஏமாற்றி விடலாம் என்று நினைக்காதே. உண்மையைச் சொல். உனக்கு ஏது இவ்வளவு பணம்? திருடித்தானே அடைந்தாய்?" என்று கேட்டான்.

அவன் தந்திரம் பலித்தது. இதைக் கேட்டதும் தம்பி துடிதுடித்துப் போய் விட்டான். "ஐயோ, இல்லை, இல்லை. நான் திருடன் இல்லை" என்று கதறினான் அவன்.

"ஒருநாள் இரவு வெளியே போனாயே — காலையில்தானே திரும்பி வந்தாய்?" என்றான் அண்ணன்.

"நான் ஒரு இரவு வீட்டுக்கு வராமல் இருந்தது உண்மை. ஆனால் நான் திருடுவதற்காகப் போகவில்லை" என்று கதறின தம்பி, தான் திருடவில்லை என்பதை நிரூபிப்பதற்காக, தான் போன இடம் பற்றிச் சொன்னான், அவன். பறவை வந்தது, முதுகில் அது ஏற்றிச் சென்றது, பொன் மணித் தீவுககுப் போனது எல்லாவற்றையும் சொல்லி விட்டான்.

அண்ணன்எல்லாவற்றையும்கவனமாகக் கேட்டான். பிறகு தம்பியை அனுப்பி விட்டு, மனைவியை அழைத்து, தம்பி சொன்னதை எல்லாம் சொன்னான்.

"பொய்; பொய். அவ்வளவும் பொய். பறவை வந்ததை யார் பார்த்தார்கள்?" என்று கேட்டாள் அவன் மனைவி.

"ஆனால், அவன் நிலத்தில் ஒரே ஒரு தானியம் முளைத்ததும், அதில் ஒரே ஒரு தானியம் முற்றியதும் நமக்கெல்லாம் தெரியுமே!" என்றான் அண்ணன்.

"அதையும் பரீட்சை செய்து பார்த்து விடுவோம். நம் நிலத்திலும் ஒரே ஒரு தானியம் மட்டும் முளைக்கும்படி செய்வோம். பறவை வருகிறதா என்று பார்ப்போம்" என்றாள் அவன் மனைவி.

"அது எப்படி ஒரே ஒரு தானியம் மட்டும் முளைக்கும்படி செய்வது?" என்று கேட்டான் அண்ணன்.

"எப்படி என்று கேட்காதீர்கள். நான் கொடுப்பதைக் கொண்டு போய் நீங்கள் விதையுங்கள். ஒரு விதை முளைக்கும், பாருங்கள்" என்று உள்ளே போனாள் மனைவி.

5

தம்பிக்குச் செய்து கொடுத்தது போலவே ஒரு மரக்கால் நெல்லை வேக வைத்து வடித்து, அதனுடன் ஒரு வேகாத தானியத்தையும் கூடையில் போட்டுக் கொடுத்தாள் அவள்.

அண்ணன் அதை எடுத்துக் கொண்டு போய்த் தன் நிலத்திலே விதைத்தான். தினமும் அதற்குத் தண்ணீர் பாய்ச்சினான்.

கணவனும் மனைவியும் என்ன விளையுமோ என்று பதை பதைப்புடன் காத்திருந்தார்கள்.

உரிய காலத்தில் தம்பியின் நிலத்தில் நடந்தது போலவே அண்ணன் நிலத்திலும், அந்த ஒரே ஒரு தானியம் மட்டும் முளை விட்டு எழுந்தது.

அது பெரிய மரமாயிற்று. பிறகு அதன் உச்சியில் ஒரு பெரிய தானியம் தோன்றியது. அது முற்றினதும் முன் போலவே அதே பெரிய பறவை வந்து அதைக் கொத்திக் கொண்டு வானில் பறந்தது.

கோடரியை வீசி விட்டு அண்ணனும் அதன் பின்னால் ஓடினான்.

இருவரும் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். பறவை தம்பியிடம் சொன்னதையே அண்ணனிடமும் சொல்லிற்று.

அண்ணன் தானியத்தைத் தரச் சம்மதித்ததும், அவனை முதுகில் ஏற்றிக் கொண்டு கண்களை மூடிக் கொள்ளச் சொல்லிற்று. பொன் மணித் தீவிலே கொண்டு போய் அவனை இறக்கிற்று.

அங்கே இறங்கிக் கண்ணைத் திறந்ததும், அண்ணன் அப்படியே வாயைப் பிளந்து கொண்டு நின்று விட்டான். அத்தனையையும் வாரிச் சுருட்டிக் கொண்டு போய் விட வேண்டும் என்கிற பேராசை அவனுள் எழுந்து விட்டது.


ஆனால், மிகப் பெரிய தங்கக் கட்டியே ஒரு பெரிய மலை போல இருந்தது. மிகச் சிறிய கட்டி ஒரு செங்கல் அளவு இருந்தது.

''ஐயோ! இவை அவ்வளவையும் எப்படி எடுத்துக் கொண்டு போவேன்'' என்று மயங்கினான் அவன்.

இங்குமங்கும் ஓடி, பொன்னையும் மணியையும் சேகரித்துக் குவித்தான். தலை முண்டாசை அவிழ்த்து பெரிய மூட்டையாகக் கட்டினான்.

''ஐயோ, இன்னொரு துணி கொண்டு வராமல் போனேனே'' என்று வாய் விட்டுக் கதறினான்.

''இதோ பார். இதுவே உன் தானியத்திற்கு மிக அதிகம். அளவுக்கு மீறி



னால், அமுதமும் விஷமாகி விடும்' என்றது பறவை.

அது தூரத்தில் உட்கார்ந்து, அவன் இங்குமங்கும் ஓடி ஓடிப் பொன்னையும் வெள்ளியையும் பரபரப்புடன் சேகரிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தது.

''நேரமாகி விட்டது, நமக்கு'' என்றது பறவை.

''கொஞ்சம் பொறு. இன்னும் ஒரே ஒரு நிமிஷம்'' என்று சொல்லி ஓடிக் கொண்டிருந்தான் அண்ணன். இன்னொரு மூட்டை கட்ட ஏதாவது துணி கிடைக்குமா என்று தேடினான் அவன். முடிந்த அளவு பொருட்களைக் கொண்டு வந்து குவித்துக் கொண்டே இருந்தான்.

அவன் எதிரேயே ஒரு சிறு குன்று போலப் பொன்னும் வெள்ளியும் குவிந்து விட்டன. அதன் பின்னும் அவன் கொண்டு வந்து குவித்துக் கொண்டே இருந்தான். பார்க்கப் பார்க்க எல்லாவற்றின் மீதும் அவனுக்கு ஆசை உண்டாயிற்று.

''இதோ பார், விடிகிற சமயமாகி விட்டது. சூரியனுடைய கதிர்கள் கிளம்பி வரும் முன் நாம் புறப்பட்டு விட வேண்டும்'' என்றது பறவை.

''ஏன் இப்படி அவசரப்படுகிறாய்'' என்று எரிந்து விழுந்தான் அண்ணன்.

''சூரிய கதிர்கள் வந்து விழுந்தால் என்ன ஆகும் என்று அறிந்திருந்தால் நீ இப்படி என்னிடம் எரிந்து விழமாட்டாய். சூரிய ஒளி பட்டதும் இந்தப் பொன்னும் மணியும் தகதகவென்று சுடர் விட ஆரம்பித்து விடும். இந்தத் தீவே உஷ்ணத்தால் தகிக்க ஆரம்பித்து விடும். காகிதங்களைப் போல நாம் எரிந்து போய் விடுவோம்'' என்றது பறவை.

''இதோ ஆயிற்று. ஒரே நிமிஷம். அதோ அந்த நவரத்தினத்தை மட்டும் கொண்டு வந்து விடுகிறேன். இரு'' என்று ஓடினான் அண்ணன்.

ஆனால் அவன் வருவதற்குள் சூரியன் உதயமாகி விட்டான். தகதகவென்று பொன்மணித் தீவு தகிக்க ஆரம்பித்து விட்டது. பறவை, ஒரு விநாடி கூட தாமதிக்காமல், அண்ணனை விட்டு விட்டு, 'ஜிவ்'வென்று கிளம்பி கடல் மீது பறந்து சென்று மறைந்து விட்டது.

சூரியக் கதிர் பட்டதும் அண்ணன் திரும்பிப் பார்த்தான். பறவை தூரத்தில் பறந்து செல்வது ஒரு கணம் தெரிந்தது. ஆனால் அதற்குள், வெள்ளி மலை மீது பட்டு பிரதிபலித்த சூரிய ஒளி அவன் கண்களைக் குருடாக்கி விட்டது.

''ஐயோ, என் கண் போய் விட்டதே'' என்று கதறினான் அவன். இங்குமங்கும் தட்டுத் தடுமாறி ஓடினான்.

விரைவிலேயே பொன் மணித் தீவு முழுவதும் அனலால் தகித்தது. கண்களை இழந்த அண்ணன் உடலில் தீக் கதிர்கள் சுட்டன. அவன் 'கடவுளே, கடவுளே' என்று கதறிக் கொண்டு மடியில் சேகரித்து வைத்திருந்த வைரக் கற்களை எல்லாம் எடுத்து வீசினான்.

'யாராவது காப்பாற்றுங்களேன் என்னை?' என்று கூவினான். ஆனால் அவனைக் காப்பாற்ற அங்கே யாருமில்லை.

சில நிமிடங்களில், பறவை எச்சரித்தது போலவே காகிதம் போல எரிந்து போனான் அவன்.



நம் உடலை ஓர் அமைச்சரவைக்கு ஒப்பிடலாம்:

இதயம் — பிரதம மந்திரி,
உடல் — உள்நாட்டு அமைச்சர்,
மூளை — கல்வி, பொதுநல அமைச்சர்,
நாக்கு — தகவல், ஒலிபரப்பு அமைச்சர்
இரத்தம் — விவசாய, பாசன அமைச்சர்
கைகள் — தொழில் அமைச்சர்,
கால்கள் — போக்குவரத்துத் துறை அமைச்சர்,
காதுகள் — தகவல் தொடர்பு அமைச்சர்
வாய் — விநியோகத்துறை அமைச்சர்
சிறுநீரகம் — சுகாதாரத் துறை அமைச்சர்.

ஆதாரம்: சன் இதழ்; தகவல்: சீதாபஞ்சு.

உண்மையான அஞ்சலி

சார் தபால்

* 'என் குழந்தைப் பருவம்' பகுதியில், நான் என்றென்றும் மனத்துள் தெய்வமாக நிறுத்தி வழிபட்டுக் கொண்டிருக்கும் என் ஆசான் குலபதி ஜோஷி அவர்களின் 'மலரும் நினைவுகள்' வெளியாகியிருப்பது கண்டு பெரிதும் மகிழ்வுற்றேன்... பள்ளியிலே நான்காம் படிவத்தில் நான் சேரச் சென்ற போது அவர் கூறிய அறிவுரைகள் இன்றும் எனக்கு நினைவிருக்கின்றன.

— தெ. பா. சீதாராமன், சென்னை — 101

* கல்விப் பணியே கடவுட் பணியெனக் கருதி ஆசிரியர்கள் மத்தியிலே அறிஞராக விளங்கிய தேசிய நல்லாசிரியர் விருதினைப் பெற்ற பாலகிருஷ்ண ஜோஷி அவர்களின் குழந்தைப் பருவம், என் போன்ற சேவை உள்ளங் கொண்ட ஆசிரியர்களின் குழந்தைப் பருவத்தினை நினைவூட்டுவதோடு, மாணவர்களுக்கு மேலும் ஒழுக்கத்தினைக் கற்றுத்தர வழி காட்டுகின்றது.

— க. குப்புசாமி, கள்ளிப்பட்டி.

* நேருவுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி எது என்பதை நன்கு உணர்த்தியிருக்கிறார் நம் கௌரவ ஆசிரியர்.

— கி. லக்ஷ்மிப்பிரபா, மன்னார்குடி.

* நவம்பர் இதழில் கேளுங்கள்; சொல்லுகிறோம் பகுதியைப் போடாமல் ஏமாற்றிவிட்டீர்களே? அது இல்லாமல், கோகுல உருவத்தில் ஓர் உறுப்புக் குறைந்தது போலத் தோன்றியது.

— க. வெங்கடேஸ்வரன் (14,751), திருப்பாச்சேத்தி.

* சென்ற இதழில் வெளிவந்த 'மாமா போட்ட புதிர்,' 'பரிசு யாருக்கு?', 'பிறந்த நாள் பரிசு' முதலான கதைகள் நீங்கள் எங்களுக்குத் தந்த தீபாவளிப் பரிசுகளாகும்.

— சிவ. வசந்த் (13,229), புதுக்கோட்டை.

* 'நான் ஒரு ராணுவ வீரரின் மகன்' கதையில் சரவணன் காட்டிய வீரம் என்னை மெய் சிலிர்க்க வைத்துவிட்டது.

— எஸ். சித்ரா (22,224), அம்பல்.

* டி. ஜானகி அவர்களின் "நான் ஓர் இராணுவ வீரரின் மகன்' சிறுகதையில் சரவணன் பாத்திரப் படைப்பு அருமை.

— என். தினேஷ்குமார், அ. சாமியப்பன், பூச்சக்காட்டுவலசு.

* கைலாஸ் எழுதிய 'ஒரு கல், ஒரு மரம், ஒரு மாடு' கதை மிகவும் சிறப்பாக இருந்தது.

— எம். ஏ. சுப்ரமணியன், முருகன்புதூர், கோபி.

* இரா. வசந்தராசன் அவர்கள் எழுதிய 'மாமா போட்ட புதிர்' என்ற கதையில் வரும் மாமாவைப் போல் எங்கள் மாமாவும் போட்டார்களானால், எங்களுக்கும் நிறையப் பரிசுகள் கிடைக்கும்.

— செ. குமார் (9102), மயிலாடுதுறை.

* ஸ்ரீதத்தனின் வீரம், தீரச் செயல்கள் எல்லாம் என்னை மகிழ்ச்சியில் தத்தளிக்க வைத்தன!

— கிருபா, குத்தாலம்.

* பூதலூர் முத்து அவர்களின் 'வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்' தொடர் கதை விறுவிறுப்பாகவும், படிக்கப் படிக்க எங்களுக்குச் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது.

— அ. அன்பரசன் (21,907), வெங்கடசமுத்திரம்.

* 'வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்' அடுத்த இதழ் எப்போது வரும் வரும் என்று ஏங்க வைக்கிறது?

— ஆறு. அண்ணாதுரை, (10,403), மஞ்சை, மகாதானபுரம்.

* 'நேரு தந்த பொம்மை' பாடல் மிக அருமை.

— கே. மா. சரவணன், காரிமங்கலம்.

* தஞ்சை மாலாவின் தீபாவளிக் கார்ட்டூன்கள் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தன.

— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை.

* 'விஷமக்காரனின் தலை'யைத் தமிழிலே தந்த கோகுலத்திற்கு நன்றி.

— எஸ். ஜெகதீசன் (21,293) சமுதி.

* சியோல் ஒலிம்பிக் பற்றிய முழு விவரங்களையும் தெளிவாக, சிறப்பாகத் தந்த ஜானகி மணாளன் அவர்களுக்கு நன்றி.

— புதுவை ராஜமுனி, புதுச்சேரி — 12.

* மின்மினிக் கதைகள் மூன்றும் முக்கனிகள் போல இனித்தன. பீர்பலைப் பற்றிய இந்தக் கதைகளைப் படித்தவுடன், அந்தப் புத்தகத்தை (பீர்பல் கதைகள்) வாங்கிக் கதைகள் முழுவதையும் படிக்க வேண்டும் போல் இருந்தது.

— ஆ. புகாரி, தக்கோலம்.

சோமன் ஏன் ஓடினான்?

எஸ். விஜயா சீனிவாசன்

சோமன் கண் விழித்துப் பார்த்தான். விடிந்து வெகு நேரமாகி விட்டது. எழுந்தான். கந்தல் பாயைக் காலால் உதைத்துத் தள்ளி விட்டு வீதிக் குழாயடியில் பல் தேய்த்து முகம் கழுவிக் கொண்டு திரும்பினான். அவன் கண்கள் சோர்ந்திருந்தது. கையில் இருந்ததோ எட்டணாத் தான்.

''கடவுளே, இந்த எட்டணாவிலே என்ன வாங்கித் தின்ன முடியும்?' என்று வெறுத்தவனாக சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

'ஒரு பொறையும், டீயும் வாங்கி தின்னுட்டு எங்கேயாவது கூலி வேலை கெடைக்குதா பாக்கலாம்' என்றபடி நாயர் கடையை நோக்கி விரைந்தான்.

வழியில் பிச்சைக்காரன் ஒருவன் எதிர்பட்டான். ''ஐயா! தரும துரை, ஏதாவது போடுங்க சாமி'' கெஞ்சினான்.

சோமன் கோபத்துடன், 'யோவ், நானா தர்மதுரை? போய்யா. இன்னும் கொஞ்ச நாள் போனால், உன் பிழைப்புக்கே போட்டியா வந்துடுவேன். என் நிலைமை அப்படி. விடுய்யா ஆளை.''

''அய்யா, அப்படிச் சொல்லாதீங்க. இரண்டு நாளாப் பட்டினி. கண்ணை இருட்டிக்கிட்டு மயக்கமா இருக்கு. ஒரு பத்துப் பைசா தாங்க.''

''யோவ், நானும்தாய்யா பட்டினி.''

''ஐயா, நான் ஒரு தப்பு பண்ணிட்டேன். பாழாய்ப் போன ஆசையால் ஒரு லாட்டரிச் சீட்டு ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிட்டேன். இதோ பாருங்க''. தன் அழுக்குப் பையிலிருந்து ஒரு லாட்டரிச் சீட்டை எடுத்துக் காண்பித்தான். ''இந்தா தொரை, இதை வச்சிக்கிட்டு ஒரு ரூபாய் கொடு சாமி.''

''ஆளை விட மாட்டியா? எங்கிட்ட இருக்கிறதே எட்டணாத்தான். அது தான் இப்ப என் வயித்துப் பசியை பாதி போக்கப் போவுது. நாளைக்கு உன்னை மாதிரி வந்துடுவேன்.''

''சாமீ! நல்லா இருப்பே. எட்டணா போதும். கொடு சாமி. உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்.'' பிச்சைக்காரனின் துடிப்பைக் கண்டு பரிதாபப்பட்ட சோமன் லாட்டரிச் சீட்டைப் பெற்றுக் கொண்டு எட்டணா நாணயத்தைப் பிச்சைக்காரனிடம் வீசிவிட்டு வேகமாக நடந்தான். இனி என்ன செய்வது? பஸ் ஸ்டாண்டில் ஏதாவது மூட்டை சுமக்க வேண்டியதுதான்.

ஒரு வாரம் ஓடிவிட்டது. ஒரு வாரமும் ஏதோ கணிசமான தொகை கூலி வேலையில் கிடைத்தது.

டீ குடிக்க நாயர் கடையை நோக்கி நடந்தான். நாயர் கடையில் டீ உறிஞ்சியபடி அன்றைய பேப்பரில் கண்களை ஓடவிட்டவன் அதிர்ந்தான். ஒரு வாரமாக மனப்பாடமே செய்து வைத்திருந்த அந்த லாட்டரிச் சீட்டின் நம்பருக்கு முதல் பரிசு ஒரு லட்சம்! பாதி டீயை வைத்துவிட்டு வீட்டிற்கு ஓடினான் சோமன். சீட்டை எடுத்துப் பார்த்தான். அவன் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. 'கடவுள் கண் திறந்து விட்டார்.' பணத்தை எப்படிப் பெறுவது? உடனே ஊருக்கு உதவி செய்யும் நாட்டாண்மைக்காரரின் நினைவு வந்தது. அவரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று எண்ணியவனாய் லாட்டரிச் சீட்டை ஒரு கவருக்குள் வைத்து அதைப் பையில் போட்டுக் கொண்டு கிளம்பினான்.


அவன் எண்ணங்கள் அவனுக்கு முன் கிளம்பி விட்டன. 'இந்தப் பணம் கிடைத்தால் அந்தப் பிச்சைக்காரனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும்.



பத்தாயிரம் கொடுத்துவிட வேண்டும். பாவம், அவனும் பிழைத்துப் போகட்டும். சிறிது தூரம் நடந்த போது அவன் உள்ளத்தில் ஓர் உறுத்தல். பிச்சைக்காரப் பயலுக்குப் பத்தாயிரம் ரூபாய் எதற்கு? தொலைத்து விடுவான். ஆயிரம் ரூபாய் போதும். அதுதான் சரி. சிறிது தூரம் அவன் எண்ணம் ஆயிரம் ரூபாயிலேயே தவழ்ந்தது. திடீரென்று ஆயிரம் ஐந்நூறாயிற்று. ஐந்நூறு நூறான சமயம் நன்றாகவே சிந்திக்க ஆரம்பித்தான் சோமன். இந்தப் பிச்சைக்காரனுக்கு ஏன் பணம் கொடுக்க வேண்டும்? அப்புறம் ஒரு லட்சத்துக்கும் உரிமை கொண்டாடுவான். சே, அவனுக்குப் பணம் தரக்கூடாது. பரிசு விழுந்த விஷயமே அவனுக்குத் தெரிய வேண்டாம்.' சிந்தனையிலேயே விரைந்தான்., உச்சி வெயில், ஆகையால் அவன் உடம்பில் வியர்வை ஆறாக ஓடியது. சட்டைப் பையிலிருந்த கைக்குட்டை என்ற பெயரில் இருந்த அழுக்குத் துணியால் முகத்தைத் துடைத்துக் கொண்ட போது பின்புறமிருந்து 'ஐயா!' என்ற குரல்கேட்டுத்திரும்பினான், சோமன். பின்னால் அந்தப் பிச்சைக்காரன் வேகமாக வந்து கொண்டிருந்தான். சோமன் பேயறைந்தவனாகத் திரும்பினான். 'இந்தப் படுபாவிக்குப் பரிசு விழுந்தது தெரிந்திருக்குமோ? இவனிடம் மாட்டிக் கொள்ளாமல் ஓடணும்' என்று முணுமுணுத்தபடி ஓட ஆரம்பித்தான். பின்னால் பிச்சைக்காரன் ஏதோ குரல் கொடுத்தான். 'சாமியோவ் என்று கூக்குரலிட்டுப் பார்த்தான். சோமன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் கலந்துக் கொண்டவனைப் போலக் குதிகால் பிடரியில் பட ஓடினான்.

பிச்சைக்காரன் நின்றான். "இந்த ஆளு பையிலிருந்து ஏதோ கடுதாசி விழுந்திடிச்சேன்னு சொல்லப் பார்த்தால் இவன் 'கேனன்' மாதிரி ஓடறானே" என்று கூறி அந்தக் கவரின் அருகிலே சென்றான். அதற்குள் அது காற்றிலே பறந்து பறந்து அருகில் இருந்த சாக்கடையில் விழுந்து சோமன் ஓடுவதைப் போலவே சாக்கடை நீரில் ஓடியது.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்:
வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால்: ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.



பாரிஸ் மிட்டாய்கள் மற்றும் பிஸ்கட்கள் அனைவரும் விரும்புவது.


இனிய
நேரங்கள்
மனதிலே
பதிந்து
இனிப்புடன்
கலந்திட...
nutrine
Chocolate
Eclairs
...நியூட்ரின்
சாக்லேட்
எக்லேர்ஸ்
நியூட்ரின்
இன்சுவை இயற்கையிலேயே!
பாலும், வெண்ணெயும், சாக்லேட்டும்
திரண்டு அளிக்கும் அருஞ்சுவை
பேரின்பம்
நியூட்ரின்
— இந்தியாவில் மிக அதிகமாக
விற்பனையாகும் மிட்டாய்கள்
nutrine
Chocolate
Eclairs
nutrine